இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 225 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – பங்குனி 13 – செவ்வாய்க்கிழமை 26 மார்ச் 2024 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 225 : Thiruvalluvar Year - 2055 - Panguni 13 - Tuesday 26 March 2024 - Chennai 16 Pages ₹ 5.00

## தமிழ்நாட்டுக்கான பேரிடர் நிவாரண நிதியைத் தர மறுக்கும்

# ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்கு!

## நெல்லை மாவட்டம், நாங்குநேரியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சியுரை!

**நாங்குநேரி, மார்ச்.26–**

**நெல்லை மாவட்டம், நாங்குநேரியில் நேற்று (25.3.2024) மாலை நடைபெற்ற தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு, திருநெல்வேலி மக்களவைத் தொகுதி – ராபர்ட் புரூஸ், கன்னியாகுமரி மக்களவைத் தொகுதி – விஜய் வசந்த், விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் – தாரகை கத்பெர்ட் ஆகிய இந்தியா கூட்டணி வெற்றி வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாக்கு கேட்டு எழுச்சியுரை ஆற்றுகையில் “தமிழ்நாட்டுக்கான பேரிடர் நிவாரண நிதியைத் தர மறுக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடரவுள்ளோம்”! எனக் குறிப்பிட்டார்.**

முதல்வர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

கன்னியாகுமரி நாடாளுமன்றத் தொகுதியின் வேட்பாளராக இங்கு இருக்கும் தம்பி விஜய் வசந்த் பற்றி சொல்ல வேண்டும் என்றால், எனக்கு வரும் ரிப்போர்ட்களில், ”கன்னியாகுமரி எம்.பி. – விஜய் மிகவும் நன்றாகச் செயல்படுகிறார். தொகுதி மக்களுக்காகக் கடுமையாக உழைக்கிறார் – என்று சொல்கிறார்கள்!

### வாரி வழங்கும் வள்ளல்குணம் கொண்ட வசந்தகுமாரின் புதல்வர்!

அப்போது என் மனதில் என்ன தோன்றுமென்றால், தம்பி விஜய் வசந்துக்கு உழைக்கச் சொல்லித் தர வேண்டுமா? யாருடைய மகன் உழைப்பால் உயர்ந்து, இங்கிருக்கும் நாங்குநேரி மக்களுக்காகச் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றி, இதே கன்னியாகுமரி மக்களால் தங்களின் நாடாளுமன்றப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தன்னுடைய வாரி வழங்கும் குணத்தால் இன்றைக்கும் நம் நெஞ்சங்களில் நிறைந்திருக்கும் வசந்தகுமார் அவர்களின் மகன் அல்லவா! உங்களுக்காக உழைக்க அவர் கன்னியாகுமரியில் மீண்டும் களம் காண்கிறார். கடந்த தேர்தலைவிட இன்னும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் அவரை வெற்றி பெற வைக்க வேண்டும்.

### திருச்சபை மூலம் சமூகத் தொண்டாற்றும் ராபர்ட் புரூஸ்!

திருநெல்வேலியில் போட்டியிடும் வழக்கறிஞர் ராபர்ட் புரூஸ் மாவட்டக் காங்கிரஸ் தலைவராக மட்டுமல்ல, பக்கத்து மாநிலங்களுக்கும் சென்று காங்கிரஸ் கட்சியை வளர்த்த பெருமைக்குரியவர். தென்னிந்தியத் திருச்சபை மூலமாகச் சமூகத் தொண்டும் ஆற்றி வருபவர். இவர்களுக்கு நீங்கள் அளிக்கும் வாக்கு என்பது உங்கள் தொகுதிக்கான எம்.பி. யைத் தேர்வு செய்வதற்காக மட்டுமல்ல.

நீங்கள் அளிக்கும் வாக்குதான் இந்தியாவின் அடுத்த பிரதமராக ஒரு ஜனநாயகவாதி வருவதை உறுதிசெய்யப் போகிறது! உங்கள் வாக்குதான் மனிதநேயமிக்க ஒருவரைப் பிரதமர் பொறுப்பில் உட்கார வைக்கப் போகிறது!



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.3.2024) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரியில் நடைபெற்ற இந்தியா கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் கன்னியாகுமரி நாடாளுமன்றத் தொகுதியின் வேட்பாளர் விஜய் வசந்த் அவர்களையும், திருநெல்வேலியில் போட்டியிடும் வழக்கறிஞர் ராபர்ட் புரூஸ் அவர்களையும், விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் தாரகை கத்பெர்ட் அவர்களையும் அறிமுகப்படுத்தி இந்தியா கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில் அமைச்சர் பெருமக்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, மனோ தங்கராஜ், தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், நாடாளுமன்ற உறுப்பினர் ஞானதிரவியம், சட்டமன்ற உறுப்பினர்கள் அப்துல் வகாப், ரூபி மனோகரன், பிரின்ஸ், ராஜேஷ் குமார், மாவட்ட கழகச் செயலாளர்கள் ஆவுடையப்பன், மைதீன்கான், மகேஷ், ஜெயபாலன் மற்றும் இந்தியா கூட்டணி நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

தமிழ்நாட்டை மதிக்கும், தமிழர்களை வெறுக்காத ஒருவர் பிரதமர் ஆக வேண்டும் என்றால், அது உங்கள் ‘கை’யில்தான் இருக்கிறது. அதற்கு, பிரதமர் நரேந்திர மோடியைத் தோற்கடித்தாக வேண்டும். மீண்டும் மோடி ஆட்சிக்கு வந்தால், அமைதியான இந்தியா – அமளியான இந்தியாவாக மாறிவிடும்.

அதற்கு சமீபத்திய உதாரணம், மணிப்பூர் மாநிலத்தில் நடந்த கலவரம். அந்த மாநில மக்கள், என்னென்ன கஷ்டப்பட்டார்கள்! சொந்த நாட்டிலேயே அகதிகள் மாதிரி வாழ்ந்தார்கள்! நம்முடைய எம்.பி.–க்கள் குழு சென்று பார்த்த போது, தாய்மார்கள் கதறினார்களே அதையெல்லாம் மறக்க முடியுமா?

> **தமிழ்நாட்டுக்கு என்று ஒரு சிறப்புத் திட்டத்தின் பெயரைக்கூடச் சொல்ல முடியாமல், பத்தாண்டுகளாக எதைச் சாதித்தீர்கள்? ஆனால், எங்கள் வரிப் பணத்தில் ஒரு ரூபாய் கொடுத்தால் 29 பைசாதான் திரும்பி வருகிறது! அதைக் கேட்கிறோமே, அதற்காவது பதில் வைத்திருக்கிறீர்களா? இல்லை அதற்கும் வாயாலே வடை சுடுவீர்களா?**

அதனால்தான் அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறேன், பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால் – ஒருதாய் மக்களாக ஒற்றுமையாக வாழும் இந்தியாவை, வெறுப்பு விதைகளைத் தூவி நாசம் செய்துவிடுவார்கள்! அதை மனதில் வைத்து, அமைதியான – வளர்ச்சியை நோக்கிய இந்தியாவுக்காக நீங்கள் வாக்களிக்க வேண்டும் என்று கேட்கத்தான் நான் வந்திருக்கிறேன்.

### இரண்டு இயற்கைப் பேரிடர்கள்! ஒரு பைசா கூட தராத பிரதமர்!

சில நாட்களுக்கு முன்னால், குமரிக்கும் – திருநெல்வேலிக்கும் பிரதமர் நரேந்திர மோடி வந்திருந்தார். தேர்தல் வந்துவிட்டது என்று இப்போது அடிக்கடி வரும் பிரதமர் மோடி அவர்களே

வெள்ளம் வந்தபோது எங்கு இருந்தீர்கள் இரண்டு இயற்கைப் பேரிடர்! அடுத்தடுத்து தமிழ்நாட்டின் வட மாவட்டங்களையும் – தென் மாவட்டங்களையும் தாக்கியது. பிரதமர் மோடி அவர்களே ஒரு பைசாவாவது கொடுத்தீர்களா? இல்லையே! நிதிதான் தரவில்லை ஓட்டு கேட்டு வந்தபோது மக்களுக்கு ஆறுதல் வார்த்தையாவது கூறினீர்களா? ஒன்றிய அரசிடமிருந்து நிதி வரவில்லை என்றாலும், மக்களுக்குச் செய்ய வேண்டியதை – தர வேண்டியதை – உதவ வேண்டியதை – உடனடியாக கொடுக்க வேண்டும் என்று நாங்கள் செயல்பட்டோம்.

### அமைச்சர்கள் குழு ஓடோடி வந்து ஆறுதல் கூறி – நிவாரணம் வழங்கியது!

அமைச்சர் பெருமக்கள் – கே.என்.நேரு, ஐ.பெரியசாமி, எ.வ.வேலு, கே.கே.எஸ்.எஸ்.ஆர்., தங்கம் தென்னரசு, ராஜகண்ணப்பன்,

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

---

டெல்லி பல்கலைக்கழக மாணவர் சங்கத் தேர்தலில் இடது முன்னணியினர் பெற்ற வெற்றி

## பாசிச சக்திகளின் வீழ்ச்சிக்கு கட்டியம் கூறுவதாகும்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

**சென்னை, மார்ச் 26-**

**டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழக மாணவர் சங்கத் தேர்தலில் இடது முன்னணியினர் பெற்ற வெற்றி, பாசிச சக்திகளின் வெற்றிக்கு கட்டியம் கூறுவதாக உள்ளது என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள் ளார்.**

இதுகுறித்து திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**டெல்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர் சங்கத் தேர்தலில் மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ள இடது முன்னணியினருக்கு எனது வாழ்த்துகள்.**

**ஏ.பி.வி.பி அமைப்பினரின் வன்முறை வழிமுறைகளும், கடைசி நிமிடத்தில் இடது வேட்பாளர் ஸ்வாதி சிங் அவர்களின் வேட்புமனுவை நிராகரித்ததும் அவர்களின் தோல்வி பயத்தை அம்பலப்படுத்திவிட்டது. இத்தனை வெட்கக்கேடான செயல்களில் அவர்கள் ஈடுபட்டாலும், JNU மாணவர்கள் தங்களது முற்போக்கு செறிந்த மரபை எப்போதும் போல நிரூபித்து விட்டனர்.**

**வலதுசாரி பாசிச சக்திகளின் வீழ்ச்சிக்குக் கட்டியம் கூறுவதாக இந்த வெற்றி அமைந்துள்ளது. வரும் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் இந்திய மக்கள் ஒன்றுசேர்ந்து பா.ஜ.க.வை வீழ்த்துவார்கள்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

கனிமொழி கருணாநிதி - நவாஸ்கனி ஆகியோரை ஆதரித்து

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இன்று தேர்தல் பிரச்சாரம்!

### எட்டையபுரம் - மதுரை நான்கு வழிச்சாலை சிந்தலக்கரை மைதானத்தில் நடைபெறுகிறது!

தூத்துக்குடி, மார்ச் 26-

‘இந்தியா’ கூட்டணி சார்பில் தூத்துக்குடி, இராமநாதபுரம் நாடாளுமன்றத் தொகுதிகளில் போட்டியிடும் கனிமொழி கருணாநிதி, நவாஸ்கனி ஆகியோரை ஆதரித்து தி.மு.கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் மாபெரும் தேர்தல் பிரச்சாரம் செய்கிறார். எனவே அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்று தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கீதாஜீவன் அழைப்பு விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

நடைபெற இருக்கின்ற 2024 நாடாளுமன்றத் தேர்தலில் ‘இந்தியா’ கூட்டணி சார்பில் தூத்துக்குடி நாடாளு மன்றத் தொகுதியில் தி.மு.க. வேட்பாளராக கனிமொழி கருணாநிதி அவர்கள் உதயசூரியன் சின்னத்திலும், இராமநாதபுரம் நாடாளுமன்றத் தொகுதியில் இந்திய யூனியன் முஸ்லீம்லீக் சார்பில் நவாஸ்கனி அவர்கள் ஏணி சின்னத்தி லும் போட்டியிடுகிறார்கள்.

இவர்களை ஆதரித்து தி.மு.கழக தலைவரும் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (26.03.2024 - செவ்வாய்க் கிழமை) மாலை 4.30 மணி அளவில் எட்டையபுரம் மதுரை நான்கு வழிச்சாலையில் அமைந்துள்ள சிந்தலக்கரை கலைஞர் மைதானத்தில் நடைபெறும் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் சிறப்புரையாற்றுகிறார்.

இந்த தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்திற்கு தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று பெருந்திரளாகக் கலந்து கொள்ள அழைக்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 26-03-2024

# தோல்வி பயத்தில் தப்பாட்டம்!

**400** இடங்களைக் கைப்பற்றுவோம், 370 தொகுதிகளில் வெற்றி பெறுவோம் என்று பம்மாத்து காட்டும் பா.ஜ.க.வுக்கு உண்மையில் 160க்கும் குறைவான இடங்கள் தான் கிடைக்கும் என்று மத்திய உளவுத்துறை அறிக்கை கொடுத்துள்ளதாக தகவல்கள் கூறுகின்றன. அதை விட முக்கியமாக பா.ஜ.க.வின் கோட்டை என்று சொல்லப்படும் மாநிலங்களில் அறிவிக்கப்பட்ட பா.ஜ.க. வேட்பாளர்கள் பின்னங்கால் பிடறியில் அடிபட தப்பித்து ஓடிக் கொண்டு இருக்கிறார்கள். குஜராத், உ.பி. போன்ற மாநிலங்களிலேயே பா.ஜ.க. வேட்பாளர்கள் போட்டியில் இருந்து விலகிக் கொண்டு இருக்கிறார்கள். வடகிழக்கு மாநிலங்கள் சிலவற்றில் போட்டியில் இருந்து பா.ஜ.க.வே விலகிவிட்டது.

'தென் மாநிலங்களில் வெற்றி பெற முடியாது - வட மாநிலங்களில் வெற்றி பெற்றுவிடுவோம்' என்று சொல்லி வந்தார்கள் சில வாரங்களுக்கு முன்பு வரை. இப்போது, வட மாநிலங்களின் நிலவரமும் கலவரமாக இருக்கிறது பா.ஜ.க.வுக்கு.

**இதனால் ஏற்பட்ட ஆத்திரமும் கோபமும் கண்ணை மறைக்கிறது பா.ஜ.க. ஆட்சியாளர்களுக்கு. தோல்வி பயத்தில் எதைச் செய்வது, எதைச் செய்யக் கூடாது என்பதே தெரியாமல் மூர்க்கத்தனமான சர்வாதிகார நடவடிக்கைகளைச் செய்து வருகிறார்கள்.** டெல்லி முதலமைச்சர் அரவிந்த கெஜ்ரிவால் அவர்களைக் கைது செய்திருப்பது அத்தகைய நடவடிக்கைதான்.

அரசியல் பழிவாங்கும் எண்ணத்துடன் டெல்லி துணை முதல்வர் மணீஷ் சிசோடியா கைது செய்யப்பட்டு 13 மாதங்களாகச் சிறையில் இருக்கிறார். ஜார்க்கண்ட் மாநில முதலமைச்சர் ஹேமந்த் சோரன் கைது செய்யப்பட்டுள்ளார். தெலுங்கானா மாநில முன்னாள் முதலமைச்சர் சந்திரசேகர ராவ் அவர்களின் மகள் கவிதா சில நாட்களுக்கு முன்னாள் கைது செய்யப்பட்டுள்ளார். இதன் தொடர்ச்சியாக டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலையும் கைது செய்துள்ளார்கள். இது அப்பட்டமான பழிவாங்கும் நடவடிக்கையே.

இந்தியா முழுமைக்கும் நாடாளுமன்றத் தேர்தல் களம் சூடாகி வருகிறது. பிரதமர் நரேந்திரமோடி மீதான மக்களின் கோபம் நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. தேர்தல் பத்திரங்கள் என்ற பெயரால் மாபெரும் முறைகேடுகளில் இறங்கி உச்சநீதிமன்றத்தால் குற்றவாளி கூண்டில் நிறுத்தப்பட்டுள்ளது பா.ஜ.க. **'தேர்தல் பத்திரங்கள் தொடர்பான அனைத்து விபரங்களையும் தேர்தல் ஆணையத்திடம் ஒப்படையுங்கள்' என்று பாரத ஸ்டேட் வங்கிக்கு கடுமையான உத்தரவைப் போட்ட பிறகும் அவர்களைச் செயல்பட விடாமல் தடுத்து வந்தது பா.ஜ.க. அரசு. இறுதி வரை உச்சநீதிமன்றம் தனது பிடியை இறுக்கமாக வைத்திருந்த நிலையில் அனைத்து விபரங்களையும் பாரத் ஸ்டேட் வங்கி வழங்கிவிட்டது. இந்த விபரங்கள் முழுமையாக வெளியானால் பா.ஜ.க.வின் முகத்திரை கிழியும் என்பதால் அதைத் திசை திருப்புவதற்காக டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலை கைது செய்துள்ளார்கள்.**

பா.ஜ.க.வின் யோக்கியதையை ஆம் ஆத்மி கட்சி அம்பலப்படுத்தி இருக்கிறது.

**"மதுபான வழக்கு குற்றவாளியிடம் இருந்து ரூ.55 கோடி நன்கொடை பெற்ற பா.ஜ.க. தலைவர் நட்டாவை அமலாக்கத்துறை கைது செய்ய வேண்டும்"** என்று கோரிக்கை வைத்துள்ளது ஆம் ஆத்மி கட்சி.

**"மதுபான முறைகேடு புகாரில் கைது செய்யப்பட்ட அரவிந்தோ ஃபார்மா இயக்குனரிடம் பா.ஜ.க. ரூ.55 கோடி தேர்தல் நன்கொடை பத்திரத்தைப் பெற்றுள்ளது. ரூ.55 கோடிக்கு பா.ஜ.க.வுக்கு தேர்தல் பத்திரம் வழங்கிய பின்னர் அரவிந்தோ ஃபார்மா இயக்குனர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டிருக்கிறார். மதுபான வழக்கு குற்றவாளியிடம் இருந்து ரூ.55 கோடி நன்கொடை பெற்றது குறித்து பிரதமர் மோடியும், பா.ஜ.க. தலைவர் நட்டாவும் விளக்கம் அளிக்க வேண்டும். இது குறித்து அமலாக்கத்துறையும் விளக்கம் அளிக்க வேண்டும்"** - என்று ஆம் ஆத்மி கட்சி கோரிக்கை வைத்துள்ளது. இதைப் பற்றி இது வரை பிரதமரோ, உள்துறை அமைச்சரோ வாய் திறக்கவில்லை.

தனக்கு எதிராக 'இந்தியா' என்ற வலிமையான கூட்டணியை எதிர்க் கட்சிகள் அனைத்தும் சேர்ந்து அமைத்தது முதல் நிலை கொள்ளாமல் தவறுகளுக்கு மேல் தவறுகளைச் செய்து வருகிறது பா.ஜ.க. தலைமை. இது போன்ற கைதுகள், அரட்டல், மிரட்டல்கள் அனைத்தும் 'இந்தியா' கூட்டணியை வலிமையாக ஆக்கியதே தவிர பலவீனப்படுத்தவில்லை. அரைக்க அரைக்க சந்தனம் மணப்பதைப் போல, தாக்குதல் அதிகமாக அதிகமாக கூட்டணியும், கூட்டணித் தலைவர்களும் வலிமை அடைகிறார்கள். இதைத்தான் இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் பார்க்கிறோம்.

சி.பி.ஐ., அமலாக்கத்துறை உள்ளிட்ட விசாரணை அமைப்புகளை தவறாக பயன்படுத்தும் பா.ஜ.க.வை கண்டித்து மார்ச் 31 ஆம் தேதி 'இந்தியா' கூட்டணி சார்பாக டெல்லியில் போராட்டம் நடைபெற இருக்கிறது. சி.பி.ஐ., அமலாக்கத்துறை உள்ளிட்ட விசாரணை அமைப்புகளை தேர்தல் ஆணையத்திடம் கட்டுப்பாட்டில் வைக்கவும் இக்கட்சிகள் வலியுறுத்தி இருக்கிறார்கள். அரவிந்த் கெஜ்ரிவால் கைது, நடுநிலையாளர்களை மட்டுமல்ல; பா.ஜ.க. ஆதரவாளர்களையும் சிந்திக்க வைத்துள்ளது. 'ஐயோ! இதனால் பா.ஜ.க.வுக்கு கெட்ட பெயர் ஏற்பட்டுள் ளதே' என்று பா.ஜ.க. ஆதரவாளர்களும் பதறத் தொடங்கி இருக்கிறார்கள்.

தேர்தலை மக்கள் மன்றத்தில் எதிர்கொள்ள முடியாமல் அமலாக்கத் துறை, சி.பி.ஐ., வருமானவரித்துறை போன்ற புலனாய்வு அமைப்புகளின் மூலமாக எதிர்கொள்வது கோழைத்தனம் ஆகும். இவை அரசியலில் இரு பக்கமும் பாயும் ஆயுதங்கள் என்பதை யாரும் மறந்து விட வேண்டாம்.

**டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலை கைது செய்வதன் மூலமாக 'இந்தியா' கூட்டணித் தலைவர்களை மிரட்டிப் பார்க்க நினைத்தால் பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் ஏமாந்து போவார்கள். நாடு முழுவதும் நடக்கும் அனைத்து அசைவுகளையும் மக்கள் உன்னிப்**பாக கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அடக்குமுறை மூலமாக யாரும் வென்றதாக வரலாறும் இல்லை. ஆணவக்காரர்களின் ஆட்டத்தை மக்கள் அனுமதித்ததும் இல்லை.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (25.3.2024) அவரது இல்லத்தில், காங்கிரஸ் கட்சியின் சார்பில் மக்களவைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் சசிகாந்த் செந்தில், செல்வி எஸ். ஜோதிமணி, எம்.கே. விஷ்ணு பிரசாத் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு. செல்வப்பெருந்தகை, முன்னாள் மாநிலத் தலைவர் கே.வி. தங்கபாலு மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

### ஆலையைத் திறக்க நிர்வாகம் உச்சநீதிமன்றத்தில் முயற்சித்தபோது–மக்களின் பக்கம் நின்று

# ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடியவர் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## தூத்துக்குடி தேர்தல் பிரச்சாரத்தில் கனிமொழி கருணாநிதி பேச்சு!

தூத்துக்குடி, மார்ச் 26 -

தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதியில் 'இந்தியா' கூட்டணி வேட்பாளரும், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளருமான கனிமொழி கருணாநிதி நேற்று முன்தினம் (24.3.2024) தூத்துக்குடி கலைஞர் அரங்கம் முன்பு உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் கருணாநிதியின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து பிரச்சாரத்தைத் தொடங்கினார்.

தேர்தல் பிரச்சாரத்தில் கனிமொழி கருணாநிதி பேசியதாவது:-

தூத்துக்குடி என்பது எனக்கு இரண்டாவது தாய் வீடாக உணரக்கூடிய வகையில் உள்ளது. நாடும் நமது, நாற்பதும் நமது என்ற வகையில் நாம் பணியாற்ற வேண்டும் எனவும் தமிழகத்தை தொடர்ந்து வஞ்சித்துக் கொண்டு தமிழகத்துக்கு வர வேண்டிய நிதியையும், ஏன் வெள்ள நிவாரணம் கூட தராமல் வஞ்சித்துக் கொண்டிருக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசை வீட்டுக்கு அனுப்ப வேண்டும். பிரதமர் மோடி தற்போது அடிக்கடி தமிழகத்துக்கு வரு கிறார் வெள்ளம் பாதித்த நேரங்கள் கூட வராத பிரதமர் தற்போது வருகிறார் வந்து தி.மு.க.வை அழித்து விடுவதாக பேசி வருகிறார். தி.மு.க.வை யாராலும் அழிக்க முடியாது, அழித்து விடுவேன் என சொன்னவர்கள்தான் காணாமல் போய் உள்ளனர்.

**மக்களை ஏமாற்றும் ஒன்றிய பா.ஜ.க. அரசு!**

தி.மு.க. ஆட்சி மூலம் இந்த நாட்டுக்கு முன் உதாரணமாகத் திகழ்ந்து வருகிறது. அதனால்தான் தற்போதைய இந்த தேர்தல் அறிக்கையில் கூட மகளிர் உரிமைத் தொகையை நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படும் எனவும் அதுபோல் காலை உணவுத் திட்டத்தையும் நாடு முழுவதும் அமல் செய்வோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் பெட்ரோல் விலை டீசல் விலை மற்றும் கேஸ் விலை ஏற்றி மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நமது இந்தியா கூட்டணி அரசு வரும் போது பெட்ரோல் விலை ரூபாய் 75, டீசல் விலை ரூபாய் 65, அதுபோல் காஸ் சிலிண்டர் விலை 500 ஆக அனைத்தும் குறைக்கப்படும். மக்களை விலைவாசியிலிருந்து காப்பாற்றும் அரசாக அந்த அரசு செயல்படும்.

மக்களுக்கு எந்தவித நிதி உதவியும் செய்யாமல் அதே போல ஒரு பைசா கூட வழங்காமல் தமிழ்நாட்டிலிருந்து வரி வசூல் பண்ணி அங்கே இருக்கக்கூடிய ஒன்றிய அரசுக்கு நாம் ஒரு ரூபாய் கொடுத்தால், அவர்கள் நமக்குத் திருப்பி கொடுப்பது 26 பைசா, ஆனால் உத்தரப் பிரதேசத்திலிருந்து 1 ரூபாய் வரி



கொடுத்தால் 2 ரூபாய் 2 பைசா. எந்த அளவுக்கு அவர்கள் தமிழகத்தை, தமிழ் மக்களை ஏமாற்றுகிறார்கள் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அதேபோல ஒன்றிய பா.ஜ.க. கொண்டு வந்த சட்டத்திற்கு டெல்லியில் ஆதரவு கொடுத்தது அ.தி.மு.க. நாங்கள் இப்போது பிரிந்து நிற்கிறோம் என்றால் நம்பாதீர்கள். இரண்டு ஸ்டிக்கரும் மீண்டும் இணைந்து கொள்ளும். இங்கே இருக்கும் பெண்களின் உயர்கல்விக்காகப் புதுமைப்பெண் திட்டத்தில் மாதம் 1000 ரூபாய் வழங்கி வருகிறோம்.

**பா.ஜ.க. விரட்டி அடிக்கப்பட வேண்டும்!**

ஸ்டெர்லைட் ஆலையை மூடக்கோரி போராட்டத்தில் 13 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்த ஆலையை மீண்டும் திறக்க வேண்டுமென்ற போது, முதலமைச்சர் மக்கள் பக்கம் நின்று ஆலையை மூட நடவடிக்கை எடுத்தார். வரக்கூடிய இந்த தேர்தலிலே தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்தியாவிலிருந்தே பா.ஜ.க. விரட்டியடிக்கப்பட வேண்டும். இந்தியா கூட்டணி இங்கு ஆட்சி அமைக்க வேண்டும்.

நம்முடைய இளைஞர்கள் கல்விக்காக வாங்கி இருக்கக் கூடிய கடன் ரத்து செய்யப்படும். அதுமட்டுமில்லாமல் நீங்க வெளியூர் போகும்போது ஒவ்வோர் இடத்திலும் சுங்கச்சாவடியில் நிறுத்தி காசு வாங்குகிறார்கள். அந்த சுங்கச்சாவடியில் வாங்கக்கூடிய காசு எல்லாம் நிறுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுடைய பொன்னான வாக்குகளை உதயசூரியன் சின்னத்தில் அளித்து மீண்டும் உங்களோடு பணியாற்றக் கூடிய வாய்ப்பை நீங்கள் எனக்கு அளிக்க வேண்டும் என்று உங்களையெல்லாம் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

**அம்பானி, அதானிக்காக பாடுபடும் மோடி!**

இவர்கள் அரசியலால் மணிப்பூரில் எத்தனை பெண்கள் பாதிக்கப்பட்டனர், அதனை நான் கண் கூடாகப் பார்த்தேன். நான் பலமுறை தூத்துக்குடி விமானநிலையத்தில் சர்வதேச விமான நிலையமாக்க கோரிக்கை வைத்தேன், மறுக்கப்பட்டது. ஆனால், அம்பானி வீட்டில் கல்யாணம் ஒரு சின்ன விமான நிலையத்தை, பத்து நாட்களில் பன்னாட்டு விமான நிலையமாக மாற்றித் தருகிறார் பிரதமர் மோடி. அம்பானி, அதானி உத்தரவு போட்டால் அது நடக்கும், மக்கள் உதவி கேட்டால் நடக்காது. மக்களுக்காக பணியாற்றக்கூடிய இந்தியா கூட்டணி ஆட்சியில் அமர வேண்டும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி பேசினார்.

தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளரும், சமூக நலன் - மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான பெ.கீதா ஜீவன், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி மற்றும் 'இந்தியா' கூட்டணிக் கட்சியின் தலைவர்கள், நிர்வாகிகள், தொண்டர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கலைஞர் அரங்கம், மாரியம்மன் கோயில், TMC காலனி ஜங்ஷன், காசி நாடார் ஆயில் மில், ஆமெரிக்கன் ஆஸ்பத்திரி அருகில், உருண்டையம்மன் கோவில் அருகே, கருப்பட்டி சொசைட்டி, பூபால்ராயபுரம், திரேஸ்புரம் ஜங்ஷன், புது தெரு, மட்டக்கடை, 2ஆம் கேட் போஸ் திடல், தேரடி, பள்ளிவாசல், PPMT ஜங்ஷன், சுமங்கலி கல்யாண மண்டபம், பீங்கான் ஆபிஸ், பக்கில்புரம், KSPS தியேட்டர், சிதம்பர நகர், பிரையண்ட் நகர் 12வது தெரு, 3ஆம் மைல், பழைய பஸ் ஸ்டாண்டு, அண்ணாநகர் ஆகிய இடங்களில் கனிமொழி கருணாநிதி பிரச்சாரம் செய்தார்.

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட "இந்தியா" கூட்டணி செயல்வீரர்கள் கூட்டம்

# திருப்பெரும்புதூர் - காஞ்சிபுரம் (தனி) நாடாளுமன்றத் தொகுதியில் வேட்பாளர்கள் அறிமுக கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் இன்று நடைபெறுகிறது!

காஞ்புரம்,மார்ச்.26-

நாடாளுமன்றத் தேர்தல் பணிகள் தொடர்பாக காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட "இந்தியா" கூட்டணி கட்சிகளின் செயல்வீரர்கள் கூட்டம் மற்றும் திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிடும் "இந்தியா" கூட்டணியின் தி.மு.க. வேட்பாளர் டி.ஆர்.பாலு காஞ்சிபுரம் (தனி) நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிடும் "இந்தியா" கூட்டணியின் தி.மு.க. வேட்பாளர் க.செல்வம் ஆகிய 2 வேட்பாளர்களை அறிமுகப்படுத்தும் கூட்டம்,

இன்று 26.3.2024 செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணியளவில் வண்டலூர் வாலாஜாபாத் நெடுஞ்சாலையில் படப்பை கரசங்காலில் அமைந்துள்ள கலைஞர் திடலில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெறுகிறது.

குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன் அனைவரையும் தொடக்கத்தில் வரவேற்று பேசுகிறார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் அடங்கிய திருப்பெரும்புதூர், காஞ்சிபுரம் (தனி) நாடாளுமன்றத் தொகுதியில் உள்ளடக்கிய மாவட்ட காங்கிரஸ் தலைவர்கள் ஆர்.எஸ்.செந்தில்குமார், வண்டலூர் சுந்தரமூர்த்தி, கே.வி.திலகர், எஸ்.ஜெ.நிக்கோல்ஸ், மாவட்ட ம.தி.மு.க. செயலாளர்கள் சைதை சுப்பிரமணியன், மா.வை.மகேந்திரன், ஊனை பார்த்திபன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாவட்ட செயலாளர்கள் இரா.வேல்முருகன், ப.சு. பாரதி, சி.சங்கர், மாநில கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் இ.சங்கர், மாநிலக்குழு உறுப்பினர் இ.முத்துகுமார், இந்திய கம்யூனிஸ்ட் மாநிலக்குழு உறுப்பினர் எல்.மேகநாதன், மாவட்ட இந்திய கம்யூனிஸ்ட் செயலாளர்கள் ஏ.ராஜ்குமார், பா.கார்த்திக், இந்திய முஸ்லிம் லீக் மாவட்ட தலைவர்கள் பீர் முகம்மது, முகம்மது பேக், கே.எஸ்.தாவூத், அல்லாபக்ஸ், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்டச் செயலாளர்கள் ப.சாமுல்வேல் எபினேசர், திருநீர்மலை தமிழரசன், மேனகா தேவி கோமகன், சைதை மா.ஜேக்கப், கனல் விழி, தே.தென்னவன், மாவட்ட திராவிடர் இயக்க தமிழர் பேரவை செயலாளர் இ.இளமாறன், தமிழக வாழ்வுரிமை கட்சி மாவட்டச் செயலாளர்கள் தாம்பரம் பி.முருகன், எ.செல்லா, விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி மாநில துணைத்தலைவர் லட்சுமணன், மாவட்ட தலைவர் வி.சதாசிவம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கு.செல்வப்பெருந்தகை 2 வேட்பாளர்களையும் அறிமுகப்படுத்தி சிறப்புரையாற்றுகிறார்.

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம்,

ம.தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் மல்லை சத்தியா, விடுதலை சிறுத்தைகள் கட்சி துணைப் பொதுச்செயலாளர் திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி, மனிதநேய மக்கள் கட்சி துணை பொதுச் செயலாளர் எம்.யாக்கூப், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் க.பீம்ராவ், திருப்பெரும்புதூர் தொகுதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பொறுப்பாளர் எல்.மேகநாதன், மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், து.மூர்த்தி, தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, மாவட்ட தி.மு.க. பொருளாளர் வெ.விசுவநாதன், மற்றும் தி.மு.க காங்கிரஸ் ம.தி.மு.க. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் இந்திய கம்யூனிஸ்ட் விடுதலை சிறுத்தைகள் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மனிதநேய மக்கள் கட்சி திராவிடர் கழகம் மக்கள் நீதி மய்யம் ஆம் ஆத்மி தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி திராவிட இயக்க தமிழர் பேரவை மனிதநேய ஜனநாயக கட்சி இந்திய தேசிய லீக் உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் பகுதி ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், வாக்குச்சாவடி நிலைமுகவர்கள் தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கூட்டணி கட்சிகளின் செயல்வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் இந்த செயல்வீரர் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

முடிவில் ஒன்றியச் செயலாளர்கள் ந.கோபால், எஸ்.டி.கருணாநிதி, நகரச் செயலாளர்கள் எஸ்.ஜ[illegible], கோ.சத்தியமூர்த்தி, பேரூர் செயலாளர் ஆர்.சதீஷ்குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



சென்னை, ஆழ்வார்பேட்டையில் உள்ள மக்கள் நீதி மய்யம் அலுவலகத்தில் நேற்று (25.3.2024) இந்தியா கூட்டணி கட்சிகளின் ஒன்றான மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கலைஞானி கமல்ஹாசன் அவர்களை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் மத்திய சென்னை மற்றும் வடசென்னை நாடாளுமன்ற வேட்பாளர்கள் தயாநிதி மாறன் மற்றும் டாக்டர்.கலாநிதி வீராசாமி ஆகியோர் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர். இந்நிகழ்வின் போது மேயர் திருமதி. ஆர்.பிரியா ராஜன், மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு ஆகியோர் உடன் இருந்தனர்.

# பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால் – வெறுப்பு விதைகளைத் தூவி நாட்டை நாசம் செய்து விடுவார்கள்!

## நாங்குநேரியில் கழகத் தலைவர் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.3.2024) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரியில் நடைபெற்ற இந்தியா கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் கன்னியாகுமரி நாடாளுமன்றத் தொகுதியின் வேட்பாளர் விஜய் வசந்த் அவர்களையும், திருநெல்வேலியில் போட்டியிடும் வழக்கறிஞர் ராபர்ட் புரூஸ் அவர்களையும், விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் தாரகை கத்பெர்ட் அவர்களையும் அறிமுகப்படுத்தி இந்தியா கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில் அமைச்சர் பெருமக்கள் கே.கே.எஸ்.எஸ். ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, மனோ தங்கராஜ், தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், நாடாளுமன்ற உறுப்பினர் ஞானதிரவியம், சட்டமன்ற உறுப்பினர்கள் அப்துல் வகாப், ரூபி மனோகரன், பிரின்ஸ், ராஜேஷ் குமார், மாவட்ட கழகச் செயலாளர்கள் ஆவுடையப்பன், மைதீன்கான், மகேஷ், ஜெயபாலன் மற்றும் இந்தியா கூட்டணி நிர்வாகிகள் பங்கேற்றனர்.

உதயநிதி ஸ்டாலின், கீதா ஜீவன், அனிதா ராதா கிருஷ்ணன், மூர்த்தி, மனோ தங்கராஜ் என்று, எல்லோரையும் இங்கே அனுப்பி வைத்தோம்.

### உழவர்களின் வாழ்வாதாரம் மீட்க ஓய்விலாது உழைத்தோம்!

பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சிகிச்சைகள் அளிக்க, தொற்று நோய் எதுவும் வராமல் இருக்க, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் 2,500–க்கும் மேற்பட்ட மருத்துவ முகாம்கள் நடத்த உத்தர விட்டேன்.

அதேபோல, உழவர்களின் வாழ்வாதா ரத்தை மீட்டெடுக்க வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வத்தைக் களத்திற்கு அனுப்பினேன்.

தமிழ்நாட்டின் மொத்த அமைச்சர்களும் இங்கு வந்து தங்கி நிவாரணப் பணிகளில் ஈடு பட்டார்கள். மக்களோடு மக்களாக கூடவே இருந்து, ஆறுதல் கூறி, என்ன தேவைகள் என்று கூடவே இருந்து, வேண்டியதைச் செய்து கொடுத்தார்கள்.

நானும், டிசம்பர் மாதம் 21–ஆம் தேதி தூத் துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் வெள் ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பகுதிக ளைப் பார்வையிட்டு, நிவாரண உதவிகளை வழங்கினேன்.

கடந்த பிப்ரவரி 25 அன்று, தூத்துக்குடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த 38 ஆயிரத்து 614 பேருக்கு, 118 கோடியே 87 லட்சம் ரூபாய்க்கு நலத்திட்ட உதவிகளை வழங்கிய கைதான், இந் தக் கை.

### இரண்டு இயற்கைப் பேரிடர் இழப்பீடு! 37 ஆயிரம் கோடி கேட்டோம்!

ஒன்றிய அரசிடம் என்ன கேட்டோம்? மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தார்கள் அவர்க ளின் வாழ்வாதாரங்களை மீட்டெடுக்க வேண்டும் என்று, இரண்டு இயற்கைப் பேரிடர்களுக்கான இழப்பீடு – மறு சீரமைப்பு – நிவாரணத் தொகை யாக 37 ஆயிரம் கோடி ரூபாய் வழங்க வேண் டும் கேட்டோம். தொடர்ந்து கேட்கிறோம் தந்தார் களா? இல்லை.

நாம் உரிமையோடு கேட்பதைத் தர மறுக் கும் ஒன்றிய அரசுக்கு எதிராக உச்சநீதிமன்றத் தில் வழக்கு தாக்கல் செய்யப் போகிறோம் என்று இந்தக் கூட்டத்தின் வாயிலாக அறிவிக் கிறேன்.

சட்டப்பேரவை நிறைவேற்றி அனுப்பும் சட் டத்துக்குக் கையெழுத்து போடச் சொல்லுங்கள் என்று நீதிமன்றம் சென்றோம்.

### ஓரவஞ்சனை மட்டுமல்ல; மக்களை கிண்டல், கேலி செய்கிறார்கள்!

பொன்முடி அவர்களை மீண்டும் அமைச்ச ராக்க வலியுறுத்த நீதிமன்றம் சென்று வென் றோம்.

இப்போது நிதி கேட்டும் நீதிமன்றம்தான் செல்ல வேண்டுமென்றால், பா.ஜ.க. எத்த கைய, ஓரவஞ்சனையான அரசாக நடந்து கொண்டிருக்கிறது?

## ஒன்றிய பா.ஜ.க. அரசே! மக்களாட்சியில் மக்களையே அவமதித்தபோதே, உங்களின் தோல்வி உறுதியாகிவிட்டது!

ஓரவஞ்சனை மட்டுமா செய்கிறார்கள்? நிதி யையும் தராமல் நம்முடைய மக்களை ஏளனம் வேறு, செய்கிறார்கள். கேலி, கிண்டல் செய்கி றார்கள்.

நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர் கள், நிவாரண நிதியும் தரமாட்டார்களாம். மாநில அரசே மக்களுக்கு நிவாரணத் தொகை வழங்கினால் அதையும் ‘பிச்சை’ என்று ஏளனம் செய்வார்களாம்.

### மக்கள் துயருறும் போது உதவுவதே அரசின் கடமை!

அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, அரசு செலவு செய்யும் ஒவ்வொரு ரூபாயும் மக்களின் பணம். அவர்கள் கஷ்டப்ப டும்போது அவர்களுக்கு உதவுவதுதான் அரசின் கடமை. அதைக் கேட்பது மக்களின் உரிமை. மக்களாட்சியில் மக்களையே அவமதித்த போதே உங்களின் தோல்வி உறுதியாகிவிட்டது!

அம்மையார் அவர்களே ஒரே ஒருமுறையா வது மக்களை வந்து சந்தித்துப் பாருங்கள் அப் போது தெரியும் மக்கள் உங்களுக்கு என்ன பதில் வைத்திருக்கிறார்கள் என்று! அதற்குப் பிறகு, பிச்சை என்ற வார்த்தையே உங்கள் நினைவிற்கு வராது!

### தமிழர்கள் மீது ஏன் இத்தனை கோபம்! வெறுப்பு! வன்மம்!

ஆட்சி இருக்கிறது பதவி இருக்கிறது என்று பா.ஜ.க.வினர் என்ன வேண்டுமானாலும் ஆண வமாகப் பேசலாமா? அதிலும் ஒரு ஒன்றிய அமைச்சர் தமிழர்களை பிச்சைக்காரர்கள் என்று கூறினால், இன்னொரு ஒன்றிய அமைச் சர் தமிழர்களை தீவிரவாதிகள் – பயங்கரவாதி கள் எனக் குற்றம் சாட்டுகிறார்.

தமிழர்கள் மேல் ஏன் இத்தனை கோபம்! வெறுப்பு! வன்மம்! மக்களிடையே வெறுப்பை விதைத்து, பிளவுகளை உண்டாக்கி, அதில் குளிர்காய நினைக்கும் பா.ஜ.க.வின் எண்ணங் கள் ஒருபோதும் பலிக்காது!

> **மக்களிடையே வெறுப்பை விதைத்து, பிளவுகளை உண்டாக்கி, அதில் குளிர் காய நினைக்கும் பா.ஜ.க.வின் எண்ணங்கள் ஒருபோதும் பலிக்காது!**

மேம்பட்ட சிந்தனைகள் உள்ள நாம், நம்மு டைய சகோதர – சகோதரிகளுக்கு வழிகாட்ட வேண்டும்! பா.ஜ.க.விற்கு வாக்களிப்பது அவ மானம் என்று எடுத்துச் சொல்ல வேண்டும். பா.ஜ.க.விற்கு வாக்களிப்பது எதிர்காலக் சந்த திக்குச் செய்யும் துரோகம் என்று புரிய வைக்க வேண்டும்!

### பிரதமர் அவர்களே! தமிழ்நாட்டுக்கு நீங்கள் கொண்டு வந்த சிறப்புத் திட்டங்கள் என்ன?

தேர்தலுக்காக மட்டும் தமிழ்நாட்டுக்கு வரும் பிரதமரிடம் நானும் நீண்ட நாட்களாக ஒன்றைக் கேட்கிறேன். அதைத் திரும்பவும் கேட்கிறேன் பிரதமர் மோடி அவர்களே தமிழ்நாட்டுக்காக உங் கள் தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டு வந்த சிறப்புத் திட்டங்கள் என்ன? என் கேள்விக்கு என்ன பதில்? பதில் கூறுங்கள் மோடி அவர்களே

தமிழ்நாட்டுக்கு என்று ஒரு சிறப்புத் திட்டத்தின் பெயரைக்கூடச் சொல்ல முடியாமல், பத்தாண்டுகளாக எதைச் சாதித்தீர்கள்? ஆனால், எங்கள் வரிப் பணத்தில் ஒரு ரூபாய் கொடுத்தால் 29 பைசாதான் திரும்பி வருகிறது! அதைக் கேட்கிறோமே, அதற்காவது பதில் வைத்திருக்கிறீர்களா? இல்லை அதற்கும் வாயாலே வடை சுடுவீர்களா?

### ஒன்றியத்திலிருந்து தமிழ்நாட்டுக்கு நாங்கள் கொண்டு வந்த திட்டங்கள்!

பிரதமர் மோடி அவர்களே திராவிட முன் னேற்றக் கழகம் ஒன்றியத்தில் ஆட்சி செய்த கட்சி அல்ல! ஆனால், பல ஆட்சிகளில் பங் கேற்ற கட்சி! நாங்களே தமிழ்நாட்டுக்கு எவ்வ ளவு சிறப்புத் திட்டங்களைக் கொண்டு வந்தோம் தெரியுமா? பட்டியல் போடட்டுமா?

- இந்திய அரசு செலவு செய்த திட்டச் செல வில் 11 விழுக்காட்டை தமிழ்நாட்டு வளர்ச்சிக்குக் கொண்டு வந்தோம்.
- மிக முக்கியமான 69 திட்டங்களை நிறை வேற்றிக் காட்டினோம்.
- ஈராயிரம் ஆண்டு இலக்கியப் பெருமை கொண்ட தமிழ்மொழியைச் செம்மொழியாக் கும் பெருங்கனவு 100 ஆண்டுகளாக நம் தமி ழர்களுக்கு இருந்தது. அந்தக் கனவை நனவாக் கினார் முத்தமிழறிஞர் கலைஞர்.
- செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவ னத்தை சென்னையில் அமைத்தோம்.
- தமிழ்நாடு முழுவதும் உள்ள நெடுஞ்சா லைகள் நம் கூட்டணி ஆட்சியில்தான், 56 ஆயி ரத்து 664 கோடியே 21 இலட்சம் ரூபாய் செல வில் செய்தோம்!
- ஒரகடத்தில் 470 கோடி ரூபாய் முதலீட்டில் தேசிய மோட்டார் வாகன சோதனை மற்றும் ஆராய்ச்சி மையம்!
- 1,553 கோடி ரூபாய் செலவில் சேலம் உருட்டாலை சர்வதேச அளவுக்கு உயர்வு! புதிய குளிர் உருட்டாலை உருவாக்கம்!
- தாம்பரத்தில் தேசிய சித்த மருத்துவ ஆய்வு மையம்! சேலத்தில் புதிய இரயில்வே கோட்டம்!
- 1,650 கோடி ரூபாய் செலவில் சென்னை துறைமுகம் – மதுரவாயல் பறக்கும் சாலை!
- 2,427 கோடி ரூபாய் செலவில் சேதுச முத்திரத் திட்டம்! நெசவுத் தொழிலுக்கு இருந்த சென்வாட் வரி நீக்கம்!
- 908 கோடி ரூபாய் செலவில், நெம்மேலி கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம்!
- அடக்குமுறை பொடா சட்டம் ரத்து!
- தமிழ்நாட்டில் இருக்கும் மீட்டர்கேஜ் இர யில் பாதைகள் அனைத்தும் அகல இரயில் பாதைகளாக மாற்றிட அனுமதி!
- 1,828 கோடி ரூபாய் செலவில் 90 இர யில்வே மேம்பாலங்கள் கட்ட அனுமதி! சென்னை மாநகரில் மெட்ரோ இரயில் திட்டம்!
- ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்!
- திருச்சி, கோவை, மதுரை விமான நிலை யங்கள் விரிவாக்கம்!
- சென்னைக்கு அருகே தேசிய கடல்சார் பல்கலைக்கழகம்!
- திருவாரூரில் மத்தியப் பல்கலைக்கழகம்!
- கிண்டி – கத்திப்பாரா, கோயம்பேடு, பாடி யில் மிகப்பெரிய மேம்பாலங்கள்! கரூர், ஈரோடு, சேலம் உயர்தொழில்நுட்ப ஜவுளிப்பூங்கா!
- துறைமுக விரிவாக்கப் பணிகள், சரக்குப் பெட்டக முனையங்கள், நீர்வழிப் போக்குவரத்து வசதிகள் போன்றவை அந்தக் காலகட்டத்தில் உருவாக்கியது. இன்னும் நிறைய இருக்கிறது!

### தமிழ்நாட்டை வெறுத்த, வஞ்சித்த ஒரே பிரதமர் மோடி!

இவை அனைத்தும் ஒன்றிய அரசின் கூட்ட ணியில் தலைவர் கலைஞரின் வழிகாட்டுதலில், தி.மு.க. கொண்டு வந்த திட்டங்கள். இந்த மாதிரி பட்டியலிட்டுக் கூறுங்கள் என்றுதான் நான் பிரதமரை மிகுந்த பணிவோடு கேட்கி றேன். அதுகூட உங்களால் முடியவில்லை

ஏன் என்றால், தமிழ்நாட்டையும் – தமிழ் மக் களையும் உங்களை மாதிரி வெறுத்த – வஞ் சித்த ஒரு பிரதமர், இந்திய வரலாற்றிலேயே கிடையாது!

மாண்புமிகு மோடி அவர்களே நீங்கள் வடிக் கும் கண்ணீரை உங்கள் கண்களே நம்பாது பிறகு எப்படி தமிழ்நாட்டு மக்கள் உங்களை நம் புவார்கள்?

### மோடி அறிவித்த ஒரே ஒரு திட்டம் ‘எய்ம்ஸ்’ – அதுவும் நிறைவேறவில்லை!

மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை அமை யும் என்று அறிவித்தீர்களே நீங்கள் அறிவித்த ஒரே ஒரு சிறப்புத் திட்டம் அதுதான். அறிவித்து எத்தனை ஆண்டுகள் ஆகிறது! பத்து ஆண்டு கள் ஓடிவிட்டது!

உங்கள் குஜராத் மாடல் நிர்வாகத்திற்கு அது தான் எடுத்துக்காட்டு! ஆனால் திராவிட மாடல் நிர்வாகத்தின் எடுத்துக்காட்டு சொல்லவா?

அதே மதுரையில், நூலகம் அறிவித்தோம். ஜல்லிக்கட்டு அரங்கம் அறிவித்தோம். சென் னையில் மருத்துவமனை அறிவித்தோம்.

### மதுரையில் அறிவு ஆலயமாக ‘கலைஞர் நூற்றாண்டு நூலகம்’!

மூன்று ஆண்டுகளாகத்தான் ஆட்சியில் இருக்கிறோம். இன்றைக்கு மதுரையில் கம்பீர மாக கலைஞர் நூற்றாண்டு நூலகம் மாணவ – மாணவிகளுக்கான அறிவு ஆலயமாக செயல்படுகிறது.

தமிழர்களின் பண்பாட்டு அடையாளமான ஜல்லிக்கட்டுக்காகக் கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கம் மிடுக்கோடு காட்சியளிக்கி றது! பல்வேறு மக்களின் உடல்நலனை காக்கும் கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவ மனை சென்னையில் சிறப்பாகச் செயல்படுகி றது. ஆனால் உங்கள் எய்ம்ஸ் மருத்துவம னையை பூதக்கண்ணாடி வைத்து தேடினால்கூட கண்டுபிடிக்க முடியவில்லை! அதனால்தான் தம்பி உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஒரு செங் கல்லை எடுத்துக்கொண்டு ஊர் ஊராகக் காட் டிக் கொண்டு வருகிறார்.

### தமிழ்நாடு மீனவர்களைக் காத்திட வகையற்ற பிரதமர் மோடி!

சமீபத்தில் கன்னியாகுமரிக்கு வந்த பிரதமர் மோடி, ஒரு அபத்தமான குற்றச்சாட்டை வைத் திருக்கிறார். இலங்கைக் கடற்படையால் தமிழ் நாட்டு மீனவர்கள் தாக்கப்படுவதற்குத் தி.மு.க.வும் – காங்கிரசும்தான் காரணம் என்று கூறி இருக்கிறார். பத்து வருடமாக, தி.மு.க.வும் காங்கிரசுமா ஆட்சியில் இருக்கிறது?

## தென் மாவட்டங்களில் இயற்கைப் பேரிடரின் போது அமைச்சர்கள் மக்களோடு மக்களாக இருந்து - வேண்டியதை எல்லாம் செய்து கொடுத்தார்கள்!

மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்களைக் கைது செய்ததை வேடிக்கை பார்த்தது உங்கள் ஆட்சிதான். தமிழ்நாட்டு மீனவர்களைத் தாக்கி – கைது செய்து, படகுகள் – வலைகளைப் பறித்து – சித்திரவதை செய்கிறது இலங்கைக் கடற்படை. 56 இன்ச் என்று இறுமாப்புடன் சொல்லிக் கொள்கிறீர்களே தமிழ்நாட்டு மீனவர் கள் கைது செய்வதைக் கண்டிக்க, தடுத்து நிறுத்த, உங்களுக்கு ஏன் துணிச்சல் வர வில்லை? ஏன் தைரியம் இல்லை?

இலங்கையைப் பார்த்து பயப்படுகிறீர்களா? நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஒரு மீனவர்கூட தாக்கப்பட மாட்டார்கள் என்று 2014–ஆம் ஆண்டு பிரதமர் ஆவதற்கு முன்னால் இதே கன்னியாகுமரியில் கூறினீர்களே

அதுமட்டுமா, அப்போது என்னவெல்லாம் கூறினீர்கள்? தமிழ்நாட்டு மீனவர்கள் தாக்கப்ப டுவதற்கு அன்னை சோனியா காந்தி அவர்க ளும், அம்மையார் ஜெயலலிதா அவர்களும் தான் காரணம் என்று கூறினீர்கள். பத்தாண்டுகள் முடிந்துவிட்டதே! இப்போது பெயர்களை மட்டும் மாற்றி, தி.மு.க.வும் – காங் கிரசும்தான் காரணம் என்று கூறுகிறார்.

பத்தாண்டு காலத்தில் பிரதமர் மோடி எது வும் செய்யவில்லை என்பதற்கு, இப்படி ஒப்பு தலை அவரே தருகிறார். 2014–இல் இருந்து, 2024–க்குள் பத்து ஆண்டுகள்தான், தமிழ் நாட்டு மீனவர்கள் மேல் வரலாற்றிலேயே, அதிக அளவிலான தாக்குதல்

### சிலருக்குச் சாதகம் செய்திட மட்டும் ஆட்சி நடத்தும் மோடி!

நாங்கள் எத்தனை கடிதம் எழுதியிருப்போம் நம்முடைய எம்.பி.க்கள் எத்தனை முறை இதைப் பற்றி நாடாளுமன்றத்தில் பேசியிருப் பார்கள்? இலங்கை மாதிரியான அண்டை நாட் டைப் பார்த்தே, இந்த அளவிற்குப் பயப்படும் ஆட்சியை நடத்தும் பிரதமர் மோடி, பத்தாண்டு களுக்கு முன்னால் இருந்த காங்கிரஸ் ஆட்சி யைக் குறை சொல்லிக் கொண்டு இருக்கிறார்

இன்னும் சொல்ல வேண்டும் என்றால், பிர தமர் மோடியின் முழுநேர வேலை என்ன தெரி யுமா? இன்றைக்குப் பண்டித நேருவை என்ன சொல்லித் திட்டலாம்? அன்னை சோனியாவை வசை பாட முடியுமா? சகோதரர் ராகுல் காந்தி யைப் பார்த்து, பயம் இல்லாதது போல் எப்படி காட்டிக்கொள்ளலாம்!

எல்லாவற்றிற்கும் மேல், தேர்தலுக்கு ஒரு ரூபாய்கூட செலவு செய்யவிடாமல் காங்கிரஸ் வங்கிக் கணக்கை முடக்கி, பா.ஜ.க.வின் தேர் தல் பத்திர ஊழலை எப்படி திசைதிருப்பலாம் இதைத்தான் பிரதமர் மோடி சிந்தித்துக் கொண் டிருக்கிறார்...

மோடியின் ஆட்சி அவருக்கு நெருக்கமான சிலருக்கு மட்டுமே சாதகமான ஆட்சி. ஆனால், நாம் அமைக்கப் போகும் இந்தியா கூட்டணி ஆட்சி எல்லோருக்கும் பொதுவான ஆட்சி!

ஒரே மதம்! ஒரே மொழி! ஒரே உணவு! ஒரே பண்பாடு! ஒரே தேர்வு! ஒரே தேர்தல்! ஒரே வரி! என்று ஒரே பல்லவியைப் பாடிக் கொண்டிருக் கிறது பா.ஜ.க. இந்தப் பல்லவியை அனுமதித் தால், ஒரே ஒரு மனிதர் மன்னராக இருக்கும் ஆட்சியாக இந்தியா மாற்றப்பட்டு விடும்.

### எந்தக் கவலையும் இல்லாத – பாதம் தாங்கி பழனிச்சாமி!

ஜனநாயகம், மதச்சார்பின்மை, சமத்துவம், சகோதரத்துவம், சமூகநீதி ஆகியவற்றைப் பாதுகாக்கும் நமது அரசியல் சட்டத்தையே மாற் றிவிடுவார்கள். நாடு இப்படிப்பட்ட பேராபத்தில் சிக்கியிருக்கிறது ஆனால் இதுபற்றி எந்தக் கவ லையும் இல்லாமல் எந்தக் கொள்கையும் இல் லாமல் வளைந்த முதுகுடன் வலம் வருகிறார் பழனிசாமி! பாதம்தாங்கி பழனிசாமி.

> **பா.ஜ.க.விற்கு வாக்களிப்பது அவமானம்! எதிர்காலச் சந்ததிக்குச் செய்யும் துரோகம் என்பதை மக்களுக்குப் புதிய வைக்க வேண்டும்!**

நடப்பது நாடாளுமன்றத் தேர்தல்! பத்தாண் டுகளாக ஒன்றியத்தில் ஆட்சியிலிருந்து, நாட் டைப் படுகுழியில் தள்ளியுள்ள பிரதமர் மோடி பற்றியோ – பா.ஜ.க. பற்றியோ – கண்டித்துப் பேசத் தெம்பு இருக்கிறதா? பழனிசாமி அவர் களே

### அவமானத்தின் அடையாளம்!

உங்களின் கள்ளக்கூட்டணி கபட நாடகத்தில் கூட பா.ஜ.க.வை எதிர்ப்பதற்கான துணிவு இல் லையா? கேள்விக்குறிபோல் வளைந்தே இருப் பது, அவமானத்தின் அடையாளமில்லையா? பா.ஜ.க.விற்கு எதிரான வாக்குகளை எப்படியா வது பிரிக்க வேண்டும் என்று களமிறக்கப்பட்டி ருக்கும் மறைமுக பா.ஜ.க. வேட்பாளர்கள்தான், பழனிசாமியால் களமிறக்கப்பட்டுள்ள அ.தி.மு.க. வேட்பாளர்கள்!

பழனிசாமி அவர்கள், தமிழ்நாட்டு மக்களிடம் மட்டுமல்ல, அ.தி.மு.க. தொண்டர்களிடமும் செல்வாக்கை இழந்துவிட்டார். சிறுபான்மை மக் களுக்கு எதிரான குடியுரிமைத் திருத்தச் சட் டத்தை நாடாளுமன்றத்தில் ஆதரித்து வாக்க ளித்த கட்சி பழனிசாமியின் அ.தி.மு.க.

### முஸ்லிம்களுக்கு எதிராக – எடப்பாடியின் கபட நாடகம்!

குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிராகத் தி.மு.க. சார்பில் நாங்கள் ஒரு கோடி பேரிடம் கையெழுத்து வாங்கும் இயக்கத்தை நடத்திய போது – ”எந்த முஸ்லீம் பாதிக்கப்பட்டார்? – என்று பா.ஜ.க.விற்கு டப்பிங் பேசியவர்தான் பழனிசாமி. இப்போது பா.ஜ.க.வின் கதை – திரைக்கதை – வசனம் – இயக்கத்தில் தனியா கப் போட்டி போடும் கபட நாடகத்தை நடத்திக் கொண்டு இருக்கிறார்.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

# 16 லட்சம் குழந்தைகள் பயன்பெறும் 'காலை உணவுத் திட்டம்'!

## கழகத் தலைவர் - முதல்வர் உரை - 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

நேற்று பழனிசாமி திருச்சியில் பேசினாரே பா.ஜ.க.வை விமர்சித்து அவர் வாயில் இருந்து ஒரு வார்த்தையாவது வந்ததா? இதுதான் கள்ளக் கூட்டணி! பா.ஜ.க.வை விமர்சிக்காமல், எதிர்க்காமல், தமிழ்நாட்டையே நாசப்படுத்தத் துணைபோகும் பழனிசாமி, "ஒற்றை விரலால் ஓங்கி அடிப்போம் என்று சபதம் எடுக்கிறார். தன்னுடைய விரல்களால் தமிழ்நாட்டு மக்களின் கண்ணைக் குத்திய பழனிசாமி எடுப்பது சபதம் அல்ல; வெற்றுச் சவடால்! மாவீரர்கள் பூலித்தேவனும் – வீரபாண்டிய கட்டபொம்மனும் – மருதுபாண்டியர்களும் – சுந்தரலிங்கமும் – கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனாரும் – மகாகவி பாரதியாரும் – போராடிப் பெற்ற விடுதலையால் உருவான நாட்டில் – சர்வாதிகார ஆட்சி தலைதூக்குவதை நாம் அனுமதிக்கக் கூடாது.

அய்யா வைகுண்டர், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, நாமக்கல் கவிஞர் ராமலிங்கனார், மார்ஷல் நேசமணி, பெருந்தலைவர் காமராசர் போன்ற ஒப்பற்ற தியாகிகள் பிறந்த நம் மண்ணுக்கு ஒரு வரலாறு இருக்கிறது; ஒரு பண்பாடு இருக்கிறது! எப்படிப்பட்ட அடிமைத்தனங்களிலிருந்து நாம் மீண்டு வந்திருக்கிறோம் என்று ஒரு போதும் மறக்கக் கூடாது!

உங்கள் ஆதரவுடன் இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பு முதலமைச்சரான நான் – உங்களுக்காகச் செய்து கொடுத்த சாதனைகளை – தீட்டிக் கொடுத்த திட்டங்களை இந்தியாவின் பல்வேறு மாநிலங்கள் இப்போது பின்பற்றி வருகின்றனர். சிறப்பான திட்டங்களை இந்தியா முழுமைக்கும் அமல்படுத்த இந்தியா கூட்டணி வெற்றி பெற வேண்டும்.

### அனைவர் முகத்திலும் மகிழ்ச்சி! அதுவே நமது இலக்கு!

எல்லாருக்கும் எல்லாம்தான் நம்முடைய திராவிட மாடல் அரசின் ஃபார்முலா! கடைக்கோடியில் இருக்கும் ஒவ்வொரு மனிதரின் முகத்திலும் மகிழ்ச்சியைக் கொண்டுவர வேண்டும். இதுதான் நம்முடைய இலக்கு!

கொரோனாவால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, ஆட்சிக்கு வந்தவுடனே வழங்கிய நாலாயிரம் ரூபாய் மக்களுக்கு எவ்வளவு உதவிகரமாக இருந்தது! எவ்வளவு மகிழ்ச்சியைத் தந்தது! அதற்கு, இந்தக் கன்னியாகுமரியைவிட பெரிய எடுத்துக்காட்டு வேண்டுமா? அந்த மகிழ்ச்சிதான் இங்கு இருக்கும் நாகர்கோயில் பகுதியைச் சேர்ந்த வேலம்மாள் பாட்டியின் முகத்தில் புன்னகையாக வெளிப்பட்டது. அந்தப் புன்னகை தமிழ்நாட்டில் இருக்கும் அத்தனை குடும்பங்களிலும் இருந்ததால்தான், வேலம்மாள் பாட்டியின் ஃபோட்டோ வைரல் ஆனது!

### "எங்கள் அண்ணன் ஸ்டாலின் தாய் வீட்டுச் சீர்"!

அதுமட்டுமா, கோடிக்கணக்கான தாய்மார்கள் முகத்தில் புன்னகையையும் கோடிக்கணக்கான தமிழ்நாட்டுக் குடும்பங்களில் மகிழ்ச்சியையும் ஏற்படுத்துகிற திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டு இருக்கிறோம்.

"எங்கள் அண்ணன் ஸ்டாலின் கொடுக்கும், தாய்வீட்டுச் சீர் இருக்கிறது என்று மாநிலம் முழுவதும் ஒரு கோடியே 15 லட்சம் சகோதரிகள் உரிமையோடு, பாசத்தோடும் சொல்லும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்!

வெறும் வயிற்றுடன் குழந்தைகள் பள்ளிக்கு வரக்கூடாது குழந்தைகள் நலமாக இருந்தால்தான், நாடு வளமாக இருக்கும் என்று, பெருந்தலைவர் காமராசர் தொடங்கிய மதிய உணவுத் திட்டம் போன்றே, நமது ஆட்சியில், நாள்தோறும் 16 லட்சம் குழந்தைகள் காலை உணவுத் திட்டத்தில் சாப்பிடுகிறார்கள்!

தமிழ்நாட்டு மாணவர்கள் திறன்மிக்க இளைஞர்களாக உருவாக வேண்டும் – உலகம் முழுவதும் தமிழர்கள் அறிவாற்றலால் வெல்ல வேண்டும் என நாம் உருவாக்கியிருக்கும், 'நான் முதல்வன்' திட்டத்தால், 28 லட்சம் இளைஞர்கள் இதுவரைக்கும் பயனடைந்திருக்கிறார்கள்...

மகளிர் படிக்கச் செல்ல வேண்டுமா – வேலைக்குச் செல்ல வேண்டுமா – உறவினர்களைச் சந்திக்கச் செல்ல வேண்டுமா – பேருந்தில் கட்டணம் கிடையாது! அதுதான், 445 கோடி முறை மகளிர் பயணங்கள் மேற்கொண்ட 'விடியல் பயணம்' திட்டம்!

பெண் பிள்ளைகள், அரசுப் பள்ளியில் படித்துவிட்டு உயர்கல்விக்குப் போகிறார்களா – மாதா மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப்பெண் திட்டம்!

வேலைக்காக வெளியூரில் இருக்கும் பெண்கள், பாதுகாப்பாகத் தங்குவதற்கு, 'தோழி விடுதி திட்டம்!'

நம்முடைய திட்டங்கள் பயனாளிகளிடம் முறையே சென்று சேருவதை உறுதி செய்ய, சமீபத்தில் தொடங்கிய "நீங்கள் நலமா திட்டம்!

இப்படியான நம்முடைய திராவிட மாடல் திட்டங்களை இந்தியா முழுவதும் விரிவுபடுத்த நமக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்புதான் இந்த நாடாளுமன்றத் தேர்தல் களம்.

### சாதனைகளாக மலரப் போகும் 'இந்தியா' கூட்டணியின் வாக்குறுதிகள்!

ஒட்டுமொத்த இந்தியாவுக்கான வாக்குறுதிகளை தேர்தல் அறிக்கையாக வழங்கியிருக்கிறோம் நாளை ஒன்றியத்தில் இந்தியா கூட்டணி அமைந்ததும் சாதனைகளாக மாறப்போகும் அந்த வாக்குறுதிகளில் சிலவற்றை மட்டும் தலைப்புச் செய்திகளாகச் சொல்ல விரும்புகிறேன்

- பத்தாண்டுகளாக சாமானிய மக்கள் எவ்வளவு கஷ்டப்படுவார்கள் என்று கொஞ்சம்கூட நினைத்துப் பார்க்காமல், மக்கள் விரோத பா.ஜ.க. அரசால் தொடர்ந்து உயர்த்தப்பட்ட பெட்ரோல், டீசல், கேஸ் விலை குறைக்கப்படும்!
- சிறுபான்மையின மக்களுக்கு எதிரான சட்டங்கள் ரத்து செய்யப்படும்!
- தேசிய நெடுஞ்சாலைகளில் இருக்கும் சுங்கச் சாவடிகள் முற்றிலுமாக அகற்றப்படும்.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் வேலை நாட்கள் 100–ல் இருந்து, 150 நாட்களாகவும் – ஊதியம் 400 ரூபாயாகவும் உயர்த்தப்படும்.
- உலர் மீன் முற்றங்கள் கட்டுதல் போன்ற மீனவர்களுக்குத் தேவையான தொழில் கட்டமைப்புப் பணிகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும்.
- குமரி முதல் களியக்காவிளை வரையும், காவல்கிணறு முதல் நாகர்கோயில் வரையும், நான்குவழிச் சாலைக்காக நிலங்களைக் கொடுத்தவர்களுக்கு உடனடியாக, இழப்பீட்டுத் தொகை வழங்க ஆவன செய்யப்படும்.
- விளவங்கோடு பகுதியில் ரப்பர் தொழிற்சாலை அமைக்க ஆவன செய்யப்படும்.
- ஏ.வி.எம். கால்வாயைச் சுத்தம் செய்து மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டு வர ஆவன செய்யப்படும்.
- பாரம்பரிய மீனவ சமுதாய மக்கள் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள்.
- தேசிய மீனவர் நல ஆணையம் அமைக்கப்படும்.
- ஆழ்கடல் மீன்பிடிக் கொள்கையை உருவாக்க அமைக்கப்பட்ட, மீனாகுமாரி குழுவின் அறிக்கை கைவிடப்படும்.
- மீன்பிடித் தடைக்காலங்களில் மீனவர்களுக்கு மாற்றுப் பொருளாதார வேலை வாய்ப்புகளை உருவாக்க, மீனவக் குடும்ப உறுப்பினர்களுக்கு, குறிப்பாக, பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு, மீன்கள் பதப்படுத்துதல், மீன் வளர்ப்பு, மீன் தீவனம் தயாரித்தல் மற்றும் சந்தைப்படுத்துதல் உள்ளிட்ட பயிற்சிகள் வழங்கப்படும்.
- மீனவ சமுதாய மக்களை அவசர காலத்தில் பாதுகாக்க ஹெலிகாப்டர் தளம் தேவையான இடங்களில் அமைக்கப்படும்.
- புதிய கல்விக் கொள்கை ரத்து!
- ஒன்றிய அரசுப் பணிகளுக்குத் தமிழில் தேர்வு.
- உலகப் பொதுமறையான திருக்குறள், தேசிய நூலாக அறிவிக்கப்படும்.
- இதுமட்டுமல்ல, திருநெல்வேலியைத் தலைமையிடமாகக் கொண்டு, திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களை உள்ளடக்கிய 'புதிய ரயில்வே கோட்டம்' அமைக்க ஆவன செய்யப்படும்.
- அம்பாசமுத்திரம், வி.கே.புரம் சாலையில், அம்பை ராணி பள்ளி பக்கத்தில் இருக்கும் இரயில்வே கேட்டில் உயர்மட்ட மேம்பாலம் அமைக்கப்படும்.
- திருநெல்வேலி மாவட்டத்தில் தூண்டில் வளைவு இல்லாத கிராமங்களுக்கு, தூண்டில் வளைவு அமைக்கப்படும்.
- குமரி மாவட்டத்தில் மீன்களைப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்ய நவீன தொழில்நுட்பம் கொண்ட பதப்படுத்தும் நிலையம் உருவாக்கப்படும்.

இப்படியான திட்டங்களை நிறைவேற்ற உங்கள் பேராதரவுடன் இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வர வேண்டும்.

**மோடி அவர்களே... நீங்கள் வடிக்கும் கண்ணீரை உங்கள் கண்களே நம்பாது... பிறகு எப்படி தமிழ்நாட்டு மக்கள் நம்புவார்கள்?**

### பா.ஜ.க.வுக்கு அளிக்கும் வாக்கு – தமிழ்நாட்டுக்கு வைக்கும் வேட்டு!

ஒன்று மட்டும் அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறேன் தமிழுக்கும் – தமிழினத்துக்கும் – தமிழ்நாட்டுக்கும் – விரோதமான கட்சி பா.ஜ.க. பா.ஜ.க.வுக்கு அளிக்கும் வாக்கு, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு வைக்கும் வேட்டு! அதை மட்டும் மறந்துவிடாதீர்கள்! தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க. – தமிழ்நாட்டைப் பாழ்படுத்திய அ.தி.மு.க. – இரண்டுபேரையும் ஒரு சேர வீழ்த்துங்கள்.

கன்னியாகுமரி நாடாளுமன்றத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் விஜய் வசந்த் அவர்களுக்கும்; திருநெல்வேலி நாடாளுமன்றத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் ராபர்ட் புரூஸ் அவர்களுக்கும், விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் தாரகை கத்பெர்ட் அவர்களுக்கும் கை சின்னத்தில் வாக்களிக்குமாறு உங்கள் எல்லோரையும் கேட்டுக்கொள்கிறேன்.

### 'பாசிசம் – மதவாதம் வீழ்ந்தது!' எனும் புதிய வரலாறு தொடங்கப்படும்!

இந்தியாவின் எல்லை தொடங்கும் நம்முடைய குமரிமுனை இந்தியாவிற்கே "கை காட்டி வழிகாட்டட்டும்! இந்தியத் துணைக்கண்டம் தொடங்கும் இந்த இடத்தில் இருந்து, "பாசிசமும் மதவாதமும் வீழ்ந்தது! ஜனநாயகமும் சகோதரத்துவமும் வென்றது! என்ற புதிய வரலாறு தொடங்கட்டும்!

நாற்பதும் நமதே!

நாடும் நமதே!

பாசிசத்தை வீழ்த்த – இந்தியாவைக் காக்க – உங்கள் ஸ்டாலின் அழைக்கிறேன் உங்கள் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அழைக்கிறேன் நாற்பதும் நமதே! நாடும் நமதே! நாற்பதும் நமதே! நாடும் நமதே!

நன்றி! வணக்கம்!

இவ்வாறு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

# திருப்பெரும்புதூரில் டி.ஆர்.பாலுவை பல லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் மகத்தான வெற்றிபெற வைப்போம்!

## மதுரவாயல் 'இந்தியா' கூட்டணி செயல்வீரர்கள் கூட்டத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேச்சு!

**சென்னை, மார்ச் 26-**

**"கழகத் தலைவரின் அயராத உழைப்பிற்கு நன்றி செலுத்த, திரும்பெரும்புதூரில் டி.ஆர்.பாலுவை பல லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் மகத்தான வெற்றிபெற வைப்போம்" என்று திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி இந்தியா கூட்டணியின் மாபெரும் செயல்வீர Aர்கள் கூட்டத்தில் சென்னை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் உரையாற்றினார்.**

அவ்வுரை வருமாறு:

திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதி என்பது ஒரு வரலாற்றுச்சிறப்புமிக்கத் தொகுதி என்பதை நீங்கள் அனைவரும் நன்றாக அறிவீர்கள். 2019ஆம் ஆண்டு இந்தத் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் பொறுப்புக்குப் போட்டியிட்ட டி.ஆர்.பாலு அவர்களை 5 லட்சத்து 7 ஆயிரத்து 955 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்து உலகச் சாதனைப் படைத்தத் தொகுதி இந்தத் திருபெரும்புதூர் தொகுதி. இந்த முறை எத்தகைய சாதனைப் படைக்க இருக்கிறது என்று யாருக்குமே தெரியாது.

இந்த செயல்வீர்கள் கூட்டம் என்பது மாநில அளவில், தேசிய அளவில் நூற்றுக்கணக்கான கட்சிகளின் மாநில மாநாடு, தேசிய மாநாடு போன்று இந்த ஒரு தொகுதியின் செயல்வீரர்கள் கூட்டமே மிகப்பெரிய அளவுக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நடைபெற இருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஏற்கெனவே பெற்ற 5 லட்சத்து 7 ஆயிரத்து 955 வாக்குகளை விட டி.ஆர்.பாலு அவர்களை எதிர்த்து நின்ற அனைவருமே டெபாசிட் இழந்தார்கள் என்ற வரலாற்றைப் படைக்க இருக்கிறது.

இங்கே பேசிய மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் கணபதி அவர்கள் கடந்த முறை மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியில் 88,730 வாக்குகள் கூடுதலாக கிடைத்து இருக்கிறது. இந்த முறை அது போதாது. ஒரு லட்சத்து 50 ஆயிரம் வாக்குகள் கிடைக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார். கடந்த 3 ஆண்டுகளில் காரம்பாக்கம் கணபதி அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் இந்தத் தொகுதிக்கு கேட்டுப் பெற்றத் திட்டங்கள், டி.ஆர்.பாலு அவர்கள் மதுரவாயல் தொகுதிக்கு செய்த சாதனைகள் இவற்றையெல்லாம் வைத்துத்தான் அந்த நம்பிக்கையில் கேட்கிறார். கடந்த முறையை விட இந்த தேர்தலில் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கிறார். இரண்டு மேம்பாலங்கள் மதுரவாயல் தொகுதியில் கட்டுவதற்கு டி.ஆர்.பாலு அவர்கள் காரணமாக இருந்துக்கொண்டிருக்கிறார்.

### மதுரவாயல் பறக்கும் பாலம்!

தி.மு.க. ஆட்சிக்காலத்தில் தொடங்கப்பட்ட மதுரவாயல் பறக்கும் பாலம். ஆட்சி மாற்றம் ஏற்பட்டதினால் ஜெயலலிதாவின் அரசியல் காழ்ப்புணர்ச்சியினால், இந்தியாவிலேயே மிக நீண்ட மேம்பாலம் கட்டிய பெருமை கலைஞருக்கு வந்துசேர்ந்துவிடும் என்பதால் அதைக் கட்டுவதற்கு தடைப்போட்டு விட்டார். அதற்குப் பிறகு அந்தப் பாலம் இங்கே வருவதற்கு காரணமாக டி.ஆர். பாலு அவர்கள் இருக்கிறார். இவற்றைக் கணக்கில் எடுத்துத்தான் நாங்கள் இந்த காரியங்களை எல்லாம் இந்த ஊருக்கு செய்திருக்கிறோம். பாலங்களைக் கட்டியிருக்கிறோம். மேம்பாலங்களைக் கட்டியிருக்கிறோம். சாலைகள் போட்டியிருக்கிறோம். இன்று கூட ஒரு மகத்தான சாதனை இந்துசமய அறநிலையத் துறையின் சார்பில் இந்த 35 மாத கால ஆட்சியில்1500 குடமுழுக்கு நடத்தப்பட்டது இந்தக் காலக்கட்டத்தில் மட்டும்தான்.

இப்படி ஒவ்வொரு துறையின் சார்பில் பல்வேறு சாதனைகள் படைக்கப்பட்டிருக்கின்றன. இந்த சாதனைகளையெல்லாம் பட்டியல் போட்டால் மிக நீண்ட நேரமாகும். இங்கே பேசிய தோழமைக் கட்சி நிர்வாகிகள் டி.ஆர். பாலு அவர்களின் கடுமையான உழைப்பைப் பற்றிவெகுவாகப் பாராட்டினார்கள். சேதுசமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தால் இன்றைக்கு இந்தியாவுக்கும், இலங்கைக்குமான கடல் பயணதூரம்குறைந்து,பொருளாதாரத்தில் தமிழ்நாடு எந்த அளவுக்கு மேம்படுத்தப்பட்டிருக்கும். தமிழ்நாட்டின்மீது அக்கறையில்லாதவர்கள் தடுத்துநிறுத்தினார்கள். அந்தத் திட்டத்தைக் கொண்டுவந்த பெருமைக்குரியவர் டி.ஆர். பாலு அவர்கள்.

மீனம்பாக்கம் மேம்பாலமாக இருந்தாலும், கத்திப்பாரா மேம்பாலமாக இருந்தாலும், கோயம்பேடு மேம்பாலமாக இருந்தாலும், பாடி மேம்பாலமாக இருந்தாலும், சென்னையைச் சுற்றி, சுற்றியுள்ள புறநகர் மேம்பாலங்கள் எல்லாம் தேசிய நெடுஞ்சாலைத் துறையின் கீழ் கட்டப்பட்டவை. காலம் உள்ள வரை இந்த மேம்பாலங்கள் டி.ஆர்.பாலு அவர்களின் பெயரைச் சொல்லும்.



தமிழகத்தில் இருக்கிற நெடுஞ்சாலைகள், அவர் ஒன்றிய அரசின் அமைச்சராக இருந்தபோது 85,000 கோடிக்கு, இருக்கிற அத்தனைச் சாலைகளையும், ஒரு வழிப் பாதைகளை இருவழிப் பாதைகளாகவும், இருவழிப் பாதைகளை நான்கு வழிப்பாதைகளாகவும், நான்கு வழிச் சாலைகளை, ஆறு வழிச் சாலைகளாகவும் மாற்றிக் காட்டி தமிழகத்தில் இருக்கிற எல்லா இடங்களையும் ஒரு குறுகிய தேசத்திற்குள் இணைத்த ஒரு மகத்தான சக்தி டி.ஆர்.பாலு அவர்கள். மிகச் சிறந்த நாடாளுமன்ற உறுப்பினர்.

கடந்த ஐந்து ஆண்டுகளில், நாடாளுமன்றத்தில் பங்கேற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் வருகையின் சாராசரி என்பது 79ஆக இருக்கிறது. டி.ஆர்.பாலு அவர்களின் நாடாளுமன்ற வருகை சதவிகிதம் என்பது 85 சதவிகிதமாக இருக்கிறது. தமிழகத்தில்கூட ஒரு முன்னணியில் இருக்கிறவர். தமிழ்நாட்டில் ஒரு இயக்கத்தில் பொருளாளராக இருக்கிறார். ஒன்பதரை கோடிபேரை கட்டி ஆளுகிற தி.மு.க என்ற மாபெரும் இயக்கத்தின் பொருளாளர். இருந்தாலும் நமது கடமை பாராளுமன்ற இயக்கத்திலும் பங்கேற்க வேண்டும் என்ற கடமையோடு பணியாற்றியிருக்கிறார். எனவே அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட திருப்பெரும்புதூர் தொகுதியின் தேவைகளை நாடாளுமன்றத்தில் எடுத்துச் சொல்வதற்கான அந்த வாய்ப்பைத் தொடர்ந்து பயன்படுத்திக்கொண்டார். அதோடு மட்டுமல்ல தமிழகத்தை பா.ஜ.க. வஞ்சித்துக்கொண்டிருக்கிறதே அதையும் எடுத்துச்சொல்வதற்கு தவறவில்லை.

### மழை வெள்ளத்திற்கு நிதி ஒதுக்காத ஒன்றிய அரசு!

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தென் மாவட்டங்களுக்கு வெள்ள நிவாரண நிதி ரூ.18,612 கோடி வேண்டுமென்று சொன்னார். தரவில்லை. அதை தொடர்ந்து வலியுறுத்தியவர் டி.ஆர். பாலு. அதேபோல் சென்னை பெரு வெள்ளப் பாதிப்பிற்கு ரூ.19,292 கோடி வேண்டி திட்டமதிப்பீடுகள் அனுப்பப்பட்டது. இவற்றை நாடாளுமன்றத்தில் ஆறு, ஏழு முறை சுட்டிக்காட்டிய டி. ஆர்.பாலு அவர்கள், தி.மு. கழகத்தின் சார்பில், சென்னை மக்களின் சார்பில், காஞ்சிபுரம் மக்களின் சார்பில், திருவள்ளூர் மக்களின் சார்பில் அதை நாடாளுமன்றத்தில் வலியுறுத்திப் பேசினார். இந்த ரூ.37,906 கோடி ரூபாயை ஒன்றிய அரசிற்கு கோரிக்கை விடுத்து, ஒரு நயா பைசாக் கூட வரவில்லை.

இப்படி தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசு ஆட்சிப் பொறுப்பேற்றப் போது 2014ஆம் ஆண்டு ஒரு லிட்டர் பெட்ரோல் விலை ரூ.66.4 காசாக இருந்தது. இப்போது ஒரு லிட்டர் பெட்ரோல் விலை ரூ.100.75 காசாக ஆட்சிக்கு வந்து அதை இரண்டுமடங்காக ஆக்கியிருக்கிறார்கள். அதேபோல் டீசல் விலை ரூ.50.32 காசாக இருந்தது. தற்போது ஒரு லிட்டர் டீசல் விலை ரூ.92.34 காசாக நூறு ரூபாயை நோக்கி சென்றுக்கொண்டிருக்கிறது. எனவே இந்த மோடி அரசிற்கு மிகப்பெரிய பாடத்தைக் கற்பிக்க வேண்டும்.

டி.ஆர்.பாலு அவர்கள் நாடாளுமன்றத்தில் பேசிய பேச்சுகள், நிறைவேற்றிய மசோதாக்கள் ஏராளமாக இருக்கிறது. ஒரு புத்தகமே போடும் அளவுக்கு ஏராளமானத் திட்டங்கள் குறித்து பேசியிருக்கிறார். தமிழகத்திலே நீட் தேர்வு விலக்கிற்காக எத்தனை முறைப் பேசுகியிருக்கிறார். அதேபோல் தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள் ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பி, அவை ஒப்புதல் அளிக்காமல் கிடப்பிலேப் போட்டிருக்கிறார் என்பதை சுற்றிக்காட்டி பாராளுமன்றத்தில் ஆற்றிய உரைகள், பல ஆயிரம் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுத்தத்தை எதிர்த்து பேசியிருக்கிறார். இலங்கை மீனவர்களால், தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை எதிர்த்து பேசியிருக்கிறார்.

தமிழகத்திலே இருக்கிற கேந்திரியா வித்யாலயாப் பள்ளிகளில் தமிழ் பாடம் கற்பிக்க வேண்டுமென்பது குறித்து பேசியிருக்கிறார். ஓ.பி.சி. இடஒதுக்கீடு குறித்து உச்சநீதிமன்றத் தீர்ப்புக் குறித்து அவர்நாடாளுமன்றத்தில் அளித்த வேண்டுகோள். கொரோனா பேரிடர் காலத்தில் தமிழகத்தை அப்பேரிடலிருந்து மீட்பதற்கு அவர் போராடி பெற்றுத்தந்த விசயங்கள் இப்படி.... எதிர்க்கட்சியாக இருந்தபோதுகூட எந்தளவுக்கு செய்தார் என்பதை நாமறிவோம். காரம்பாக்கம் கணபதி, அண்ணன் டி.ஆர்.பாலு அவர்கள் எழுதிய அந்தப் புத்தகங்களை எனக்குப் பரிசாக அளித்திருக்கிறார். அந்த செய்திகளைப் படித்துத் தெரிந்துகொள்ளவேண்டிய பொக்கிசங்கள் அவை.

டி.ஆர்.பாலு அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் ஒரு மிகச் சிறந்த ஆளுமையாக விளங்கிக்கொண்டிருக்கிறார். இயக்கப் பணியாக இருந்தாலும், அரசுப் பணியாக இருந்தாலும் மிகச் சிறப்பாக செய்துமுடிக்கக்கூடியவர். அத்தகைய சிறப்புவாய்ந்த டி.ஆர். பாலு அவர்கள் திருப்பெரும்புதூர் தொகுதியில் மீண்டும் போட்டியிடுகிறார். அவரை மிகப்பெரிய அளவில் வெற்றிபெற வைத்து நாடாளுமன்றத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்பது நம் அனைவருடைய கடமையும் ஆகும்.

### பா.ஜ.க. ஆட்சியின் தோல்விமுகம்!

கடந்த ஒரு வார காலமாக நடந்துக்கொண்டிருப்பதைப் பார்த்தால் நம்மால் நன்குப் புரிந்துகொள்ளமுடியும். வடகிழக்கு மாகாணங்கள் 7 இருக்கிறது. அஸ்ஸாம், மணிப்பூர், நாகாலாந்து, திரிபுரா, மேகாலயா போன்ற 7 மாநிலங்களில் பா.ஜ.க அதிகாரப்பூர்வமாக அறிவித்திருக்கிறது. மணிப்பூர், நாகாலாந்து, திரிபுரா ஆகிய மாகாணங்களில் நாங்கள் தேர்தலில் நிற்கப்போவதில்லை என்று பா.ஜ.க.வே அறிவித்திருக்கிறது. வடகிழக்கு மாகாணங்களில் 3 மாநிலங்களில் பா.ஜ.க. தேர்தலில் நிற்காது என்று அறிவித்திருக்கிறார்கள். ஏனென்றால் இந்த மூன்று மாநிலங்களில் மட்டுமல்ல, இந்த ஏழு வடகிழக்கு மாநிலங்களிலும் டெபாசிட் போய்விடும் என்ற காரணத்தினால்தான்.

குஜராத் மாநிலம் வடோதராத் தொகுதியைச் சேந்தவரும், சவர்கந்தா என்ற தொகுதியைச் சேர்ந்தவரும், 2 நாடாளுமன்ற வேட்பாளர்கள், பா.ஜ.க.வின் அதிகாரப்பூர்வ வேட்பாளர் திஞ்சன்பன்பட் என்பவரும், பிகாஜி தாகூர் என்பவரும் இன்றைக்கு வேட்பாளராக விருப்பமில்லை என்று தங்களை அதிலிருந்து விடுவித்துக்கொண்டிருக்கிறார்கள்.பா.ஜ.க வேட்பாளராக அறிவித்து, அறிவித்ததற்குப்பிறகு இரண்டு வேட்பாளர்கள் நாங்கள் களத்தில் நிற்பதற்கு தயாராக இல்லை என்று சொன்னால், அப்படியானால் என்ன அர்த்தம், தேர்தலில் வெற்றி பெறாத இடத்தில் நாங்கள் ஏன் நிற்க வேண்டும் என்பதால் தான். வடகிழக்கு மாநிலங்களில், வட மாநிலங்கள், தென்னகத்திலும் பா.ஜ.க.வின் தோல்வி என்பது நூறு சதவிகிதம் உறுதியாகியிருக்கிறது.

### இந்தியா கூட்டணியின் மிகப்பெரிய வெற்றி!

இந்தியா கூட்டணியின் மிகப்பெரிய வெற்றி நடைபெற இருக்கிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் யாரை கைநீட்டி சொல்கிறாரோ, அவர் பிரதமர் என்ற சூழல் ஜூன் 4ஆம் தேதி நிகழ இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏன் பா.ஜ.க. ஆட்சிக்கு வரக்கூடாது. தொடர்ந்து மாநில உரிமைகளைப் பறித்துக்கொண்டிருக்கிற பா.ஜ.க. ஆட்சிக்கு வரவேண்டுமா? இந்தியா முழுவதிலும் இளைஞர்கள் வாழ்வை அளித்துக்கொண்டிருக்கிறது. இந்தியா தொழில் முடக்கத்தில் முதலிடத்தில் இருக்கிறதே மீண்டும் பா.ஜ.க. ஆட்சிக்கு வரவேண்டுமா? பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயமாக்கிக்கொண்டிருக்கிறார்களே, அந்த பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வரவேண்டுமா? குழந்தைகள், பெண்கள் இவர்களுக்குப் பாதுகாப்பு இல்லாமல், வன்புனர்வு போன்ற கொடுமைகளால் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்களே, அத்தகைய பா.ஜ.க மீண்டும் ஆட்சிக்கு வரவேண்டுமா?

கனிம வளங்களைச் சுரண்டி நாட்டைக் கொள்ளையடித்துக்கொண்டிருக்கிறார்களே அந்த பா.ஜ.க ஆட்சிக்கு மீண்டும் வரவேண்டுமா? இந்தி மொழியைத் திணித்துத் தமிழர்களைத் தொடர்ந்து தொல்லைக்கு ஆளாக்கிக் கொண்டிருக்கிறார்களே அந்த பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வரவேண்டுமா? மதம், கடவுளர்களின் பெயரால் இந்த நாட்டை சீரழித்துக்கொண்டிருக்கிற அந்த கயவர்கள் கூட்டம் மீண்டும் ஆட்சிக்கு வரவேண்டுமா? என்பதை நாம் நிச்சயம் இன்றைக்கு உணர்ந்துப் பார்க்க வேண்டும்.

ஆம் ஆத்மி கட்சியின் மாவட்ட செயலாளர் சொன்னார். டெல்லி முதல்வர் கெஜ்ரிவால் இன்றைக்கு கைதுச் செய்யப்பட்டிருக்கிறார். கடந்த ஒன்றரை மாதங்களுக்கு முன்னால் ஒரு முதல்வர் கைது செய்யப்பட்டார். இப்படி இரண்டு மாதக் காலத்தில் முதல்வர்கள் கைதுசெய்யப்படுவது இதுதான் இந்திய வரலாற்றில் முதல்முறை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர்கள் கைதுசெய்யப்பட்டுக்கொண்டிருக்கிற ஒரு வன்கொடுமை இந்தியாவில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இப்படி இயற்கை வளங்களைக் கொள்ளையடித்துக்கொண்டிருக்கிற, கார்ப்பரேட்களின் நலன்களுக்காகவே ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிற ஆட்சியை விலக்கிட வேண்டும். இந்த ஆட்சியை வீட்டுக்கு அனுப்பிடவேண்டும் மரியாதைக்குரிய அண்ணன் டி.ஆர். பாலு அவர்கள் பல லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற வேண்டும்.

கடந்த முறை 5 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றாரே, அது இந்த முறை அது இரண்டு மடங்காக வெற்றியாக அவருக்கு தந்து நாடாளுமன்றத்திற்கு டி. ஆர்.பாலு அவர்களை அனுப்பி வைப்பது நம் அனைவருடைய கடமை. எனவே இந்த வெற்றி என்பது தமிழ்நாட்டின் முதலமைச்சர் தொடர்ந்து உழைத்துக்கொண்டிருக்கிறாரே அவருக்கு நாம் வழங்கும் மிகப்பெரிய அளவிலான பரிசு. டி.ஆர்.பாலு அவர்களை நாடாளுமன்றத்திற்கு அனுப்புவோம். திருப்பெரும்புதூர் மக்களின் நலனைக் காப்போம் என்று கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் உரையாற்றினார்.

## பா.ஜ.க வின் நாடகம், மக்கள் அறிவார்கள்: தமிழ்நாட்டில் ஒரு தொகுதிகூட அவர்களுக்குக் கிடைக்காது!

# தேர்தலுக்காக நரேந்திர மோடி சுற்றிச் சுற்றி வருகிறார்!

## காஞ்சிபுரம் தேர்தல் பிரச்சாரத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**காஞ்சிபுரம், மார்ச் 26 -**

**காஞ்சிபுரத்தில் நடைபெற்ற பிரமாண்டமான தேர்தல் பரப்புரையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு, காஞ்சிபுரம் நாடாளுமன்ற வேட்பாளர் ஜி.செல்வத்துக்கு, ஆதரவாக வாக்கு சேகரித்தார்.**

**அப்போது அவர், ``பா.ஜ.க.வின் நாடகம், மக்கள் அறிவார்கள், தேர்தலுக்காக ஒன்றிய பிரதமர் நரேந்திர மோடி சுற்றிச் சுற்றிவருகிறார், அவர்களுக்கு தமிழ்நாட்டில் ஒரு தொகுதி கூட கிடைக்காது என்று குறிப்பிட்டார்.**

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:



### வெற்றிச் சின்னம்

இந்திய அளவில் வெற்றி பெறக் கூடிய இந்தியா கூட்டணி சார்பாக, நம் கழகத்தின் வெற்றி வேட்பாளராகப் போட்டியிடுகிற முத்தமிழறிஞர் கலைஞரின் வாழ்த்தையும் அன்பையும் பெற்ற வேட்பாளர், நம் கழகத் தலைவர் முதலமைச்சரின் அன்பை பெற்ற வேட்பாளர், எல்லாவற்றை விடவும் முக்கியமாக காஞ்சிபுரம் மக்களின் அமோக அன்பையும் ஆதரவையும் பெற்ற வேட்பாளர் செல்வம் அவர்களுக்கு நம் வெற்றிச் சின்னம் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

2019 நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்துக்கு நான் வந்திருந்தேன். அப்போது அண்ணன செல்வம் அவர்களை, 2 லட்சத்து 87 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்தீர்கள். நாடாளுமன்றத்தில் அவர் உங்களுடைய குரலாக மிகச் சிறப்பாகச் செயல்பட்டார். உங்களின் தொகுதிப் பிரச்சினைகளைப் பேசினார். எனவேதான் தலைவர் அவர்கள் இவரின் சிறப்பான செயல்பாடுகளுக்காக மீண்டும் அவருக்கு இந்த வாய்ப்பை அளித்திருக்கிறார். அவரை உங்களிடம் ஒப்படைத்து இருக்கிறார். இனிமேல் உங்களுடைய கடமை அவரை வெற்றி பெற வைத்து, சென்ற முறை வாங்கிய வாக்கு வித்தியாசத்தை விட, அதிகமான வாக்கு வித்தியாசத்தில் அவரை வெற்றி பெற வைக்க வேண்டும்.

இந்தத் தேர்தலில், 5 லட்சம் வாக்குகள் பெற்று அண்ணன் செல்வம் அவர்களை வெற்றி பெற வைத்துவிட்டீர்கள் என்றால், நான் மாதம் இரண்டு முறை காஞ்சிபுரம் மாவட்டத்துக்கு வந்து உங்கள் கூட இருந்து உங்கள் பிரச்சினை அத்தனையையும் நான் தீர்த்து வைக்கிறேன். நீங்கள் சொன்ன வாக்குறுதியைக் காப்பாற்றினீர்கள் என்றால், நான் சொன்ன வாக்குறுதியை 100 சதவிகிதம் நான் காப்பாற்றுவேன்.

### என்னென்ன சாதனைகள்?

முதலில் காஞ்சிபுரம் நாடாளுமன்றத் தொகுதியில் என்னென்ன சாதனைகளைச் செய்திருக்கிறோம் என்பதை, அவற்றில் சிலவற்றை மட்டும் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன். காஞ்சிபுரம் புற்றுநோய் மருத்துவமனையை தரம் உயர்த்த சுமார் 13 கோடி ரூபாய் செலவில் அதிநவீன மருத்துவக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையினை தரம் உயர்த்த சுமார் 36 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மதுராந்தகம் தொகுதியில் 120 கோடி ரூபாய் செலவில் மதுராந்தகம் ஏரி தூர்வாரப்பட்டு, ஏரிகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு நாம் செய்திருக்கக் கூடிய சாதனைகள் என்னவென்று பார்த்தால், மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு 343 கோடி ரூபாய்க்குப் புதிய புதை வடிகால் மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்புப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

7 கோடி ரூபாய் செலவில் ராஜாஜி மார்க்கெட் கட்டிடம் கட்டும் பணி மற்றும் 4.5 கோடி ரூபாய் மதிப்பில் நேரு மார்க்கெட் கட்டிடம் கட்டும் பணி ஆகியவை நடைபெற்று வருகின்றன. 10 கோடி ரூபாயில் மாநகராட்சி அலுவலகம் கட்டும் பணி, 2.5 கோடி ரூபாயில் மேகவதி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுகிற பணி ஆகியவையும் நடைபெற்று வருகின்றன. இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக, கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் காஞ்சிபுரம் மாநகராட்சியின் முக்கியப் பகுதிகளில் 5 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டு தற்போது மக்கள் பயன்பாட்டில் உள்ளது. 6 ஆரம்ப சுகாதார மையங்கள், ஒரு துணை சுகாதார மையம் ஆகிய வற்றுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நேரத்தில் நம் தலைவர் அவர்கள், சில வாக்குறுதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். நம் கூட்டணி வெற்றி பெற்றால் காஞ்சிபுரம் மக்களவைத் தொகுதிக்கு என்னென்ன வாக்குறுதிகள் கொடுத்திருக்கிறார் என்று இங்கே ஞாபகப்படுத்துகிறேன்.

### மருத்துவக் கல்லூரி

காஞ்சிபுரம் மாவட்டத்திற்குத் தனியாக ஒரு மருத்துவக் கல்லூரி கொண்டு வரப்படும். அரக்கோணத்தில் இருந்து செங்கல்பட்டிற்கு காஞ்சிபுரம் வழியாகச் செல்லும் ரயில் பாதை, இரு வழிப்பாதையாக மாற்றித் தரப்படும். செங்கல்பட்டில் உள்ள ஒருங்கிணைந்த நோய்த் தடுப்பு மருந்து உற்பத்தி வளாகத்தை மேம்படுத்தி உற்பத்தி தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும். காஞ்சிபுரம் கிழக்கு ரயில்வே நிலையத்தில் செயல்படும் பலதரப்பட்ட சரக்குப் போக்குவரத்தும், மிகப்பெரிய ஆட்டோமொபைல் சரக்கு முனையமாகச் செயல்படும் போக்குவரத்தும் மேலும் மேம்படுத்தப்படும்.

காஞ்சிபுரம் மற்றும் சுற்று வட்டார மக்களுடைய தேவையைக் கருத்தில் கொண்டு கூடுதல் மின்சார ரயில் சேவை வழங்க வலியுறுத்தப்படும். காஞ்சிபுரம் நெசவாளர்களுக்குப் பட்டு, பாவு, ஜரிகை போன்ற பொருட்களுக்கு முழுமையாக ஜி.எஸ்.டி வரி நீக்கப்படும். கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் மண்ணின் மைந்தர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை கண்டிப்பாகத் தரப்படும்.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒவ்வொரு தேர்தலின் போதும் தேர்தல் அறிக்கையை வெளியிட்டுச் சொல்வார், 'சொல்வதைச் செய்வோம், செய்வதைத்தான் சொல்வோம்' என்று. அப்படி அவர் சொன்னதை எல்லாம் செய்து காட்டிய தலைவர் நம் கலைஞர் அவர்கள். நம் கழகத் தலைவர் அவர்கள் தலைமையில், 2021 இல் ஆட்சிக்கு வந்தோம். அப்போது என்ன நிலைமை என்று உங்களுக்குத் தெரியும். கோவிட் இரண்டாவது பெருந்தொற்று.

### அனுமதி கிடையாது

மகளிர் இவ்வளவு பேர் இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறீர்கள். 200 வருடத்திற்கு முன்பு மகளிர் வீட்டை விட்டு வெளியே வர முடியாது. இன்னும் சொல்லப் போனால் மேலாடை போடுவதற்குக் கூட உங்களுக்கு அனுமதி கிடையாது. இதையெல்லாம் எதிர்த்து உருவானதுதான் சமூக நீதி இயக்கம், திராவிட இயக்கம். ஆனால் நம்முடைய பெண்கள் படிக்க வேண்டும், பள்ளிக்கூடம் படித்தால் மட்டும் பத்தாது, கல்லூரிக்கும் வந்து படிக்க வேண்டும் என்று 'புதுமைப்பெண்' என்ற திட்டத்தை தலைவர் அவர்கள் உருவாக்கினார்.

### பல்லைக் காட்டிய புகைப்படம்

நேற்று நம் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் திருச்சியில் சென்று பேசியிருக்கிறார். 'உதயநிதி திருப்பி கல்லைத் தூக்கிவிட்டார், கல்லைத் தூக்கிவிட்டார்' என்று. இதுதான் அந்தக் கல். இதுதான் மோடி அவர்களும் எடப்பாடி பழனிச்சாமி அவர்களும் அமித்ஷா அவர்களும் 2019 ஆம் ஆண்டு எய்ம்ஸ் மருத்துவமனைக்காக அடிக்கல் நாட்டை விட்டுச் சென்ற கல். இருந்தது ஒரே கல் அதையும் நான் எடுத்து வந்துவிட்டேன். நீங்கள் திருப்பி மருத்துவமனை கட்டுகின்ற வரைக்கும் நான் இந்தக் கல்லைத் திருப்பிக் கொடுக்க மாட்டேன். கண்டிப்பாகக் கொடுக்க மாட்டேன்.

என்ன தெரியுமா சொல்கிறார் எடப்பாடி பழனிச்சாமி? 'உதயநிதி, திருப்பி கல்லை எடுத்துவிட்டார் என்ற ஸ்கிரிப்ட்டை மாற்றிப் பேச வேண்டும்' என்கிறார். நானாவது கல்லைக் காட்டினேன். இங்கே ஒருத்தர் பல்லைக் காட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார் பாருங்கள். நரேந்திர மோடியிடம் வெறும் பல்லைத் தான் அவர் காட்டிக் கொண்டிருக்கிறார். இது எப்போது எடுத்த புகைப்படம் தெரியுமா? 2019 ஜனவரி 27 ஆம் தேதி, அதே மதுரை எய்ம்ஸ் அடிக்கல் நாட்டு விழாவில் எடுத்த பல்லைக் காட்டிய புகைப்படம்.

நான் ஏன் என் கொள்கையை மாற்றிப் பேச வேண்டும்? எங்களுக்கு இருக்கிற ஒரே கொள்கை, 'எங்களுக்கு எய்ம்ஸ் மருத்துவமனை வேண்டும். எங்களுக்கு நீட் தேர்வு வேண்டாம். எங்களுக்கு மாநில சுயாட்சி வேண்டும்' என்பதுதான். திரு.எடப்பாடி பழனிச்சாமி அவர்களே என் வாயை நோண்டாதீர்கள். உங்களை மாதிரி நேரத்திற்குத் தகுந்த மாதிரி, ஆளுக்குத் தகுந்த மாதிரி ஸ்கிரிப்ட்டை மாற்றிப் பேச எனக்குத் தெரியாது.

நீங்கள் ஓ.பி.எஸ்.யைப் பார்த்தால் ஒரு மாதிரி பேசுவீர்கள். சசிகலாவைப் பார்த்தால் ஒரு மாதிரி பேசுவீர்கள். மோடியைப் பார்த்தால் ஒரு மாதிரி பேசுவீர்கள். ஜெ.தீபாவைப் பார்த்தால் ஒரு மாதிரி பேசுவீர்கள். ஜெ.தீபாவின் டிரைவரைப் பார்த்தால் ஒரு மாதிரி பேசுவீர்கள்.

உங்களை மாதிரி மாற்றிப் பேசுவதற்கு தி.மு.க ஒன்றும் பச்சோந்தி கிடையாது. நான் கலைஞரின் பேரன். நான் என்னுடைய கொள்கையைத்தான் பேசுவேன். எங்களின் மாநில உரிமைகளை மீட்பதற்கு என்னென்ன போராட்டங்கள் தேவையோ, அத்தனைப் போராட்டங்களையும் நான் நடத்துவேன்.

இப்போது தேர்தல் வருகிறது என்பதால், கடந்த 10 நாட்களாக இங்கேயே சுற்றிச் சுற்றி வருகிறார் மோடி அவர்கள். அவர் இங்கேயே தங்கி இருந்தாலும் அவர்களால் ஒரு தொகுதி கூட இங்கே வெற்றி பெற முடியாது. நான் சவால் விடுகிறேன். ராமநாதபுரம் தொகுதியில்தான் நிற்கப் போகிறேன் என்று மோடி சொன்னதாகப் புரளி எல்லாம் கிளப்பிவிட்டார்கள். அதனால்தான் ராமநாதபுரத்தில் என்னுடைய முதல் பிரச்சாரத்தை ஆரம்பித்தேன்.

காஞ்சிபுரத்தில் இன்று சொல்கிறேன். பேரறிஞர் அண்ணா இதையெல்லாம் உணர்ந்துதான் அப்போதே சொன்னார், 'ஆட்டுக்கு தாடியும் நாட்டுக்கு ஆளுநரும் தேவையே இல்லை' என்று சொன்னார். 'வின்னர்' படம் பார்த்திருக்கிறீர்களா? 'வின்னர்' படத்தில் ஒரு கேரக்டர் வரும். அதே கேரக்டர்தான் இவர். தைரியமாக வருவது மாதிரி வருவார். ஆனால் பயந்து ஓடிப் போய் விடுவார். முதல் சட்டமன்றக் கூட்டத்தொடருக்கு வந்து நாம் எழுதிக் கொடுத்ததைப் படிக்க வேண்டியதுதான் அவருடைய வேலை. அவர் ஒரு தபால்காரர், அவ்வளவுதான். நாம் சொல்வதை, ஒன்றிய அரசிடம் சொல்ல வேண்டும். ஒன்றிய அரசு சொல்வதை, நம்மிடம் சொல்ல வேண்டும்.

ஆனால் ஆளுநர் என்ன செய்தார் தெரியுமா? தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, அண்ணல் அம்பேத்கர், டாக்டர் கலைஞர் அவர்களின் பெயரை எல்லாம் தவிர்த்துவிட்டு அவர் இஷ்டம் போல் பேசினார். நம் தலைவர் எழுந்து சட்டமன்றத்தில் சொல்லிவிட்டார். 'திரு.ஆளுநர் அவர்களே, நீங்கள் பேசுவது ஒன்றுமே அவைக் குறிப்பில் ஏறாது. நாங்கள் சொல்வதுதான் ஏறும்' என்றவுடன் விறுவிறு என்று கோபித்துக் கொண்டு ஓடிவிட்டார், கைப்புள்ள..!

### தமிழ்த்தாய் வாழ்த்து

அதே மாதிரி இன்னொன்று. ஆளுநர் என்ன சொன்னார்? தமிழ்நாடு என்ற பெயரை மாற்ற வேண்டும் என்று சொன்னார். திடீரென்று ஒரு நாள் தமிழ்நாடு என்ற பெயர் எனக்குப் பிடிக்கவில்லை, பெயரை மாற்றுங்கள் என்று சொன்னார். அனைத்துத் தலைவர்களும் எதிர்ப்புத் தெரிவித்தார்கள்.

ஒட்டுமொத்த தமிழ்நாடும் எதிர்ப்புத் தெரிவித்தோம். அதன் பிறகு, 'என்னை மன்னித்து விடுங்கள். நான் தப்பாகப் பேசிவிட்டேன்' என்றார்.

இப்போது திருப்பி என்ன செய்திருக்கிறார் என்றால், சென்ற சட்டமன்றக் கூட்டத்தொடரில் 'தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடத் தேவையில்லை. தேசிய கீதம் பாடினால் போதும். தமிழ்த்தாய் வாழ்த்து பாடத் தேவையில்லை' என்று சொன்னார்.

ஆளுநர் அவர்களே, எங்களுக்குத் தேசிய கீதம் முக்கியம். ஆனால் அதைவிட முக்கியம், எங்களின் தமிழ்த்தாய் வாழ்த்து. தமிழ்த்தாய் வாழ்த்தின் உரிமையை நாங்கள் விட்டுக் கொடுக்க மாட்டோம். எங்களின் தாய்மொழியை நாங்கள் விட்டுக் கொடுக்க மாட்டோம்.

உங்களுக்குத் தெரியும். இப்போது கடைசியாக இரண்டு நாட்களுக்கு முன்பு நம் அமைச்சர்கள் எப்படி அ.தி.மு.க முன்னாள் அமைச்சர்களை எல்லாம் ஈ.டி, சி.பி.ஐ, ஐ.டி போன்ற அமைப்புகளை மிரட்டி வைத்திருந்தார்களோ, அதே மாதிரி தி.மு.க அமைச்சர்களையும் மிரட்ட வேண்டும் என்று நினைக்கிறார்கள்.

நான் பலமுறை சொல்லிவிட்டேன். மோடி அவர்களே, நாங்கள் மோடிக்கும் பயப்பட மாட்டோம். ஈ.டி.க்கும் பயப்பட மாட்டோம்'. நான் கலைஞரின் பேரன். வழக்கு எதுவாக இருந்தாலும் சந்திக்கிறேன் என்று சொன்னேன். பொய் வழக்குகளைப் போட்டு நம் அமைச்சர்களை எல்லாம் கைது செய்தார்கள்.

நம் அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்கள் மீது பொய் வழக்குப் போட்டு, இதுவரைக்கும் எட்டு மாதம் சிறைக்குள் இருக்கிறார். 29 முறை ஜாமீனுக்கு விண்ணப்பித்து உள்ளோம். அவர் விரைவில் வெளியே வந்துவிடுவார். விரைவில் நல்ல முடிவு கிடைக்கும்.

அதேபோல் அமைச்சர் அண்ணன் பொன்முடி அவர்களின் மேல் ஒரு பொய் வழக்கைப் போட்டு, கைது செய்து, அவரைத் தகுதி நீக்கம் செய்தார்கள். நம் தலைவர் அவர்களும் பொன்முடி அவர்களும் உச்ச நீதிமன்றம் வரை சென்று, உச்ச நீதிமன்றம் அவரை அமைச்சர் ஆக்கலாம் என்று சொல்லிவிட்டது. உச்சநீதிமன்றம் ஆளுநரைக் கண்டிக்கிறது. ஆனால் ஆளுநர் முடியாது என்கிறார்.

இந்திய வரலாற்றிலேயே ஓர் உச்ச நீதிமன்ற நீதிபதி, ஆளுநரை இந்த அளவிற்குத் தரக்குறைவாகப் பேசியதே கிடையாது. 'நீங்கள் என்ன ஆளுநர் வேலை பார்க்கிறீர்களா? இல்லை, வேறு வேலை பார்க்கிறீர்களா?' என்றே கேட்டுவிட்டார்கள். நம் தலைவர் அவர்கள் என்ன தெரியுமா செய்தார்? நேராகச் சென்று அண்ணன் பொன்முடி அவர்களுக்கு அமைச்சர் பொறுப்பை ஏற்றிவிட்டு, ஆளுநரிடம் கை கொடுத்துவிட்டு, 'நான் பிரச்சாரத்திற்குத்தான் கிளம்புகிறேன்' என்று சொல்லிவிட்டு அவரிடமே வாழ்த்து வாங்கிவிட்டுப் பிரச்சாரத்தை ஆரம்பித்தார்.

'தயவு செய்து நம்முடைய ஆளுநர் அவர்களையும், நரேந்திர மோடி அவர்களையும் அடிக்கடி வரச் சொல்லுங்கள். எங்களின் பிரச்சாரத்தில் பாதியை அவர்களே முடித்துவிடுகிறார்கள்' என்று நம் தலைவர் அவர்கள் அடிக்கடி சொல்வார்.

### ஏன் வீட்டிற்கு அனுப்ப வேண்டும்?

வருகின்ற ஏப்ரல் 19 ஆம் தேதி வாக்குச் சாவடிக்குச் சென்று, நீங்கள் அண்ணன் செல்வம் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வைக்க வேண்டும். நான் ஒன்றும் தேர்தலுக்குத் தேர்தல் வரும் ஆள் கிடையாது.

ஆனால் நீங்கள் அப்படித்தான் வந்து சந்திக்கிற ஆள். இன்று நான் உங்களிடம் பிரச்சாரத்தில் தேர்தல் வாக்குறுதியைச் சொல்லி இருக்கிறேன்.

நம் சாதனைகளைச் சொல்லி இருக்கிறேன். ஒன்றிய பா.ஜ.க அரசை ஏன் வீட்டிற்கு அனுப்ப வேண்டும் என்று சொல்லி இருக்கிறேன். இதற்குப் பிறகு தலைவர் இங்கு வருவார். நான் சும்மா டிரைலர்தான். மெயின் பிக்சர் பின்னாடி வந்து கொண்டிருக்கிறது. அதுதான் நம் தலைவர் அவர்கள்.

இன்னும் ஒரு வாரத்தில் தலைவர் அவர்கள் வருவார், உங்களை யெல்லாம் சந்திப்பார்.

ஜூன் 3 ஆம் தேதி, தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் பரிசாக, நாம் 40க்கு 40 தொகுதிளில் வெற்றி பெற வேண்டும். நூறாவது பிறந்தநாள் முடிந்து 101 வது பிறந்த நாளில் அடி எடுத்து வைக்கிறார். இதைவிட மிகப்பெரிய பிறந்தநாள் பரிசை நம் தலைவர் கலைஞர் அவர்களுக்கு நாம் கொடுத்துவிட முடியாது. சென்ற தேர்தலில் 39க்கு 38 தொகுதிகளில் வெற்றி பெற்றோம்.

இந்த முறை அந்தச் சாதனையையும் முறியடித்து, கண்டிப்பாக தமிழ்நாடு, புதுச்சேரி சேர்ந்து 40க்கு 40 வெற்றி பெற்று நாம் யாரை முடிவ் செய்கிறோமோ, நம் தலைவர் யாரைக் கை காட்டுகிறாரோ, தமிழ்நாட்டு மக்கள் நீங்கள் யாரை விரும்புகிறீர்களோ அவர்தான் அடுத்த பிரதமராக உட்கார வேண்டும் என்றால், ஏப்ரல் 19 ஆம் தேதி வரைக்கும் நீங்கள் அனைவரும் களத்தில் இறங்கி பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு,

### ஆதரிப்போம் உதயசூரியன்!

உங்களை எல்லாம் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன், உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன், தலைவருடைய மகனாக இருந்து கேட்கிறேன், இன்னும் பெருமையாக, குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் பேரனாக இருந்து கேட்கிறேன்.... ஆதரிப்போம் உதயசூரியன்! உதயசூரியன்!! உதயசூரியன்!!! அண்ணன் செல்வம் அவர்களை வெற்றி பெற வைத்து நாடாளுமன்றத்திற்கு அனுப்புங்கள். உங்களின் குரலாக அவர் இருப்பார் என்று கூறிக் கொண்டு, வாய்ப்புக்கும் வரவேற்புக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

இதில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ. அன்பரசன், தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர், கழக மாணவர் அணிச் செயலாளரும் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினருமான சி.வி.எம்.பி. எழிலரசன், மேயர் மகாலட்சுமி யுவராஜ், சிறுபான்மை அணியின் மாநிலச் செயலாளர் சுபேர்கான், மாவட்டக் கழக நிர்வாகிகள் இனியரசு, கோகுல் கண்ணன், சன்பிராண்ட் ஆறுமுகம், மலர்விழி குமார், இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர்கள் அப்துல் மாலிக், பிரபு கஜேந்திரன், காஞ்சிபுரம் மாநகரச் செயலாளர் தமிழ்ச்செல்வன், மாநில நெசவாளர் அணி செயலாளர் அன்பழகன், தொண்டரணி தலைவர் சுகுமாரன், வர்த்தகர் அணி துணைச் செயலாளர் சுந்தரவதனம், வி.எல்.ராமகிருஷ்ணன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் யுவராஜ், காஞ்சிபுரம் மாநகரப் பகுதி கழகச் செயலாளர்கள் திலகர், சந்துரு, தசரதன், வெங்கடேசன், ஒன்றியச் செயலாளர்கள் பி.எம். குமார், படுநெல்லி பாபு, மாவட்ட ஊராட்சித் துணைத் தலைவர் நித்தியா சுகுமார், ஒன்றிய பெருந்தலைவர் மலர்க்கொடி குமார், தேவேந்திரன் உள்பட பலரும் க்லந்து கொண்டனர்.

---

## 10-ஆம் வகுப்பு மாணவச் செல்வங்களே;

# தேர்வை நம்பிக்கையோடு எழுதி வெற்றி பெறுங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, மார்ச் 26-

10-ஆம் வகுப்பு மாணவச் செல்வங்களே பதற்றமின்றி நம்பிக்கையோடு தேர்வு எழுதி வெற்றி பெறுங்கள் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வு எழுதவுள்ள மாணவச்செல்வங்களுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்து வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வை எழுதவுள்ள எனதருமை மாணவச் செல்வங்களே...** All the best!

**நீங்கள் பதற்றமின்றித் தேர்வை எதிர்கொள்ளத்தான் வினாத்தாளைப் படித்துப் பார்க்க முதலில் 10 நிமிடங்கள் வழங்கப்படுகிறது. அதை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.**

**இதனை மற்றுமொரு தேர்வாகக் கருதி நம்பிக்கையோடு எழுதி வெற்றி பெறுங்கள்.**

**பெற்றோர்களும் உங்கள் பிள்ளைகள் உரிய நேரத்தில் தேர்வு மையத்துக்குச் சென்றிடுவதை உறுதிசெய்யுங்கள்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.



# 2024 நாடாளுமன்றத் தேர்தல் ‘இந்தியா கூட்டணி’ வேட்பாளர்களை ஆதரித்து

கலைஞர் 100 1924 - 2023

## கழக இளைஞர் அணிச் செயலாளர் பிரச்சாரம்

2024 ஏப்ரல் 19–அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ‘இந்தியா கூட்டணி’ வேட்பாளர்களை ஆதரித்து, தமிழ்நாடு முழுவதும் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குகள் சேகரிக்கிறார்.

கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள் மேற்கொள்ளும் தேர்தல் பிரச்சார சுற்றுப்பயண விவரம் வருமாறு:–

### 26-03-2024, செவ்வாய்க்கிழமை

| | | | |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | காந்தி சிலை சந்திப்பு, திருவண்ணாமலை, திருவண்ணாமலை தெற்கு மாவட்டம். | திருவண்ணாமலை |
| 2 | காலை 10.45 மணி | பேருந்து நிலையம் அருகில், கூட்ரோடு, இறையூர், கலசப்பாக்கம், திருவண்ணாமலை தெற்கு மாவட்டம். | திருவண்ணாமலை |
| 3 | காலை 11.45 மணி | அம்பேத்கர் சிலை அருகில், செங்கம், திருவண்ணாமலை தெற்கு மாவட்டம். | திருவண்ணாமலை |
| 4 | மதியம் 12.30 மணி | பழைய பேருந்து நிலையம் அருகில், திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம். | திருவண்ணாமலை |
| | | மதிய உணவு இடைவேளை | |
| 5 | மாலை 5.00 மணி | ரயில்வே சந்திப்பு அருகில், கோடியூர், ஜோலார்ப்பேட்டை, திருப்பத்தூர் மாவட்டம். | திருவண்ணாமலை |
| 6 | மாலை 5.45 மணி | பேருந்து நிலையம் அருகில், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம். | வேலூர் |
| 7 | இரவு 6.30 மணி | ராஜீவ் காந்தி சிலை அருகில், பைபாஸ் சாலை, ஆம்பூர், திருப்பத்தூர் மாவட்டம். | வேலூர் |
| 8 | இரவு 7.30 மணி | பேருந்து நிலையம் அருகில், பேர்ணாம்பட்டு, வேலூர் மாவட்டம். | வேலூர் |
| 9 | இரவு 8.15 மணி | பேருந்து நிலையம் அருகில், குடியாத்தம், வேலூர் மாவட்டம். | வேலூர் |
| 10 | இரவு 9.00 மணி | பிரதான சாலை, பள்ளிகொண்டா, வேலூர் மாவட்டம். | வேலூர் |
| 11 | இரவு 9.30 மணி | மண்டித் தெரு, வேலூர், வேலூர் மாவட்டம். | வேலூர் |

### 27-03-2024, புதன்கிழமை

| | | | |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | பேருந்து நிலையம், ஆற்காடு, இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 2 | காலை 10.45 மணி | முத்துக்கடை பேருந்து நிலையம், இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 3 | காலை 11.30 மணி | பேருந்து நிலையம் அருகில், வாலாஜா, இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 4 | மதியம் 12.30 மணி | பேருந்து நிலையம் அருகில், சோளிங்கர் இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| | | மதிய உணவு இடைவேளை | |
| 5 | மாலை 5.00 மணி | கமலா திரையரங்கம் அருகில், திருத்தணி, திருவள்ளூர் மேற்கு மாவட்டம். | அரக்கோணம் |
| 6 | மாலை 6.00 மணி | பழைய பேருந்து நிலையம் அருகில், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 7 | மாலை 7.30 மணி | மணிக்கூண்டு, ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம். | திருப்பெரும்புதூர் |



அன்பகம்
சென்னை – 18.
நாள் : 22–03–2024.

வேட்பாளர் தொல். திருமாவளவனை ஆதரித்து

# சிதம்பரம் தொகுதி ‘இந்தியா’ கூட்டணி செயல்வீரர்கள் கூட்டம்!

## கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அறிக்கை!

சிதம்பரம், மார்ச் 26 -

இந்தியா கூட்டணி கட்சிகளின், சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் விடுதலை சிறுத்தைகள் கட்சி வேட்பாளர் தொல். திருமாவளவன், எம்.பி., அவர்களை ஆதரித்து கடலூர் மாவட்டம் சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதிக் குட்பட்ட காட்டுமன்னார் கோவில், சிதம்பரம், புவனகிரி தொகுதி செயல்வீரர்கள் கூட்டம் இன்று (26.03.2024 செவ்வாய்கிழமை) மாலை 3.00 மணியளவில் சிதம்பரம், புறவழிச் சாலை, புதிய பேருந்து நிலையம் அருகில் நடைபெறவுள்ளது. என்று கடலூர் கிழக்கு மாவட்ட செயலாளர், எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு: -

முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக் கிணங்க, தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணி கட்சிகளின், சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் விடுதலை சிறுத்தைகள் கட்சி வேட்பாளர் தொல். திருமாவளவன், எம்.பி.,யை



ஆதரித்து கடலூர் மாவட்டம் சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட - காட்டுமன்னார் கோவில், சிதம்பரம், புவனகிரி தொகுதி செயல்வீரர்கள் கூட்டம் இன்று ( 26.03.2024 செவ்வாய்கிழமை) மாலை 3.00 மணியளவில் சிதம்பரம், புறவழிச்சாலை, புதிய பேருந்து நிலையம் அருகில் நடைபெறவுள்ளது.

அதுசமயம், இக்கூட்டத்தில் திமுக இந்தியா கூட்டணி கட்சிகளின் கடலூர் மாவட்டத்திற்குட்பட்ட தி.மு.க., இந்திய தேசிய காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், திராவிடர் கழகம், ம.தி.மு.க., இந்திய யூனியன் முஸ்லீம் லீக், விடுதலை சிறுத்தைகள் கட்சி, தமிழக வாழ்வுரிமை கட்சி, மக்கள் நீதி மய்யம், மனித நேய மக்கள் கட்சி, மூவேந்தர் முன்னேற்றக் கழகம், தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி, எம்.ஜி.ஆர்.கழகம்,

கொங்குநாடு மக்கள் கட்சி, மனித நேய ஜனநாயக கட்சி, இந்திய தேசிய லீக், இந்திய சமூக நீதி இயக்கம், தமிழ் மாநில தேசிய லீக், திராவிட இயக்க தமிழர் பேரவை, சமத்துவ மக்கள் கழகம், ஆதி தமிழர் பேரவை, அகில இந்திய வல்லரசு பார்வார்டு பிளாக், கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கம், மாவீரன் மஞ்சள் படை, முக்குலத்தோர் புலிப்படை, மக்கள் விடுதலைக் கட்சி ஆம்ஆத்மி கட்சி, யாதவ மக்கள் இயக்கம், தேவேந்திரகுல மக்கள் முன்னேற்றப் பேரவை, ஆதி தமிழர் கட்சி மற்றும் கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த திமுக தலைமையிலான இந்தியா கூட்டணி கட்சிகளின் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர் கள், முன்னாள், இந்நாள் ஒன்றிய பெருந்தலைவர்கள், நகரமன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதி கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்ட ரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில் நுட்ப பிரிவு அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள் திமுக மற்றும் இந்தியா கூட்டணி கட்சிகளின் முன்னோடிகள், தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தல் 2024: இந்தியாக் கூட்டணிக்கு

# தமிழக உழவர் உழைப்பாளர் கட்சி - தமிழ்நாடு விவசாய சங்கம் ஆதரவு!

## மாநில தலைவர் எம்.வேல்முருகன் - கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதியை சந்தித்து தெரிவித்தார்!

சென்னை, மார்ச் 26- நாடாளுமன்றத் தேர்தல் - 2024-இல் ‘தமிழக உழவர் உழைப்பாளர் கட்சி மற்றும் தமிழ்நாடு விவசாய சங்கம்’ மாநில தலைவர் எம்.வேல் முருகன் மற்றும் நிர்வாகிகள் இந்தியா கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தனர்.

இது பற்றிய விவரம் வருமாறு:-


‘தமிழக உழவர் உழைப்பாளர் கட்சி மற்றும் தமிழ்நாடு விவசாய சங்கம்’ தலைவர் எம்.வேல்முருகன் மற்றும் நிர்வாகிகள், கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி அவர்களை சந்தித்து, நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணிக்கு ஆதரவு அளிப்பதாகவும், கூட்டணி கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெற தங்கள் கட்சி நிர்வாகிகள் பாடுபடுவதோடு, தேர்தல் பிரச்சா ரத்தில் ஈடுபடுவதாகவும் உறுதி அளித்தனர்.



உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க பொன்முடி அவர்கள் தலைமையில் விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்திலிருந்து ஊர்வலமாகச் சென்று விழுப்புரம் நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் துரை. ரவிக்குமார், விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வேட்பு மனுவை தாக்கல் செய்தார். மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம். எல். ஏ., மாநில மருத்துவ அணி இணைச் செயலாளர் டாக்டர் இரா.இலட்சுமணன், எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா. ஜனகராஜ், மாவட்ட துணை செயலாளர் தயா. இளந்திரையன், டி. என். முருகன், காங்கிரஸ் மாநில துணைத் தலைவர் குலாம் மொய்தீன், வி.சி.க. பொதுச் செயலாளர் சிந்தனைச் செல்வன் எம். எல். ஏ, வி.சி.க. மாநில துணை பொதுச் செயலாளர் வன்னியரசு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இராமமூர்த்தி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

அறமே உருவாம் முதல்வரின் முழக்கம்

# நாற்பதும் நமதே! நமதே! சூளுரை வெல்க!!



**த**மிழரே! தமிழரே! தலைவர்நம் முதல்வரின்
தன்மான வெற்றிசூழ் சங்கொலி நாதமே!
இமிழ்கடல் முழக்காய் எதிரொலித் திடுகவே!
ஏற்றொலி **நாற்பதே இடங்களும் நமதே! நமதே!**
(தமிழரே)

அறமுடை யாளர்கள் அடங்கிக் கிடப்பதோ?
அறிவுளார் அறியாமை அகற்றா திருப்பதோ?
திறமுடை யாளர்தாம் தெளிவின்றி நடப்பதோ?
தேர்தலித் தேர்தலில் சூளுரைத் தெழுகவே!
(தமிழரே)

பொய்மைப் புரட்டல்கள் குதூகல ஆட்டமோ?
கோடிகோ டிப்பணச் சொத்துகள் தேட்டமோ?
மெய்மைசூழ் மக்களே! உம்மனம் கொதிக்காதோ?
தலைகீழாய் மாற்றுக! துயர்ஆட்சி நீக்குக! (தமிழரே)

‘ஒரேஒரே’ என்றுநம் உரிமைகளைப் பறிப்பதோ!
‘ஊழல்ஊழல்’ என்றுதம் ஊழலை மறைப்பதோ!
திராவிடநம் மாண்பாட்சியைச் சிறுமைவெறி வெல்லவோ!
அடாதுசெய் ஆட்சிக்கே அடங்கியேநாம் தாழ்வதோ? (தமிழரே)

மக்களின் வெறுப்பாட்சி ஒன்றியத்தை ஆள்வதோ?
மாபெரும் சொத்தூழல் மறுபடியும் வெல்வதோ?
எக்களிக்கும் கொடுங்கோன்மை சுக்குநூறாய்ப் போகவே
**இதயஉதய சூரியனில் பதியவேவாக் களிப்பீரே!** (தமிழரே)

ஆளுக்கொரு திசைபார்த்தே ஆகாயம் குதிக்கிறார்
அறம்நீதித் தமிழ்நாட்டை ஆளுநரால் வதைக்கிறார்
தோளுக்குத் துணையாகும் தோழமையைச் சிகைக்கிறார்
சுதந்தீரம்தந்த **குடி’நேரு:** தொண்டினையே மறைக்கிறார் (தமிழரே)

அடக்குமுறை கட்டவிழ்த்தே ஆணவமும் சிரிப்பதோ?
அநீதியாக நீதிதன்னை அடக்கிடவே நினைப்பதோ?
விடவிதைகள் அமுதமன்றே வீதிதோறும் விதைப்பதோ?
வியன்தமிழ்எம் மக்களேநீர் விழிப்புணர்வு கொள்வீரே! (தமிழரே)

சட்டதிட்டம் காப்போரே சட்டமொழுங்கு மீறவோ?
சாதிமதத்தின் சார்பின்மை தனைஎள்ளி நகைப்பதோ?
கொட்டிமுழக்கும் தளபதியார் கொள்கைவெற்றி சூழட்டும்!
கோடிகோடி ஒன்றியத்தின் நாட்டுமக்கள் வாழட்டும்! (தமிழரே)


பாடுபடும் ஏழைகளின் பாங்காளர் முதல்வரே
பைந்தமிழர் பேருழைப்புப் பரிதியும்நம் முதல்வரே
ஈடுஇணை இல்லாத நாடுதமிழ்த் தலைவரே!
எடுத்தூதே வெற்றிசங்கே! இமயமலை அதிரட்டும்! (தமிழரே)

முத்தமிழ்க் **கலைஞானி மகன்இஸ்டாலின்** முற்போக்குக் கூட்டணி
முதுதமிழ்நம் நாட்டினிலே முழுமையாக வெல்லட்டும்
ஒத்துரிமை மக்களாட்சி ஒன்றியத்தில் பூக்கட்டும்
விடிவுதமிழ் இனம்பெற்றே இந்தியத்தை ஆளட்டும் ! (தமிழரே)



– பெருங்கவிக்கோ
**வா.மு.சேதுராமன்**
உலக அமைப்பாளர்,
பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்

# நாடாளுமன்றத் தேர்தல் 2024! கழக வேட்பாளர்கள் வேட்பு மனு தாக்கல்!



இந்தியா கூட்டணி கட்சிகளின் சார்பில் காஞ்சிபுரம் (தனி) நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் தி.மு.கழக வெற்றி வேட்பாளர் க.செல்வம், காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்த பின்னர், வேட்பு மனு தாக்கல் செய்தார். அருகில் மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் தா.மோ.அன்பரசன், க.சுந்தர் எம்.எல்.ஏ., சட்டமன்ற உறுப்பினர்கள் சி.வி.எம்.பி.எழிலரசன், வரலட்சுமி மதுசூதனன் உள்ளிட்டோர் உள்ளனர்.



சேலம் நாடாளுமன்ற தொகுதி இந்தியா கூட்டணி தி.மு.க வேட்பாளர். டி. எம். செல்வகணபதி சேலம் நாடாளுமன்ற தொகுதி தேர்தல் அதிகாரி டாக்டர் பிருந்தா தேவியிடம் வேட்பு மனு தாக்கல்செய்தார். உடன் மத்திய மாவட்ட கழக செயலாளர். இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ., நாடாளுமன்ற உறுப்பினர். எஸ்.ஆர்.பார்த்திபன். காங்கிரஸ் ஏ.ஆர்.பி பாஸ்கர். மொழி அரசு (விடுதலை சிறுத்தைகள் கட்சி தெற்கு மாவட்ட செயலாளர்) ஆகியோர் இருந்தனர்.



பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதி தி.மு.க.வேட்பாளர் கே.என்.அருண் நேரு, பெரம்பலூர் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலரும் மாவட்ட ஆட்சித்தலைவருமான க.கற்பகத்திடம் வேட்பு மனுத் தாக்கல் செய்தார். பெரம்பலூர் மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், திருச்சி வடக்கு மாவட்டச் செயலாளர் ந.தியாகராஜன் எம்.எல்.ஏ., பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் ஆகியோர் உள்ளனர்.



திருவண்ணாமலை மாவட்டம் ஆட்சி தலைவர் அலுவலகத்தில் ஆரணி நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் எம்.எஸ்.தரணிவேந்தன் அவர்கள் வேட்புமனு தாக்கல் செய்த போது எடுத்த படம்... உடன் எஸ்.பிரசாத், டி.பம்.பீர்.முகமது, வளர்மதி சுரேஷ் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு நாடாளுமன்ற தொகுதி இந்தியா கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் கே.இ.பிரகாஷ் மாவட்ட தேர்தல் அதிகாரியும், மாவட்ட ஆட்சித் தலைவருமான ராஜகோபால் சுன்கரா அவர்களிடம் தனது வேட்பு மனுவினை தாக்கல் செய்தார். நிகழ்வில் மாவட்ட கழக துணை செயலாளர்கள் ஆ.செந்தில்குமார், க.சின்னையன், மாவட்ட கழக பொருளாளர் ப.க.பழனிசாமி, வழக்கறிஞர் மா.சு.ராதாகிருஷ்ணன் உடனிருந்தனர்.



இந்தியா கூட்டணி சார்பில் பொள்ளாச்சி நாடாளுமன்ற தொகுதி தி.மு.க. வேட்பாளர் ஈஸ்வரசாமி பொள்ளாச்சி சார் ஆட்சியர் அலுவலகத்தில் சப்கலெக்டரும் உதவி தேர்தல் நடத்தும் அதிகாரியுமான கேத்தரின் சரண்யாவிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார். உடன் தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் தளபதி முருகேசன்,தொ.அ.ரவி மற்றும் பத்மநாபன்,காங்கிரஸ் மாவட்ட செயலாளர் தென்னரசு, கொ.ம.தே.க. மாநில துணைப் பொதுச் செயலாளர் நித்தியானந்தன், திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்தர் ஆகியோர் உடன் இருந்தனர்.



இந்தியா கூட்டணி கட்சிகளின் சார்பில் திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் தி.மு.கழக வேட்பாளர் டி.ஆர்.பாலு அவர்கள், செங்கல்பட்டில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்த பின்னர், திறந்த ஜீப்பில் ஊர்வலமாகச் சென்று வேட்பு மனு தாக்கல் செய்தார். அருகில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, எஸ்.ஆர்.ராஜா, வரலட்சுமி மதுசூதனன், காரம்பாக்கம் கணபதி உள்ளிட்டோர் உள்ளனர்.

### கெஜ்ரிவால் கைதுக்கு கண்டனம் தெரிவித்து டெல்லியில் 31 ஆம் தேதி

# ‘இந்தியா’ கூட்டணியின் மெகா பொதுக்கூட்டம்!

## ஆம் ஆத்மி – காங்கிரஸ் கூட்டாக அறிவிப்பு!

**புதுடெல்லி, மார்ச் 25 -**

**டெல்லி ராம்லீலா மைதானத்தில் வருகிற 31 ஆம் தேதி இந்தியா கூட்ட ணியின் மெகா பொதுக் கூட்டம் நடைபெறுவதாக ஆம் ஆத்மி மற்றும் காங்கிரஸ் கட்சிகள் கூட் டாக அறிவித்து உள்ளன.**

நாடாளுமன்றத் தேர்தலில் மத்தியில் ஆளும் பா.ஜனதா வுக்கு எதிராக காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு எதிர்க்கட்சிகள் இணைந்து ‘இந்தியா’ என்ற பெயரில் கூட்டணி அமைத்து உள்ளன.

இந்த கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஆம் ஆத்மி ஒருங்கிணைப்பாளரும், டெல்லி முதலமைச்சருமான கெஜ்ரிவால் சமீபத்தில் கைது செய்யப்பட்டார். முன்னதாக கூட்டணியில் அங்கம் வகிக்கும் மற்றொரு முதலமைச்சருமான ஹேமந்த் சோரன் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் ஜனநாயகத்தைப் பாதுகாக்க வலியுறுத்தி ‘இந்தியா’ கூட்டணி கட்சிகள் சார்பில் டெல்லியில் வருகிற 31ஆம் தேதி மெகா பொதுக் கூட்டத்துக்கு ஏற் பாடு செய்யப்பட்டு இருப்பதாக ஆம் ஆத்மி மற்றும் காங்கிரஸ் கட்சிகள் நேற்று முன்தினம் கூட்டாக அறிவித்தன.

இது தொடர்பாக ஆம் ஆத்மி கட்சியின் டெல்லி மாநில ஒருங்கிணைப்பாளரும், மாநில மந்திரியுமான கோபால் ராய் கூறியதாவது: நாட்டில் ஜனநாயகம் ஆபத் தில் இருக்கிறது. நாட்டின் நலன்கள் மற்றும் ஜனநாய கத்தை பாதுகாக்க வேண்டும். இதற்காக இந்தியா கூட்டணி கட்சிகள் டெல்லி ராம் லீலா மைதானத்தில் 31ந் தேதி மெகா பொதுக் கூட்டம் நடத்துகின்றன. இதில் கூட்டணியின் முக்கிய தலைவர்கள் கலந்து கொள்கிறார்கள்.

டெல்லி முதல்மந்திரி கெஜ்ரிவாலின் கைது அரசி யல் சாசனத்தை மதிக்கும் மக்களிடம் கோபத்தை ஏற்படுத்தி இருக்கிறது. இது கெஜ்ரிவாலை பற்றியது மட்டுமல்ல, ஒட்டுமொத்த எதிர்க் கட்சிகளும் மிரட்டப்படுகின்றன.

எதிர்க்கட்சிகளை பணம் கொடுத்து விலைக்கு வாங்குகின்றனர், அல்லது அமலாக்கத்துறை மற்றும் சி.பி.ஐ.மூலம் மிரட்டுகின்றனர். இதற்கு அடிபணிய மறுப்பவர்கள் மீது பொய்யான வழக்குகளை போட்டு கைது செய்கின்றனர். ஹேமந்த் சோரன், கெஜ்ரி வாலை தொடர்ந்து மம்தா பானர்ஜி, தேஜஸ்வி யாதவ் ஆகியோர் மீதும் குறி வைக்கப் பட்டு உள்ளது. இந்தியா கூட்டணியைச் சேர்ந்த அனைத்து தலைவர்களும் பொய் வழக்குகளில் சிக்கியுள்ளனர். டெல்லியில் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட எம்.எல்.ஏ.க்கள், மந்திரிகள் கைது செய்யப்பட்டு உள்ளனர். கெஜ்ரிவாலின் குடும்பம் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டு இருக்கிறது. எங்கள் கட்சி அலுவலகத்துக்கு சீல் வைத்துள்ளனர்.

எனவே நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்க ஒட்டு மொத்த எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும்.

இவ்வாறு கோபால் ராய் கூறினார்.

இதைப்போல டெல்லி காங்கிரஸ் தலைவர் அரவிந்தர் சிங் லவ்லி கூறியதாவது:

நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்க் கட்சிகளுக்கு சமமான களம் வழங்கப்படவில்லை.காங்கிரஸ் கட்சியின் வங்கி கணக்கு முடக்கம், மாநில முதல்வர் கைது என எதிர்க்கட்சிகளை முடக்குகின்றனர்.

டெல்லியில் 31ஆம் தேதி நடைபெறும் மெகா பொதுக் கூட்டம் வெறும் ஒரு அரசி யல் கூட்டம் மட்டுமல்ல, மாறாக நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும், பா. ஜனதா தலைமையிலான ஒன்றிய அரசுக்கு எதிராக குரலை எழுப்பவும் விடுக்கும் அழைப்பும் ஆகும்.

ஜனநாயகம் ஆபத்தில் உள் ளது. எங்கள் தலைவர் ராகுல் காந்தி ஜனநாயகத்தைப் பாதுகாக்க போராடுகிறார். நாங்கள் முழு பலத்துடன் எங்களின் இந்தியா கூட்டணியுடன் நிற்கிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அமைத்துள்ள

# ‘இந்தியா’ கூட்டணிக்கு சோஷலிஸ்ட் கட்சி ஆதரவு!

## மாநிலத் தலைவர் தஞ்சை இளஞ்சிங்கம் அறிக்கை!

சென்னை, மார்ச் 26-

சோஷலிஸ்ட் கட்சி (இந்தியா) மாநிலத் தலைவர் தஞ்சை இளஞ்சிங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

இந்தியாவில் இன்று ஏற்பட்டுள்ள மிகப்பெரிய ஜனநாயகப் பேரிழப்பை மீட்க வேண்டிய கட்டாயம் ஒவ்வொரு இந்தியனுக்கும் உள்ள உரிமையாகும், இதனை கட்டியம் கூறுவது போல் அமைக்கப்பட்டது தான் ‘இந்தியா’ கூட்டணி, இந்தியாவில் ‘இந்தியா’ கூட்டணி என்பதில் விந்தை இல்லை. அதனால் அதிர்கிறது இந்தியா.

புள்ளி வைத்த இந்தியா என்று கேலி பேசுகின்றவர்களுக்கு ஒன்றைச் சொல்வோம். புள்ளி வைத்தால் தான் கோலம், புள்ளி வைத்தால்தான் இந்தியா. நேதாஜி அமைத்தது I.N.A. நாம் அமைத்தது I.N.D.I.A. புதிய வேண்டும். பதர்களால் கதறபவர்களுக்கு தமிழன் புள்ளி வைத்தால், கதை முடித்தான் என்று பொருள். தளபதி ஸ்டாலின் அவர்கள் இன்று இந்தியா I.N.D.I.A. படை அமைத்தார். சோஷலிஸ்ட் கட்சி (இந்தியா), இந்தியா கூட்டணியில் இணைந்து செயல்படுவும், முழு வீச்சில் பிரச்சாரம் செய்யவும் முடிவு செய்துள்ளோம் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### கடலூர் மாவட்ட தி.மு.க. சார்பில்

# ‘இந்தியா’ கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை! அமைச்சர் சி.வெ.கணேசன் முன்னிலை!

கடலூர், மார்ச் 26

கடலூர் மாவட்டம், தி.மு.க. தலைமையிலான ‘இந்தியா’ கூட்டணி கட்சி சார்பில், கடலூர், சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதி, மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், வடலூர் மங்கையர்க்கரசி திருமண மண்டபத்தில், (24.03.2024 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 3 மணியளவில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சரும், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளருமான எம். ஆர்கே. பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்றது.

தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சரும், மேற்கு மாவட்ட கழக செயலாளருமான சி.வெ.கணேசன் முன்னிலை வகித்தார்.

இதில் சட்டமன்ற உறுப்பினர்கள் சபா.இராசேந்திரன், கோ. ஐயப்பன், சிந்தனை செல்வன், கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி, தொகுதி பார்வையாளர்கள் அ.செ. பெருநற்கிள்ளி, சேதுமாதவன், சுபா.சந்திரசேகரன், செந்தமிழ்செல்வன், அங்கையற்கண்ணி, காமராஜ், எஸ்.ஏ.சி. சிவா,

மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.கி.சரவணன், பி.வி.பி. முத்துக்குமார், கலைச்செல்வன்,

மேயர் சுந்தரி ராஜா, தி.க பொதுச் செயலாளர் துரை சந்திரசேகரன்,பெரியார் செல்வம், மாவட்ட பொருளாளர் ஜி.தண்டபாணி, காங்கிரஸ் மாவட்டத் தலைவர்கள் திலகர், என்.வி.செந்தில்நாதன், தொகுதி பொறுப்பாளர் கே.ஐ.மணிரத்தினம், ஏ.எஸ். சந்திரசேகரன், ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் என்.ராமலிங்கம், ஏ.என்.குணசேகரன், பிச்சை, மாவட்ட துணை செயலாளர் மணிகண்டன், சி.பி.எம். மாவட்ட செயலாளர் மாதவன், செயற்குழு உறுப்பினர் ஆறுமுகம், சி.பி.ஐ. மாவட்ட செயலாளர் துரை,

மாதில நிர்வாக குழு உறுப்பினர் டி.மணிவாசகம், மாவட்டத் துணைச் செயலாளர் குளோப்,

வி.சி.க. நிர்வாகிகள் துணை மேயர் தாமரைசெல்வன், செந்தில், நீதிவள்ளல், மூவேந்தர் முன்னேற்ற கழகம் லிப்ரா நாராயணன், மணிகண்டன், இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் அப்துல் ரகுமான் ரப்பானி, சுக்கூர், மனிதநேய மக்கள் கட்சி முகமது, ஆரிஸ் அஸ்லாம்,

தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர் கட்சி சுப்புராயலு, மணிவேல், மனிதநேய ஜனநாயக கட்சி ஜாகிர் உசேன் மக்கள் நீதி மையம் விமல் ராஜ் ,

கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி சுப்புராயிலு, அகில இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பூராசாமி கஜேந்திரன் ஆம் ஆத்மி கட்சி தேவகுமார் ஞானராஜ்,

மாவட்ட துணை செயலாளர்கள் ஞானமுத்து, தணிகை செல்வம், ஆனந்தி,

ஒன்றிய கழக செயலாளர்கள் அ.முத்துசாமி, வி.சிவக்குமார், தங்க.ஆனந்தன், கே.ஆர்.ராயர், வி.கே.வெங்கட்ராமன், ஆர். நாராயணசாமி, பி.சுப்பிரமணியன், மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா, ஒன்றிய கழக செயலாளர் , தி.வேல்முருகன், பாவாடை கோவிந்தசாமி, பட்டூர் அமிர்தலிங்கம், ,

நகர கழக செயலாளர் க. இராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கே.பி.ஆர்.பாலமுருகன், பொ.புகழேந்தி, ஜேம்ஸ் விஜயராகவன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் ஜி.கார்த்திகேயன், எம்.எஸ்கணேஷ்குமார் உள்ளிட்ட அனைத்துக் கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

### கே.பவுல் - கி.கண்ணன் முன்னிலை! திருவொற்றியூர் மேற்கு

# 4, 6 வது வட்டங்களில் பாக முகவர்கள் கூட்டம்!

திருவொற்றியூர், மார்ச் 26

திராவிட நாயகர் கழகத் தலைவர் ஆணைக்கிணங்க 2024 நாடாளுமன்ற தேர்தல் பணிகள் குறித்த பாக முகவர்கள் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிவுரையின் பேரில், திருவொற்றியூர் மேற்கு பகுதி 4, 6 ஆகிய வட்டங்களில் 22 - 3- 2024 அன்று நடைபெற்றது.

பாகமுகவர்கள் பாக ஒருங்கிணைப்பாளர்கள் நிர்வாகிகள் கூட்டம் பகுதி கழக அறிவுறுத்தலின்படி வட்ட கழக செயலாளர்கள் கே.பவுல், கி.கண்ணன் ஆகியோர் முன்னிலையில் அந்தந்த வட்டங்களில் நடைபெற்றது.

மாநில ஆதிதிராவிட துணைச் செயலாளர் திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் மயிலை சி.தசரதன், திருவொற்றியூர் மேற்கு பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் ஆகியோர் பங்கேற்று ஆலோசனை வழங்கினார்கள்.

4-வது வட்ட கூட்டம் ராமகிருஷ்ணா நகர் 4-வது பிரதான சாலையில் உள்ள பகுதி கழக அலுவலகத்தில் மாலை 5.00 மணியளவில் வட்டக் கழக செயலாளர் கே. பவுல் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் பாக ஒருங்கிணைப்பாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள் ந. ராம்குமார், ஜி.தினேஷ் மற்றும் வட்ட கழக நிர்வாகிகள், ( BLA & 2 ) பாக முகவர்கள் பங்கேற்றனர்.

6-வது வட்டத்தில் 7-வது தெரு சரஸ்வதி நகர் சங்கத்தில் மாலை 6.30 மணியளவில் வட்ட கழக செயலாளர் கி.கண்ணன் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் பாக ஒருங்கிணைப்பாளர்கள், தொண்டர் அணி மாவட்ட அமைப்பாளர் ஆர். மோகனசுந்தரம், மாவட்ட பிரதிநிதி எஸ்.கணேஷ், வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் (BLA &2) பாக முகவர்கள் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் வரும் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் வட சென்னை நாடாளுமன்ற தொகுதியில் மீண்டும் இரண்டாம் முறையாக போட்டியிடும் வெற்றி வேட்பாளர் மருத்துவர் கலாநிதி வீராசாமி அவர்களை பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற ஆற்ற பணிகள் குறித்தும், பாக முகவர்களின் பணிகள் குறித்தும், தலைமை கழக அறிவுறுத்தலின்படி தொகுதி பொறுப்பாளர் தசரசதன் அவர்களும் பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர வை.ம.அருள்தா சன் அவர்களும் வட்டக் கழக செயலாளர்கள் உள்ளிட்டோர் பாக ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் பாக முகவர்களுக்கு ஆலோசனை வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் மாவட்ட பிரதிநிதி ந.ராம்குமார், பொன். கோ.விஜயன், விளையாட்டு அணி மாவட்ட துணை அமைப்பாளர் வை.ம.கண்ணதாசன், மீனவர் அணி மாவட்ட தலைவர் ஆர்.நவகுமார், எஸ். ராஜேஷ், பகுதி ஒருங்கிணைப்பாளர் தகவல் தொழில்நுட்ப அணி, ஆர்.நரேன்குமார், மு. பாபு, ஜெ.வி க்னேஷ் மற்றும் வட்டக்கழக நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் பங்கேற்றனர்.

## ஆரணி நாடாளுமன்றத் தொகுதி கழக வேட்பாளர் தரணிவேந்தனை ஆதரித்து

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் செய்யாறில் மக்களிடையே வாக்குச் சேகரிப்பு!



## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் வேட்பாளர்களை ஆதரித்து

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திண்டுக்கல் - மதுரையில் வாக்குச் சேகரிப்பு!







கழக இளைஞர் அணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திண்டுக்கல் மக்களவை தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் ஆர்.சச்சிதானந்தம் அவர்களை ஆதரித்து திண்டுக்கல் கிளாக் டவர் பகுதியில் – "அரிவாள் சுத்தியல் நட்சத்திரம்" சின்னத்திற்கு வாக்குச் சேகரித்தார்.







கழக இளைஞர் அணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மதுரை மக்களவைத் தொகுதியில் 'இந்தியா' கூட்டணியின் சார்பில் போட்டியிடும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வெற்றி வேட்பாளர் சு.வெங்கடேசன் அவர்களை ஆதரித்து ஊமச்சிகுளம், மதுரை கோ. புதூர் பகுதியில் வெள்ளமெனத் திரண்ட மக்களிடையே வாக்குச் சேகரித்த காட்சி!

## தலைவர் தலைமையில்

# ‘திராவிட மாடல்’ அரசு வெல்லட்டும்! பாசிசம் ஒழியட்டும்!

### காஞ்சிபுரம் அண்ணா இல்ல வருகைப் பதிவேட்டில் -

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சூளுரை வாசகம்!







காஞ்சிபுரம், மார்ச் 26-

கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் காஞ்சிபுரம் ‘அண்ணா இல்லத்தில்’ நேற்று மாலை, பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து வணங்கிய பின்னர், அங்கு வைக்கப் பட்டுள்ள வருகைப் பதிவேட்டில், “தலைவர் தலைமையில் திராவிட மாடல் அரசு வெல்லட்டும்! பாசிசம் ஒழியட்டும்!” எனும் எழுச்சிமிகு வாசகத்தை எழுதி, சூளுரைத்தார்.

இந்நிகழ்வின்போது-காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச்செயலாளர் -அமைச்சர்தா.மோ.அன்பரசன், தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர்எம்.எல்.ஏ., கழகமாணவரணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., காஞ்சிபுரம் நாடாளுமன்றத் தொகுதி கழக வேட்பாளர் க.செல்வம், கழக இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் ப.அப்துல்மாலிக் ஆகியோர் உடனிருந்தார்கள்.

அப்பதிவேட்டில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எழுதியதாவது:



Visitors Book

| Date | Visitors Name | Contact No. | E-mail / Address | Your Valuable Comments & Suggestions |
|---|---|---|---|---|
| 25/03/24. | உதயநிதி ஸ்டாலின் | | பேரறிஞர் அண்ணா பிறந்த காஞ்சி இல்லத்தில் இருந்து ‘மாநில உரிமைகளை மீட்க.. தலைவரின் குரல் [illegible] நாடாளுமன்ற பிரச்சாரப் பயணத்தை துவக்குவதில் பெருமை கொள்கிறோம். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் புகழ் [illegible] தலைவர் தலைமையில் திராவிட மாடல் அரசு வெல்லட்டும். பாசிசம் ஒழியட்டும். I BELONG TO THE DRAVIDIAN STOCK. | |

25/03/24.



தூத்துக்குடியில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் வீதிவீதியாக வாக்குச் சேகரித்தார். மாவட்டச் செயலாளர் – அமைச்சர் திருமதி. கீதா ஜீவன் உடனுள்ளார்.

## தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும்

# கனிமொழி கருணாநிதி இன்று வேட்புமனுத் தாக்கல்!

### திரளாகப் பங்கேற்குமாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கீதாஜீவன் அறிக்கை!

தூத்துக்குடி, மார்ச் 26-

‘இந்தியா’ கூட்டணி சார்பில் தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் கனிமொழி கருணாநிதி அவர்கள் இன்று (26.03.2024) செவ்வாய்க்கிழமை வேட்புமனுத் தாக்கல் செய்கிறார். அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்று தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் திருமதி.பி.கீதாஜீவன் அறிக்கை ஒன்றில் கேட்டுக்கொண்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-



நடைபெற இருக்கின்ற 2024 நாடாளுமன்றத் தேர்தலில் ‘இந்தியா’ கூட்டணி சார்பில் தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதியில் தி.மு.க வேட்பாளராக கனிமொழி கருணாநிதி அவர்கள் தி.மு.கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளார்.

தி.மு.க. வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள கனிமொழி கருணாநிதி அவர்கள் இன்று (26.03.2024 - செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணி அளவில் தூத்துக்குடி கலைஞர் அரங்கம் முன்பு உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலை முன்பிருந்து புறப்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வேட்புமனுத்தாக்கல் செய்ய இருக்கிறார்.

வேட்பு மனுத்தாக்கல் நிகழ்ச்சியில் தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று பெருந்திரளாகக் கலந்து கொள்ள அழைக்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




26 மார்ச் 2024

5ம் ஆண்டு நினைவஞ்சலி

ஒருங்கிணைந்த திருச்சி மாவட்ட முன்னாள் செயலாளரும், பெரம்பலூர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான

திருச்சி

Er. N. செல்வராஜ் B.E., MIE

நீங்கா நினைவுகளுடன்...

என்றும் உங்கள் நினைவில்

N.S. கலைராஜா B.E., MBA.,
NSK பில்டர்ஸ் (பி) லிமிடெட்

N.S. கருணைராஜா B.Tech., MBA.,
தலைமை செயற்குழு உறுப்பினர், திருச்சி வடக்கு மாவட்டம்



திருவண்ணாமலை நாடாளுமன்ற தொகுதி கழக வேட்பாளராக போட்டியிடும் சி.என்.அண்ணாதுரை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலுவை சந்தித்து வாழ்த்து பெற்று, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சி தலைவர் அலுவலகத்தில் வேட்புமனு தாக்கல் செய்தார். உடன் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி கூட்டணி இயக்கத்தை சார்ந்த செங்கம் குமார், எம்.சிவக்குமார், சி.நியூடன், இரா. ஸ்ரீதரன், பெ.சு.தி.சரவணன் எம்.எல்.ஏ. எஸ்.பன்னீர்செல்வம், பிரியாவிஜயரங்கன், ப.கார்த்திவேல்மாறன் உட்பட பலர் உள்ளனர்.



வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் தேர்தல் அதிகாரி – மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலெட்சுமியிடம் வேட்பு மனுதாக்கல் செய்தார். கழகப் பொதுச் செயலாளர் – நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் மற்றும் வேலூர் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ., மாவட்ட காங்கிரஸ் கட்சித் தலைவர் டீக்காராமன் உடன் உள்ளனர்.

### மத்திய சென்னைத் தொகுதி – சேப்பாக்கம் பகுதியில்

# வேட்பாளர் தயாநிதி மாறன் வட்டங்கள்தோறும் வீதி வீதியாக வாக்கு சேகரிக்கிறார்!

## மு.க. தமிழரசு – நே.சிற்றரசு –சி.எச்.சேகர் பங்கேற்பு! எஸ்.மதன்மோகன் அறிக்கை!

சென்னை, மார்ச் 26-

மத்திய சென்னை நாடாளுமன்ற தொகுதி சேப்பாக்கம் பகுதியில் இந்தியா கூட்டணி வேட்பாளர் தயாநிதி மாறன் எம்.பி. சேப்பாக்கம் பகுதியில் உள்ள அனைத்து வட்டங்களிலும் வீதி வீதியாக சென்று வாக்கு சேகரிக்கிறார் என்று பகுதிச் செயலாளர், மண்டலக் குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து எஸ்.மதன்மோகன் அறிக்கை வருமாறு:-

சென்னை மேற்கு மாவட்டம், சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் இந்தியா கூட்டணியின் மத்திய சென்னை நாடாளுமன்ற தொகுதியின் வேட்பாளர் தயாநிதிமாறன் எம்.பி. நாளை (27, மார்ச் 2024 புதன்கிழமை) மாலை 4.30 மணி அளவில் சேப்பாக்கம் பகுதி 62வது வட்டத்தில் அமைந்துள்ள ஐயா தெரு, பஜார் தெரு சந்திப்பில் வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சியை துவங்குகிறார்.

62வது வட்டம் : பஜார் தெரு, ரெக்ஸ் தெரு, பாலகிருஷ்ணன் தெரு, மங்கபதி தெரு, அக்ரஹாரம் தெரு.

62அ வட்டம் : நைனியப்பா தெரு, சுவாமி பண்டாரம் தெரு, கலவைத் தெரு, நாதமுனி தெரு, நயனியப்பா தெரு, குருவப்பா தெரு, ராஜகோபால் தெரு, சுங்குவார் அக்ரார் தெரு, சிங்கன செட்டி தெரு.

63வது வட்டம் : கரி மொய்தீன் தெரு, ஆதித்தனார் சாலை, காஞ்சிபுரம் பச்சையப்பன் தெரு, நாராயண நாயக்கன் தெரு, வீரபத்திர ஆச்சாரி தெரு, சைபுல் மில்க் தெரு, சவுத் கூவம் ஆறு சாலை.

63அ வட்டம் : ஜி.பி.ரோடு, பூபேகம் தெரு, எல்.ஜி.என். சாலை, வி.என். தாஸ் ரோடு, பிள்ளையார் கோயில் தெரு, அமீர் மஹால்.

115 வது வட்டம் : மீர் பக்ஷி அலி தெரு, மாணிக்க மேஸ்திரி தெரு, ஜே.ஜே. கான் ரோடு.

114 வது வட்டம் : பக்கீர் சாஹிப் தெரு, மேயர் சிட்டி பாபு தெரு, சின்னதம்பி தெரு, எல்லிஸ் ரோடு, அப்பாவூ தெரு, திருவல்லிக் கேணி நெடுஞ்சாலை.

114அ வட்டம் : தைப்புண் ஹெலிகான் தெரு, அருணாச்சலம் ரோடு, சி.என்.கே.ரோடு, மசூதி சந்து, ஓ.வி.எம்.தெரு, பெல்ஸ் ரோடு, நிறைவடையும் இடம்: லாக் நகர்.

மேற்கண்ட நிகழ்ச்சியில் மு.க.தமிழரசு, சென்னை மேற்கு மாவட்ட செயலாளரும், பணி குழு தலைவருமான நே.சிற்றரசு எம்.சி., தொகுதி தேர்தல் பொறுப்பாளர் சி.எச். சேகர் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

எனவே சேப்பாக்கம் பகுதிக்குட்பட்ட பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், வட்ட நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் BLA2 (பாக முகவர்கள்) BLC (பாக உறுப்பினர்கள்) கழகத் தோழர்கள் மற்றும் இந்தியா கூட்டணியின் தோழமைக் கட்சி நிர்வாகிகள் என அனைவரும் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்கு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிச் செயலாளர் - மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### சென்னை தென்மேற்கு மாவட்டம்

# மயிலையில் தமிழச்சி தங்கபாண்டியன் வீதி வீதியாக வாக்குச் சேகரிக்கிறார்!

## மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிக்கை!



சென்னை மார்ச் 26 -

சென்னை தென் மேற்கு மாவட்டம், மயிலை சட்டமன்றத் தொகுதி ( கிழக்கு - மேற்கு) யில் தென் சென்னை தொகுதி வேட்பாளர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. வீதி வீதியாக இன்று வாக்குச் சேகரிக்கிறார்.

இது குறித்து மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது: -

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளர் தமிழச்சி தங்கபாண்டியன் இன்று (26-03-2024) காலை 8.00 மணி அளவில் மயிலை கிழக்குபகுதி 171 வது வட்டத்தில் வாக்கு சேரிப்பைத் தொடங்கி மாதவநகர், ஆர்.கே.நகர், 2வது குறுக்கு தெரு வழியாக வள்ளீஸ்வரன் தோட்டம், ஆர்.கே.நகர் 4வது குறுக்கு தெரு, கோவிந்தசாமி நகர், கரிகாலன் தெரு வழியாக, கட்டபொம்மன் தெரு, காமராஜர்சாலை, சீனிவாச அவின்யூ ரோடு, ராஜா முத்தையாபுரம், குட்டிகிராமணி தெரு, கபாலி வனபோஜன தோட்டம், நாராயணசாமி தோட்டம் இரண்டாவது சாலையில் முடிவடைகிறது.

அதை தொடர்ந்து 171அ வட்டத்திலிருந்து எஸ்.கே.பி புரம் 1வது தெரு, 2வது தெரு, அன்னை தெராசா நகர், அன்னை சத்தியா நகர், கீரின்வேஸ் ரோடு, ஆர்.கே.மடம் சாலை, ராஜா தெரு, ராஜா கிராமணி தோட்டம், சாலையர் தெரு, காவலர் குடியிருப்பு, சீனிவாசபுரம் முடிவடைகிறது.

அதை தொடர்ந்து 126 வது வட்டம் பவானிகுப்பம் பகுதியில் புரப்பட்டு, நம்பிக்கை நகர், இராஜீவ் காந்தி நகர், முல்லைமாநகர் வழியாக போர்ஷேர் எஸ்டேட், கனகராய மயலயப்பன் தெரு, பெரிய பள்ளி தெரு, காரக்குட்டை அனைத்து தெருக்கள் பாரதி நகர், மாரதெரு, ஆன்டிமான்ய தோட்டம் வழியாக திருவள்ளுவர் பேட்டை, பெருமாள் கோவில் தோட்டம், வண்ணியம்பதி, எம்.ஜி.ஆர் சிலை அருகில் முடிவடைகிறது.

மீண்டும் மயிலை மேற்கு பகுதியில் மாலை 4 மணிக்கு 121அ வது வட்டம் கழகத்தில் ஆரம்பித்து புதுதெரு, பி.பி. ரோடு, 2 வது சந்து, 3வது சந்து, அவ்வை சண்முகம் சாலை, கோகுலம் காலனி, ரோட்டேரி நகர், கபாலி நகர், மாயாண்டி நகர், மெக்காபுரம், ராகவன் மெயின்தெரு, துலுக்காணம் தோட்டம், பி.எம்.தர்கா, கு.மா.வாரியம், இஸ்மாயில் மைதானம், ராஜசேகரன் தெரு, கந்தசாமி அவின்யூ, ராதாகிருஷ்ணன் 9வது தெரு முடிவடைகிறது.

அதைதொடர்ந்து 121 வது வட்டம் சிட்டி சென்டர் அருகில், நயினார் தெரு, கணேசபுரம், பாலகிருஷ்ணாதெரு, பிருந்தாவனம் தெரு, ராயப்பேட்டை தெரு, வீரபெருமாள் தெரு, பி.எஸ் சிவசாமி சாலை, சிதம்பரம்சாமி தெரு, அப்பர்சாமி தெரு, பாலூர் கன்னியப்பன் தெரு, பீமசேனா கார்டன் தெரு, திருவீதி அம்மன் தெருவில் முடிவடைகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### தலைமை எம்.சாமிகண்ணு: முன்னிலை மேயர் பிரியா – ப.தாயகம்கவி எம்.எல்.ஏ

# கழக வேட்பாளர் கலாநிதி வீராசாமியை ஆதரித்து செயல்வீரர்கள் கூட்டம்!

## அமைச்சர் பி.கே. சேகர் பாபு ஆலோசனை வழங்குகிறார்!

சென்னை,மார்ச்.26-

சென்னை கிழக்கு மாவட்டம், வடசென்னை நாடாளுமன்ற தொகுதி இந்தியா கூட்டணியின் கழக வேட்பாளர் டாக்டர் கலாநிதி வீராசாமி அறிமுக கூட்டம் திரு. வி.க.நகர் தெற்குப் பகுதிச் செயலாளர் எம்.சாமிகண்ணு தலைமையில் இன்று (26.03.2024 செவ்வாய்கிழமை) மாலை 5.00 மணிக்கு 29/4, குக்ஸ் சாலை, ஓட்டேரி (மேம்பாலம் அருகில்), சென்னை 12.-ல் இந்து சமய அறநிலையத்துறை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அமைச்சர் பி.கே. சேகர்பாபு வேட்பாளரை அறிமுகம் செய்து ஆலோசனை வழங்குகிறார்.

இதில் மேயர் பிரியா கழக துணை அமைப்பு செயலாளர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., யாழினி, புனிதவதி எத்திராசன் எம்.சி, இசட். ஆசாத் எம்.சி., பி.உதய சங்கர், டி.லோகேஷ், நா.துலுக்காணம், பி. ஜெ.துளசிங்கம், எம். பெரோஸ்கான், கா.ராஜ் முகமது, பாண்டுரங்கன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வட்ட கழக செயலாளர்கள் எம்.தமீம், டி.பொல்லு சுரேஷ், வி.கா.வெங்கடேசன், எஸ்.சசிக்குமார், எஸ். வெங்கடேசன், மாமன்ற உறுப்பினர்கள் தமிழ் செல்விசசிகுமார் எம்.சி, ரமணிலோகேஷ் எம்.சி, வழக்கறிஞர் எம்.சரவணன் எம்.சி., அம்பேத்வளவன் எம்.சி. ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

இதில் ஜெ.டில்லிபாபு எம்.சி., எல்.சுந்தர்ராஜன், த.கு.வெங்கடேஷ், வேம்புலி, சு.ஜீவன் எம்.சி., நா.உஷா ராணி, கே. கோதர் ஷா, வி.உதயகுமார், தளபதி பாண்டியன், ந.வாசுதேவன், எட்வின் ராஜ துரை மற்றும் இந்திய கூட்டணி கட்சி தோழர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

### சென்னை கிழக்கு மாவட்டம், வட சென்னை நாடாளுமன்ற தொகுதி

# இந்தியா கூட்டணி வேட்பாளர் டாக்டர் கலாநிதி வீராசாமியை ஆதரித்து கொளத்தூர், திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதிகளின் பகுதி செயலாளர்கள் ஆலோசனை கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்– அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டம், வடசென்னை நாடாளுமன்ற தொகுதி இந்தியா கூட்டணி வேட்பாளர் டாக்டர் கலாநிதி வீராசாமி அவர்களை ஆதரித்து கொளத்தூர், திரு வி க நகர் சட்டமன்ற தொகுதிகளின் பகுதிக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (26.03.2024 செவ்வாய்கிழமை) காலை 11.15 மணியளவில் சென்னை, ஓட்டேரி, எண்.7.செல்லப்பா தெரு என்ற விலாசத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மேற்கண்ட தொகுதிக்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள் தொகுதி பொறுப்பாளர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள்,மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: நாடாளுமன்ற தேர்தல்

அமைச்சர் **பி.கே. சேகர்பாபு**

செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.



திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட மதுரவாயல் சட்டமன்ற தொகுதி 148 வது வட்டத்தில் தேர்தல் பணிமனையினை வட்ட கழக செயலாளர் மேட்டுக்குப்பம் எஸ்.ரமேஷ்ராஜ் தலைமையில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினரும் பகுதி கழக செயலாளருமான காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. திறந்து வைத்து தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார். இதில் வடக்கு பகுதி செயலாளரும் மண்டல குழு தலைவருமான வே.ராஜன், மதுரவாயல் தெற்கு பகுதி துணை செயலாளர்கள் வே.மதியழகன், இரா.பால்பாண்டியன் மற்றும் காங்கிரஸ் பேரியக்கத்தின் வட்ட தலைவர் எல்.சீனிவாசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வட்ட செயலாளர் எம்.வெங்கட், விடுதலைசிறுத்தைகளின் கட்சி வட்ட செயலாளர் மா.சே.வேடியப்பன், முக்குலத்தோர் புலி படை கட்சியின் சென்னை மண்டல அமைப்பாளர் எம்.மூர்த்தி, தமிழ்நாடு விவசாய தொழிலாளர் கட்சியின் மாவட்ட இளைஞரணி தலைவர் எஸ். ஹரிஹரகுமரன் உள்பட கழக நிர்வாகிகள், தோழமைக் கட்சிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### பட்டூர் எஸ்.ஜெய்சங்கர் - ‘முரசொலி’ முகவர் எஸ்.ஜெய்கணேஷ் தாயார் - குன்றத்தூர் வடக்கு

# ஒன்றிய மகளிர் அணி துணை அமைப்பாளர் ராஜாமணி சகாதேவன் மறைவு!

## கழக நிர்வாகிகள் அஞ்சலி!



காஞ்சிபுரம், மார்ச் 26 -

குன்றத்தூர் வடக்கு ஒன்றிய மகளிர் அணி துணை அமைப்பாளரும், கழகத்திற்காக இரவு பகல் பாராமல் உழைத்த கழகத்தின் மூத்த நிர்வாகியும், கோவூர் கூட்டுறவு கடன் சங்கச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜெய்சங்கர், ‘முரசொலி’ முகவர் எஸ். ஜெய்கணேஷ் ஆகியோரின் தாயாருமான திருமதி ராஜாமணி சகாதேவன் நேற்று (25.03.2024 - திங்கள்) காலை 8.20 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரது மறைவுச் செய்தி அறிந்து கழக நிர்வாகிகள் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று (25.03.2024- திங்கள்) மாலை 4.30 மணி யளவில் பெரிய பணிச்சேரியில் உள்ள அன்னாரது இல்லத்திலிருந்து புறப்பட்டு பெரிய பணிச்சேரி இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

### நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்கு பகுதி 152வது வட்ட தேர்தல் பணிக்குழு தலைவர், உறுப்பினர்கள் நியமனம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில், திருபெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்கு பகுதி, 152வது வட்டத்தில் தேர்தல் பணிகள் செவ்வனே நடைபெற்றிட, தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அடங்கிய “152வது வட்ட தேர்தல் பணிக்குழு” பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள். இவர்களுடன் 152வது வட்டத்தைச் சேர்ந்த கழகத் தோழர்கள், தேர்தல் பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“152வது வட்ட தேர்தல் பணிக்குழு”**

தேர்தல் பணிக்குழு தலைவர் -

**ஜெ.பாஸ்கரன் (அவைத்தலைவர்)**

தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் -

1. எஸ்.பாரதி அண்ணாவேலன் (பகுதி துணைச் செயலாளர்)
2. சி. நல்லதம்பி (அணி மாவட்ட துணை அமைப்பாளர்)
3. ஜி.மன்மதராஜ் (அணி மாவட்ட துணை அமைப்பாளர்)
4. இரா.கோதண்டன் (வட்ட துணைச் செயலாளர்)
5. எஸ்.பி.ஜி.பிரபு (வட்ட துணைச் செயலாளர்)
6. ஜி.ஜான்பீட்டர் (வட்டப் பொருளாளர்)
7. கே.பாண்டீஸ்வரி (வட்ட துணைச் செயலாளர்)
8. ஆர்விகே. தமிழ்மாறன் (பகுதி பிரதிநிதி)
9. டி.சத்தியசீலன் (பகுதி பிரதிநிதி)
10. வி.அற்புதநாதன் (பகுதி பிரதிநிதி)
11. எம்.ஆல்பர்ட் (பகுதி பிரதிநிதி)
12. அ.இராமு (பகுதி பிரதிநிதி)
13. கே.நாராயணன் (மாவட்ட முன்னாள் பிரதிநிதி)
14. கே.பீர்முகமது
15. டி.ராஜேஷ் (அணி பகுதி துணை அமைப்பாளர்)

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 25.3.2024

**தலைமைக் கழகம்**
தி.மு.க.



மத்திய சென்னை நாடாளுமன்ற – தொகுதி சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சேப்பாக்கம் பகுதிக்குட்பட்ட 114அ வட்ட தேர்தல் பணிமனையை மத்திய சென்னை நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடும் தயாநிதி மாறன் எம்.பி. திறந்து வைத்தார். உடன் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நிலை குழு தலைவர் பணிகள் நே. சிற்றரசு, பகுதி கழக செயலாளர் மண்டல குழு தலைவருமான எஸ். மதன்மோகன், தேர்தல் பொறுப்பாளர் சி. எச். சேகர், வட்டச் செயலாளர் தமீம் அன்சாரி மற்றும் வட்டக் கழக அனைத்து நிர்வாகிகள், கழகத் தோழர்கள் திரளாக பங்கேற்று சிறப்பித்தனர்.

# அமலாக்கத்துறையும், அடக்குமுறையும்! சீரழியும் மக்களாட்சி விழுமியங்கள்!

இந்திய அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்கிய அம்பேத்கர் அதனை நடைமுறைப்படுத்துவதில்தான் அதன் உயிர் இருக்கிறது என்று கூறினார். எந்த சட்டமுமே அதை தவறாகப் பயன்படுத்துபவர்களால் ஒரு மோசமான ஆயுதமாக மாற்றப்பட முடியும். அதிலும் கடுமையான குற்றங்களைத் தடுப்பதற்காக உருவாக்கப்படும் கடுமையான சட்டங்கள் ஒரு எதேச்சதிகார ஆட்சியின் கையில் மோசமான ஆயுதமாக மாறிவிடும்!

**சென்ற வாரம் தலைநகர் டெல்லியில் அதன் முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்டது நாடெங்கும் அதிர்ச்சி அலைகளை உருவாக்கியுள்ளது. ஆட்சியில் இருக்கும் மாநில முதல்வரை கைது செய்யுமளவு என்ன தீவிரமான ஒரு குற்றத்தை அவர் செய்துள்ளார் என்பது முதல் கேள்வி.**

அதிலும் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நேரத்தில் டெல்லி, பஞ்சாப் ஆகிய இரு மாநிலங்களில் ஆட்சியிலுள்ள ஆம் ஆத்மி கட்சி, ஒன்றிய அரசில் ஆளும் கட்சியான பா.ஜ.க. கட்சிக்கு எதிரான கூட்டணியில் இடம் பெற்று தேர்தலைச் சந்திக்கவுள்ள நேரத்தில் அதன் தலைவரான அரவிந்த் கேஜ்ரிவாலை அவசரமாக கைது செய்ய வேண்டிய தேவை என்ன என்பதே அந்தக் கேள்வியின் முழு வடிவம்.

**அரசியல் உள்நோக்கம் காரணமாகவே பா.ஜ.க. அரசு அமலாக்கத்துறையைப் பயன்படுத்தி இந்த கைது நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது என்பதே அரசியல் நோக்கர்கள், சிந்தனையாளர்கள், எதிர்க்கட்சியினர் குற்றச்சாட்டாக உள்ளது. இதனை நாம் விரிவாக புரிந்துகொள்ள வேண்டும்.**

**மதுபான விற்பனைக் கொள்கை: வழக்கின் முன் வரலாறு!**



டெல்லியில் மதுபான விற்பனையை முறைப்படுத்த ஆம் ஆத்மி அரசு ஒரு புதிய சட்டத்தை 2021ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அறிமுகப்படுத்தியது. ஆளுநர் சக்சேனாவும் இதற்கு ஒப்புதல் அளித்தார். எதிர்க்கட்சிகள் ஆம் ஆத்மி அரசு டெல்லியில் மதுபானத்தை அளவுக்கதிகமாக ஊக்குவிப்பதாக குற்றம் சாட்டியதால் 2022 ஜூலை மாதம் அந்தச் சட்டம் திரும்பப் பெறப்பட்டது.

அதற்கு அடுத்த மாதம் இந்தச் சட்டத்தை உருவாக்கியதிலும், அமல்படுத்தியதிலும் பல முறைகேடுகள் நடந்திருப்பதாக சி.பி.ஐ., துணை முதல்வர் மனிஷ் சிசோதியா உட்பட பதினைந்து பேர் மீது வழக்குப் பதிவு செய்தது.

பல கட்ட விசாரணைகளுக்குப் பிறகு சி.பி.ஐ. 2023 பிப்ரவரி மாதம் மனிஷ் சிசோதியாவை கைது செய்தது. மார்ச் மாதம் அமலாக்கத்துறை அவரை மீண்டும் கைது செய்தது. மே மாதம் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது.

மனிஷ் சிசோதியாவுடன் சத்யேந்திர ஜெயின் என்ற மற்றோர் அமைச்சரும் கைது செய்யப்பட்டுள்ளார். தொடர்ந்து அமலாக்கத்துறை குற்றப்பத்திரிகைகளைத் தாக்கல் செய்து வருகிறது. அதனால் இரண்டு அமைச்சர்களுக்கும் பிணை மறுக்கப்பட்டு வருகிறது.

**கடந்த அக்டோபர் மாதம், மனிஷ் சிசோதியா எட்டு மாதங்கள் சிறையில் கழித்து விட்ட நிலையில் பிணை கோரி உச்ச நீதிமன்றத்தை நாடினார். அப்போது நீதிபதி கண்ணா அமலாக்கத்துறையை நோக்கி பல கேள்விகளை எழுப்பினார். மனிஷ் சிசோதியாவை குற்றம்சாட்ட வலுவான ஆதாரங்கள் உள்ளனவா என்று கேட்டார்.**


**மதுபான மொத்த விற்பனையாளர்கள் கொடுத்த**



**பணம் ஆம் ஆத்மி கட்சியின் கோவா தேர்தல் செலவுக்குப் பயன்பட்டது என்பதை எப்படி நிரூபிப்பீர்கள் என்று கேட்டார். அப்படிச் செய்திருந்தால் கட்சி குற்றவாளியா, மனிஷ் சிசோதியா குற்றவாளியா என்றும் கேட்டார்.**

இப்படியெல்லாம் பல ஐயங்களை ஏற்படுத்தினாலும் மனிஷ் சிசோதியாவுக்கு பிணை வழங்கப்படவில்லை. ஆறு மாதங்களுக்குள் வழக்கை நடத்தி முடிப்பதாகவும், அதற்கு மேல் தாமதமானால் மனிஷ் சிசோதியா மீண்டும் பிணை கோரலாம் என்றும் அமலாக்கத்துறை உறுதியளித்தது. அதன் பின் ஆறு மாதங்கள் கடந்து விட்டன. எந்த வழக்கும் நடக்கவில்லை; குற்றச்சாட்டும் நிரூபிக்கப்பட வில்லை.

**ராஜன் குறை கிருஷ்ணன்**
*பேராசிரியர்*
*அம்பேத்கர் பல்கலைக் கழகம், புதுடெல்லி.*



**அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு சம்மன்!**

ஓராண்டாக பிணை வழங்கப்படாமல் சிறையில் உள்ள முன்னாள் துணை முதல்வர் மனிஷ் சிசோதியாவுக்கு எதிராக சாட்சியங்களைச் சமர்ப்பித்து வழக்கில் தண்டனை வாங்கித் தரவில்லை அமலாக்கத்துறை. ஆனால், அதே வழக்கில் முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலை விசாரிக்க வேண்டும் என்று சம்மன் அனுப்பியது.

அரவிந்த் கெஜ்ரிவால் வழக்கு ஏற்கனவே நிலுவையில் இருப்பதால்தான் விசாரணைக்கு வர முடியாது என்று கூறி விட்டார். அவர் முதலில் குற்றப்பத்திரிகையில் சேர்க்கப்படவில்லை. மனிஷ் சிசோதியா ஆதாரங்களைக் கலைத்துவிடுவார் என்று கூறித்தான் பிணையின்றி ஓராண்டாக சிறையில் உள்ளார். கையூட்டாகப் பெற்ற பணம் கட்சி தேர்தலில் செலவழித்தது என்றால் அரவிந்த் கேஜ்ரிவால் அந்த ஆதாரங்களை அழிக்க மாட்டாரா, கலைக்க மாட்டாரா? அப்படியானால் ஒட்டு மொத்தமாக கட்சிக்காரர்கள் அனைவரையும் ஆதாரங்கள் கிடைக்கும் வரை சிறையில் அடைத்து விடுவார்களா?

**அப்ரூவர் சரத் ரெட்டி அம்பலமான கதை!**

அரபிந்தோ ஃபார்மா என்ற நிறுவனத்தின் இயக்




குநரான சரத் ரெட்டி என்பவர் 2022ஆம் ஆண்டு இதே மதுபான முறைகேடு வழக்கில் கைது செய்யப்பட்டார். 2023 ஜூலை மாதம் அப்ரூவராக மாறினார். அவர் ஒட்டுமொத்த ஊழல்/முறைகேட்டை விளக்குவார் என்பதால் அவருக்கு மன்னிப்பு வழங்க வேண்டும் என்று முறையிட்டது அமலாக்கத்துறை. அதன்படியே அவர் விடுவிக்கப்பட்டார். அவர் ஆம் ஆத்மி கட்சிக்குக் கொடுத்த நூறு கோடி ரூபாய் கோவா தேர்தலில் பயன்படுத்தப்பட்டது என்பதுதான் வழக்கு.

**கடந்த வாரம் தேர்தல் பத்திரங்கள் குறித்த முழு விவரங்களும் வெளியானபோதுதான் ஒரு திடுக்கிடும் தகவல் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. அது என்னவென்றால் அவர் கைதான உடன் ஐந்து கோடி ரூபாய்க்கான தேர்தல் பத்திரங்களை வாங்கி அவர் பா.ஜ.க.வுக்கு அளித்துள்ளார் என்பதுதான் அது. அது மட்டுமன்றி, அவர் மொத்தத்தில் 55 கோடி ரூபாய் பா.ஜ.க.வுக்கு நன்கொடையாக தேர்தல் பத்திரங்கள் மூலம் கொடுத்துள்ளார் என்பதும் தெரியவந்துள்ளது.**

**ஆம் ஆத்மி கட்சிக்கு அவர் நூறு கோடி ரூபாய் கொடுத்தார் என்றே வைத்துக்கொண்டாலும், அது கோவா தேர்தலில் பயன்படுத்தப்பட்டது என்றே வைத்துக்கொண்டாலும், அது ஊழல் என்றால், கைது செய்யப்பட்ட ஒரு நபர் பா.ஜ.க. கட்சிக்குத் தேர்தல் பத்திரம் மூலம் நன்கொடை தருவது மட்டும் ஊழல் இல்லையா என்று கேட்கிறார்கள் ஆம் ஆத்மி கட்சியினர். அமைச்சர் ஆதிஷி பா.ஜ.க. தலைவர் நட்டா கைது செய்யப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார்.**

சரத் ரெட்டி மட்டுமல்லாமல், அமலாக்கத்துறை சோதனைக்கு உள்ளான பலரும், தேர்தல் பத்திரங்கள் மூலம் பா.ஜ.க.வுக்கு நன்கொடை கொடுத்துள்ளது அம்பலமாகியுள்ளது. இந்த விவரங்கள் தேர்தல் நேரத்தில் வெளிவந்து விடக் கூடாது என்றுதான் ஸ்டேட் பேங்க் ஆறு மாதங்கள் அவகாசம் கேட்டது. உச்ச நீதிமன்றம் கறாராக மறுத்துவிட்டதால் வேறு வழியில்லாமல் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமலாக்கத்துறை என்பதை ஆங்கிலத்தில் சுருக்கமாக ED என்று குறிப்பிடுகிறோம். அதன் விரிவு Enforcement Directorate என்பதாகும். அதாவது சட்டத்தை அமல்படுத்தும் துறை. அது இவ்வாறு ஒன்றிய ஆளும் கட்சி பா.ஜ.க.வுக்கு தேர்தல் நிதி வசூலிக்க உதவுவது போல இயங்குவதால் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி அதனை Extortion Directorate, அதாவது பணம் தண்டால் வாங்கும் துறை என்று அழைத்துள்ளார்.

**டி.ஆர்.எஸ் தலைவர் மகள் கவிதாவும் கைதானார்!**

ஆம் ஆத்மிக்கு நூறு கோடி ரூபாய் பணம் கொடுக்கப்பட்ட வழக்கில் தெலங்கானா ராஷ்டிர சமிதியின் தலைவர் சந்திரசேகர ராவின் மகள் கவிதாவும் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் ஆம் ஆத்மி தலைவர்களுடன் சேர்ந்து சதி செய்து, மதுபான கம்பெனிகளிடமிருந்து பணம் பெற்றுத் தருவதில் இடைத்தரகராகச் செயல்பட்டதாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

இப்படி முக்கியமான எதிர்க்கட்சி தலைவர்களையெல்லாம் கைது செய்ய போதிய ஆதாரம் இருக்கிறதா என்பது முக்கியமான கேள்வி. அப்படி ஆதாரம் இருந்தால் ஒரு வருடமாக சிறையில் இருக்கும் மனிஷ் சிசோதியா மற்றும் அவருடன் கைது செய்யப்பட்டவர்களுக்கு முதலில் தண்டனை வாங்கித் தரலாமே என்றுதான் பார்வையாளர்கள் கேட்கின்றனர்.

அமலாக்கத்துறை ஒரு தொழிலதிபரை கைது செய்து, அவரிடமிருந்து பா.ஜ.க. கட்சிக்கு தேர்தல் நன்கொடை கிடைத்தவுடன், அவரை அப்ரூவராக அறிவித்து விடுவித்துவிட்டது என்றால், அவர் வாக்குமூலத்தின் அடிப்படையில் மட்டும் எப்படி இத்தனை பேரை தண்டிக்க முடியும் என்ற ஐயம் ஏற்படுகிறது.

**எதிர்க்கட்சிகளை முடக்கும் தந்திரமா?**

மக்களாட்சியின் உயிர்மூச்சே தேர்தல்கள்தான். தேர்தலில் தங்களுக்கு சவாலாக உள்ள எதிர்க்கட்சியினர் மீது விசாரணை அமைப்புகளை ஏவுவது, அவர்களை கைது செய்வது போன்ற நடவடிக்கைகள் மூலம் அவர்களை தேர்தலில் ஆளும்கட்சிக்கு எதிராக பிரச்சாரம் செய்ய முடியாமல் தடுக்கிறார்களா என்ற கேள்வி தவிர்க்க முடியாதது.

விசாரணைக் கைதிகளாக பிணையின்றி சிறையில் வைக்கப்படும் பலர், பின்னர் குற்றம் நிரூபிக்கப்படாமல் விடுதலையாகும்போது அவர்கள் சிறையில் கழித்த காலத்துக்கு எந்த நஷ்டஈடும் வழங்கப்படுவதில்லை. அவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாக இருந்தால், அவர்கள் தங்கள் அரசியல் கடமையைச் செய்வதிலிருந்து தேவையின்றி தடுக்கப்படுகிறார்கள். மக்களின் வாக்குகளுக்குப் பொருளின்றிப் போகிறது.

**மக்களாட்சி என்பது மக்களின் ஆட்சியும், சட்டத்தின் ஆட்சியுமாகும். ஆனால், சட்டத்தின் பெயரால் மக்களின் பிரதிநிதிகளை முடக்குவதற்கு போதிய**



**ஆதாரமும், நியாயமும் வேண்டும். விசாரணை என்ற பெயரில் ஒரு துணை முதல்வரை, மக்கள் பிரதிநிதியை ஓராண்டுக் காலம் சிறையில் வைத்திருக்கிறது அமலாக்கத்துறை. உச்ச நீதிமன்றமே அவர் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபிக்க முடியுமா என்று ஐயம் தெரிவித்துள்ளது.**

**அப்படி இருக்கையில் துணை முதல்வரும், அமைச்சர்களும், அதிகாரிகளும் ஏற்கனவே சிறையில் உள்ள நிலையில் முதலமைச்சரையும் கைது செய்ய வேண்டிய தேவை எப்படி ஏற்படுகிறது என்பது பெரும் புதிராக உள்ளது.**

அப்படியே அரவிந்த் கெஜ்ரிவால் மீது ஐயம் இருந்தாலும், இரண்டு மாதங்களில் தேர்தல் முடிந்த பிறகு அவரை விசாரிக்க முடியாதா, கைது செய்ய முடியாதா என்பதையும் சிந்திக்க வேண்டும். குற்றம் நடந்ததாகச் சொல்லப்படுவது இரண்டாண்டுகளுக்கு முன்பு. இத்தனை நாள் கைது செய்யாமல் இருந்தவர்கள் மேலும் இரண்டு மாதங்கள் காத்திருந்தால் என்ன பெரிய இழப்பு ஏற்பட்டு விடும்?

ஒருபுறம் பா.ஜ.க. 400 தொகுதிகளில் வெல்வோம் என்று அறுதியிட்டுக் கூறுகிறது. அது உண்



மையானால் ஏன் எதிர்க்கட்சித் தலைவர்களை தேர்தல் நேரத்தில் விசாரணை அமைப்புகள் மூலம் வேட்டையாட வேண்டும்? ஊடகவியலாளர் ராஜ்தீப் சர்தேசாயும் அதைத்தான் கேட்கிறார்.

ஒருவேளை தோற்றுவிடுவோம் என்ற அச்சத்தில்தான் இதையெல்லாம் செய்கிறதோ பா.ஜ.க. என்ற கேள்வியும் தவிர்க்க முடியாமல் எழுகிறது. மேற்கு வங்கத்தில் அதை வன்மையாக எதிர்த்துப் பேசும் மஹூவா மொய்த்ரா வீட்டில் சி.பி.ஐ மூலம் சோதனையிடுகிறது.

குற்றச்சாட்டுகள் எதுவாக இருந்தாலும், தேர்தல் நேரத்தில் விசாரணை அமைப்புகள் மூலம் எதிர்க்கட்சிகளை முடக்க நினைப்பது மக்களாட்சி படுகொலை என்றே கூற முடியும். இது போன்ற செயல்கள் தொடர்ந்தால் இந்தியக் கூட்டாட்சி குடியரசு பெரும் சீர்குலைவையே சந்திக்கும்.

அரும்பாடுபட்டு உருவாக்கியுள்ள மாபெரும் மக்களாட்சிக் குடியர சினை தனது குறுகிய நலன்களுக்காக பா.ஜ.க. பாழ்படுத்தி விடக்கூடாது! அரவிந்த் கெஜ்ரிவாலை விடுதலை செய்வதுடன் தேர்தல் நேரத்தில் எதிர்க்கட்சியினர் செயல்பாடுகளை முடக்கும் எல்லா நடவடிக்கைகளையும் கைவிட வேண்டும்!

நன்றி :
**'மின்னம்பலம்'**
இணையதளம்



தென்காசி நாடாளுமன்றத் தொகுதி தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவில், வாசுதேவநல்லூர் தொகுதிக்கு உட்பட்ட 'இந்தியா' கூட்டணி சார்பில் தென்காசி நாடாளுமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் மருத்துவர் ராணிஸ்ரீ குமார் அறிமுகக் கூட்டம் சங்கரன்கோவில் கலைஞர் திடல் முப்பிடாதியம்மன் கோவில் முன்பு தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியை நகரச் செயலாளர் பிரகாஷ் தொகுத்து வழங்கினார்.இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பங்கேற்று வேட்பாளரை அறிமுகம் செய்து வைத்து உரையாற்றினார்.உடன் தொகுதி பார்வையாளர்கள் நல்லசேதுபதி, இன்பா ஏ.என்.ரகு, ச.தங்கவேலு, சதன் திருமலை குமார் எம்.எல்.ஏ., கூட்டணி கட்சி நிர்வாகிகள் முத்துப்பாண்டி,சுதா, பட்டாணி, யாகூப், அஜ்மீர், லிங்கவளவன், ஆதவன் உள்பட பலர் உள்ளனர்.



கடலூர் நாடாளுமன்றத் தொகுதி பண்ருட்டி நகர, ஒன்றிய, மாவட்டக் கழக நிர்வாகிகளிடம் தேர்தல் பணி குறித்து ஆலோசனைக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் சி.வெ.கணேசன் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன், மாவட்ட துணைச் செயலாளர்கள் ஆனந்தி சரவணன், ஆர்.எஸ்.எம் தணிகை செல்வம், பண்ருட்டி நகரக் கழகச் செயலாளர் க.இராஜேந்திரன், அண்ணா கிராமம் ஒன்றியக் கழகச் செயலாளர் தலைமைச் செயற்குழு உறுப்பினர் வி.கே.வெங்கட்ராமன், பொதுக்குழு உறுப்பினர் என்.பலராமன் ஆகியோர் உள்ளனர்.



திண்டுக்கல் நாடாளுமன்றத் தொகுதியில், ‘இந்தியா’ கூட்டணியின் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர் சச்சிதானந்தம் மாவட்ட தேர்தல் அலுவலர் மு.ந.பூங்கொடியிடம் வேட்பு மனுதாக்கல் செய்தார். உடன் கழகத் துணைப் பொதுச் செயலாளர் – அமைச்சர் இ.பெரியசாமி, அமைச்சர் அர.சக்கரபாணி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் கே. பாலகிருஷ்ணன், கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் உள்ளனர்.



சிவகங்கை நாடாளுமன்றத் தொகுதியில் ‘இண்டியா’ கூட்டணி சார்பில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் கார்த்தி ப.சிதம்பரம் மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான திருமதி ஆஷாஅஜித்திடம் வேட்புமனுதாக்கல் செய்தார். உடன் அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டனர்.



இராமநாதபுரம் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர் நவாஸ் கனி ( இந்திய யூனியன் முஸ்லிம் லீக்), ஆட்சியர் விஷ்ணு சந்திரனிடம் வேட்பு மனுத்தாக்கல் செய்தார். உடன் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., சட்டமன்ற உறுப்பினர்கள் முருகேசன், ராம.கருமாணிக்கம் உடனிருந்தனர்.



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மதுரை நாடாளுமன்றத் தொகுதியில் ‘இந்தியா’ கூட்டணி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் சு.வெங்கடேசன், மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் வணிக வரித் துறை மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் தேர்தல் அலுவலர் சங்கீதாவிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார்.



விருதுநகர் நாடாளுமன்றத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் மாணிக் தாகூர் மாவட்ட ஆட்சியர் ஜெயசீலனிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார். இதில் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் மு.மணிமாறன், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், சாத்தூர் சட்ட மன்ற உறுப்பினர் ரெகுராமன், சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் அசோகன், விருதுநகர் மாவட்ட காங்கிரஸ் தலைவர் ராஜா சொக்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற தொகுதியில் திமுக தலைமையிலான இந்தியா கூட்டணி கட்சிகளின் சார்பில் போட்டியிடும் திமுக கட்சியின் வேட்பாளர் தே.மலையரசன் நேற்று 25.03.2024 திங்கள்கிழமை தனது வேட்பு மனுவை கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலருமான ஷ்ரவவன் குமார் ஜடாவத் அவர்களிடம் வழங்கினார். சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம்,காங்கிரஸ் கட்சி கள்ளக்குறிச்சி மாவட்ட செயலாளர் எஸ்.ஜெய்கணேஷ் உள்ளிட்டோர் உடன் கலந்து கொண்டனர்.

# பா.ஜ.க. ஊழல் பேர்வழிகளை ரெய்டு நடத்தி கைது செய்யுமா அமலாக்கப்பிரிவு?

**மனோ.தங்கராஜ்**, தமிழ்நாடு அமைச்சர்

எதிர்க்கட்சிகளை தேடித்தேடி கைது செய்யும் பா.ஜ.க. அரசின் அமலாக்கத்துறை (ED), ஊழலின் ஊற்றுக்கண்ணான பா.ஜ.க.வைச் சார்ந்த ஒருவரைக் கூட கைது செய்யாதது ஏன்?




**2019**இல் எடியூரப்பாவிடம் கைப்பற்றப்பட்ட முக்கிய ஆவணங்களில் அருண் ஜெட்லி, ராஜ்நாத் சிங், நிதின் கட்காரி, அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, பா.ஜ.க. மத்திய அலுவலக கணக்கு என பலருடன் 1800 கோடி ரூபாய் மதிப்பிலான பணப்பரிமாற்றம் நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டிருந்ததே, எடியூரப்பாவை அமலாக்கப் பிரிவு ரெய்டு நடத்தி கைது செய்யாதது ஏன்?




**கு**ஜராத்தில் மோடி ஆட்சியில் ரூ.750 கோடி ஊழலில் ஈடுபட்ட அமைச்சர் விபுல் சௌத்ரியை ரெய்டு நடத்தி கைது செய்யாதது ஏன்?




**ப**ல கோடி டெண்டர் ஊழல் வழக்கில் ஈடுபட்ட கர்நாடக பாஜக அமைச்சர் நேரு ஓலேகரை ரெய்டு நடத்தி கைது செய்யாதது ஏன்?




**40** பேர் பலி மற்றும் பல கோடி ஊழல் நடைபெற்ற மத்தியப் பிரதேச வியாபம் முறைகேட்டில் ஈடுபட்ட பா.ஜ.க. அமைச்சர் லக்ஷ்மிகாந்த் ஷர்மாவை 2019ல் சி.பி.ஐ நீதிமன்றம் விடுவித்தது. பின்பு கொரோனாவால் மரணமடைந்தார். முறைகேடு நடந்ததை நாடே அறியும். இந்த பணபரிமாற்றத்தை அமலாக்கப்பிரிவு விசாரிக்காதது ஏன்?




**எ**டியூரப்பா கொரோனா நேரத்தில் ரூ.40 ஆயிரம் கோடி ஊழல் செய்துள்ளதாக பா.ஜ.க. எம். எல்.ஏ. பாசன கவுடா குற்றஞ்சாட்டினாரே, அதை அமலாக்கப்பிரிவு ரெய்டு நடத்தி, அவரை கைது செய்யாதது ஏன்?




**2001**-ல் பாதுகாப்பு துறை தளவாடங்கள் வாங்குவதில் நடைபெற்ற ஊழலில் தொடர்புடைய பா.ஜ.க. தலைவர் பங்காரு லட்சுமணனை ரெய்டு நடத்தி கைது செய்யாதது ஏன்?




**பெ**ங்களூரு மெகாசிட்டி ஊழலில் ஈடுபட்ட கர்நாடக பா.ஜ.க. அமைச்சர் யோகேஷ்வரை ரெய்டு நடத்தி அவரை கைது செய்யாதது ஏன்?




**மோ**டி அமைச்சரவையில், குஜராத்தில் ரூ.400 கோடி மீன்வள ஒப்பந்த ஊழல் வழக்கில் ஈடுபட்ட அமைச்சர்கள் பர்ஷோத்தம் சோலங்கி & திலீப் சங்கனியை ரெய்டு நடத்தி அவர்களை கைது செய்யாதது ஏன்?




**ரூ.**103 கோடி வங்கி மோசடி வழக்கில் தொடர்புடைய மகாராஷ்டிரா பா.ஜ.க. தலைவர் மோகித் கம்போஜ்ஜை ரெய்டு நடத்தி அவரை கைது செய்யாதது ஏன்?




**ரூ.**18 கோடி சட்ட விரோத பண பரிமாற்றத்தில் ஈடுபட்ட கர்நாடக பா.ஜ.க. அமைச்சர் ஜனார்தனன் ரெட்டியை ரெய்டு நடத்தி அவரை கைது செய்யாதது ஏன்?




**ரூ.**2438 கோடி ஆருத்ரா நிதி மோசடி வழக்கில் ஈடுபட்ட பா.ஜ.க. நிர்வாகிகள் ஹரீஷ் மற்றும் ஆர்.கே. சுரேஷை ரெய்டு நடத்தி கைது செய்யாதது ஏன்?




**ரூ.**5000 கோடி நியோ மேக்ஸ் நிதி மோசடியில் ஈடுபட்ட மதுரை பா.ஜ.க. பிரமுகர் வீர சக்தியை ரெய்டு நடத்தி கைது செய்யாதது ஏன்?




**வி**க்ராந்த் போர்க் கப்பல் பெயரில் ரூ.57 கோடி பண மோசடியில் ஈடுபட்ட மகாராஷ்டிரா பாஜக தலைவர் கிரித் சோமயாவை ரெய்டு நடத்தி கைது செய்யாதது ஏன்?




**வா**ஜ்பாய் தலைமையிலான பா.ஜ.க. அமைச்சரவையில் மத்திய அமைச்சராக இருந்த திலீப் ரேய், ஜார்க்கண்ட் நிலக்கரி ஊழல் வழக்கில் பல கோடி மோசடியில் ஈடுபட்டாரே அம லாக்கப்பிரிவு ரெய்டு நடத்தி அவரை கைது செய்யாதது ஏன்?




**1** கி.மீ. சாலை அமைக்க ரூ.250 கோடி; சுங்கச்சாவடி ஊழல் ரூ.137 கோடி; ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் ரூ.22.44 கோடி ஊழல் இதில் சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சர் களை ரெய்டு நடத்தி கைது செய்யாதது ஏன்?




**ம**த்திய உள்துறை அமைச்சகம் ஊழலில் முதலிடம் பிடித்துள்ளதே. இதில் மத்திய அமைச்சருக்கு தொடர்பு இருக்கிறதா இல்லையா என்பதை ரெய்டு நடத்தி விசாரிக்காதது ஏன்?




**ரூ.** 526 கோடிக்கு வாங்க இருந்த ரபேல் விமானத்தை மோடி அரசு ரூ. 1,670 கோடிக்கு வாங்கியதே இதில் முறை கேட்டில் ஈடுபட்ட பா.ஜ.க. அமைச்சர் களை அமலாக்கப் பிரிவு ரெய்டு நடத்தி விசாரிக்காதது ஏன்?




**ரூ.**1.37 கோடி ஊழல் வழக்கில் ஈடுபட்ட மிசோரம் பா.ஜ.க. எம்.எல்.ஏ. புத்ததான் சக்மாவை ரெய்டு நடத்தி கைது செய்யாதது ஏன்?

**எதிர்க்கட்சி முதலமைச்சர்களான ஹேமந்த் சோரன், அரவிந்த் கெஜ்ரிவால் உள்ளிட்ட பலரையும் அமலாக்கத் துறை மற்றும் மத்திய முகமைகளை ஏவி சோதனைக்குள்ளாக்கி சிறையில் அடைத்துள்ளது மோடி அரசு. ஆனால் பா.ஜ.க.வில் உள்ள ஊழல் பேர்வழிகளையும் பா.ஜ.க.வில் இணைந்து கொண்ட ஊழல் பேர்வழிகளையும் அரிச்சந்திரன்கள் போல நடத்துகிறது மோடி அரசு.**

நன்றி:- **தீக்கதிர் 25-03-2024**

## இந்தியக் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர்

# இரா.முத்தரசன் தேர்தல் பிரச்சாரம்!



சென்னை, மார்ச் 26-

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு விடுத்துள்ள செய்தி அறிக்கை வருமாறு :-

நடைபெறும் நாடாளு மன்ற பொதுத் தேர்தலில் இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து - இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் 28.03.2024 ஆம் தேதி முதல் 17.04.2024 ஆம் தேதி வரை தமிழ்நாடு முழுவதும் வாக்கு சேகரிப்பு சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார்.

அவரது சுற்றுப் பயணம் விபரம் வருமாறு:-

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் தோழர். இரா.முத்தரசன் - தேர்தல் பரப்புரை பயணம் தேதி கிழமை தொகுதி

28.03.2024 வியாழன் பெரம்பலூர் - நாடாளு மன்ற தொகுதி, 29.03.2024 வெள்ளி அரியலூர், 30.03.2024 சனி, ஞாயிறு சென்னை, 31.03.2024 - 01.04.2024 திங்கள் (காலை) வேலூர் திங்கள் (மாலை) திருப்பத்தூர், 02.04.2024 செவ்வாய் கிருஷ்ணகிரி, 03.04.2024 புதன் தருமபுரி, 04.04.2024 வியாழன் சேலம், 05.04.2024 வெள்ளி திருவாரூர் - மன்னார்குடி, 06.04.2024 சனி திருச்சி, 07.04.2024 ஞாயிறு விழுப்புரம், 08.04.2024 திங்கள் சிதம்பரம், 09.04.2024 செவ்வாய் மயிலாடுதுறை, 10.04.2024 புதன் தஞ்சாவூர் - தெற்கு, 11.04.2024 வியாழன் நாகப்பட்டினம் தொகுதி, 12.04.2024 வெள்ளி திருப்பூர், 13.04.2024 சனி திண்டுக்கல், 14.04.2024 ஞாயிறு மதுரை, 15.04.2024 திங்கள் விருதுநகர், 16.04.2024 செவ்வாய் தூத்துக்குடி, 17.04.2024 புதன் நாகப்பட்டினம் தொகுதி,

மேற்கண்டவாறு இரா. முத்தரசன் தேர்தல் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறோம் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

## சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி ஏற்பாட்டில்

# பல்லாவரம் தொகுதி 'இந்தியா கூட்டணி'யின் தலைமை தேர்தல் பணிமனை!

### வேட்பாளர் டி.ஆர்.பாலு - அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைக்கின்றனர்!

சென்னை, மார்ச் 26 -

பல்லாவரம் சட்டமன்ற தொகுதி குரோம்பேட்டை பகுதியில் இந்தியா கூட்டணியின் தலைமை தேர்தல் பணிமனை திறப்பது குறித்து மாவட்டக் கழகத் துணைச் செயலாளரும் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி குரோம்பேட்டை பகுதியில் நாடாளுமன்றத் தேர்தலை ஒட்டி இந்தியா கூட்டணியின் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி தலைமை தேர்தல் அலுவலகம் 26 -3 -2014 செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணி அளவில் மாவட்டக் கழகச் செயலாளரும் சிறு குறு. மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் கழக வெற்றி வேட்பாளர் டி. ஆர். பாலு ஆகியோர் திறந்து வைக்கிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் மீ.அ. வைத்தியலிங்கம், எஸ். ஆர். ராஜா, ஆர். எஸ். செந்தில்குமார், மேயர் க. வசந்தகுமாரி, எம். யாக்கூப், மாவை மகேந்திரன், ஆர். வேல்முருகன், எஸ். நரசிம்மன், ஏ. ராஜ்குமார், எஸ். முகமது பேக், த. தமிழரசன், எஸ். கே. ஜாகிர் உசேன், பா. முத்தையா, தாம்பரம் முருகன், இ. இளமாறன், எஸ். லட்சுமணன், பம்மல் டி. கந்தசாமி, துணை மேயர் கோ. காமராஜ், மண்டல தலைவர்கள் இ. ஜோசப் அண்ணாதுரை, வே. கருணாநிதி, பகுதி கழகச் செயலாளர் த. ஜெயக்குமார், இ.எஸ். பெர்னாட் ஏ., கே. கருணாகரன், நரேஷ் கண்ணா, ஜி. கே. ரவி, கூட்டணி கட்சி சார்ந்த எஸ். முகமது நயினார், எம். கண்ணன், டி. கே. அசோகன், குரோம்பேட்டை நாசர் காரை செல்வராஜ், சீ.பா பொற்சழியன், பா இனியவளவன், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், கழக அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இந்தியா கூட்டணி கட்சிகளை சேர்ந்த வட்டக் கழக தலைவர்கள், செயலாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள் ஆகியோர் வருகை தந்து திறப்பு நிகழ்ச்சி கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

## நே. சிற்றரசு - மு.க.தமிழரசு - அன்பகம் கலை - நா. எழிலன் - கலை கதிரவன் பங்கேற்பு!

# 112, 109'அ' வட்டத்தில் தயாநிதி மாறனை ஆதரித்து வாக்கு சேகரிப்பு!

### பகுதிக் கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம் அறிக்கை!

சென்னை, மார்ச் 26-

ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம் அறிக்கை வருமாறு :-

மத்திய சென்னை தொகுதியில் 'இந்தியா' கூட்டணி சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் தயாநிதி மாறனை ஆதரித்து பகுதி கழகம் சார்பில் 112 வது வட்டத்தில் மு.க.தமிழரசு அவர்கள் இன்று (26.03.2024 - செவ்வாய்க்கிழமை) காலை 7 மணிக்கு தாஸ்புரம் பகுதியில் துவங்கி வீடு வீடாக சென்று வாக்கு சேகரிப்பு பணியில் ஈடுபடுகிறார். மேலும் 109 'அ' வட்டத்தில் மாலை 5 மணி அளவில் பஜனை கோவில் தெருவில் துவங்கி வீடு வீடாக சென்று வாக்கு சேகரிக்கிறார்.

வாக்கு சேகரிப்பு பணியில் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., கழக அமைப்பு இணை செயலாளர் அன்பகம் கலை, மருத்துவர் அணி செயலாளர் நா. எழிலன் எம்.எல்.ஏ., ஆயிரம் விளக்கு தொகுதி பொறுப்பாளர் மருத்துவர் கலை கதிரவன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் நுங்கை வி.எஸ்.ராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.டி.ஆர்.நாதன், டி.ஜோஸ்டானியல், மாவட்டக் கழக நிர்வாகிகள் த. விக்டர், ஆர்.என்.துரை, வி.எஸ். கலை, ஏ.சங்கீதா, ஜே.எஸ். அகஸ்டின்பாபு, பகுதி கழக நிர்வாகிகள்: அவைத் தலைவர் புவி.பாலாஜி, துணை செயலாளர்கள என்.பி. இதயத் பாஷா, ஸ்டெர்லிங் மோகன், ரா. பொன்னம்மாள், பொருளாளர் பா. கமலக்கண்ணன், வட்ட செயலாளர் வரதை த.பரி, ச.டேவிட் இன்பராஜ், க.சிட்டிபாபு, த.குணசேகர், கே.எஸ். தினேஷ் பிரபு, மு. மோகன்,

மாவட்ட பிரதிநிதிகள் அ.குப்பன், எஸ்.பார்த்திபன், த.ஐசென்ட், என்.இ. சரவணன், தட்சிணாமூர்த்தி, பா.சுரேஷ், எம். டி.ஆர்.புகழ், ஆர். சீனிவாசன், வி.என். பாபு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பா. பிரகாஷ், துணை அமைப்பாளர்கள் குட்டி, என்.மோகனவேல், பல்வேறு அணிகளுடைய அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் டி.எஸ்.ராஜா, எம்.டி.ஆர்.சாரதி, க.தங்கமணி, ஜே. இருதயநாதன், மு.சீனிவாசன், ஜி.வி.சரவணன், டி.செல்வி, ஜே.மீனாட்சி (எ) ஜோதி மீனா, தீபா சந்திரசேகர், எம்.ஏ.ஆரோன் பெலிக்ஸ், எம்.ஏ.ஜஸ்டின்ராஜ், எஸ். பிரசன்னா, வே. சுதாகர், க.யோகமூர்த்தி, த.அமரேசன், கே.கமலக்கண்ணன், திருமுருகன், பாகப் பொறுப்பாளர்கள் ச.ராசுக்குமார், பத்மநாபன், மு.ச.பரத்குமார், யமுனா வடிவேல், பத்மநாபன், மோகன் பாண்டியன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

மேலும் 112, வது வட்ட நிர்வாகிகள்: எஸ். மனோகரன், வி.பொன்சீலன், வி.வீரராகவன், எஸ். பொற்கொடி, வி.ராஜி, ப.சிவக்குமார், எச்.சக்கரவர்த்தி, ஜான்சன், பா. பாலாஜி, எல்.முருகன்,

109'அ' வட்ட நிர்வாகிகள் இரா.முத்துக்குமார், ஆ.விஜயகுமார், ஜி.கே.ராஜா, எஸ்.மாலா, வ.வாஞ்சிநாதன், ஆர்.நீலகண்டன், என்.எஸ்.சுப்பிரமணியன், ஆர்.சேகர், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், வட்ட நிர்வாகிகள், அனைத்து அணிகளுடைய பகுதி, வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பி.எல்.ஏ.2 (பாக முகவர்கள்), பி.எல்.சி. (பாக உறுப்பினர்கள்), கழகத் தோழர்கள், இந்திய கூட்டணியின் தோழமைக் கட்சி நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இவ்வாறு ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம் அறிக்கை விடுத்துள்ளார்.

## மு.க.தமிழரசு - நே.சிற்றரசு - அன்பகம் கலை - எழிலன் நாகநாதன் - கலை கதிரவன் பங்கேற்பு!

# ஆயிரம்விளக்கு 118 வது வட்டத்தில் தேர்தல் பணிமனை: தயாநிதி மாறன் திறப்பு!

### வட்டக் கழகச் செயலாளர் கோ.யுவராஜ் அறிக்கை!

சென்னை, மார்ச். 26 -

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம்விளக்கு கிழக்குப் பகுதி, 118 வது வட்ட தி.மு.க. சார்பில் தேர்தல் பணிமனை திறப்பு விழா இன்று (26.03.2024 - செவ்வாய்க் கிழமை) மாலை 4.30 மணி அளவில் புதுப்பேட்டை பி.வி.கோயில் 2 வது தெரு கிளை கழக மன்றத்தில் தேர்தல் பணிமனையினை மதசார்பற்ற இந்தியா கூட்டணியின் வெற்றி வேட்பாளர் தயாநிதிமாறன் திறந்து வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் மு.க.தமிழரசு, சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, ஆயிரம்விளக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எழிலன் நாகநாதன், ஆயிரம்விளக்கு தொகுதி பார்வையாளர் கலை கதிரவன், ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் மா.பா. அன்புதுரை, தலைமை செயற்குழு உறுப்பினர் நுங்கை வி.எஸ்.ராஜ், பொதுக்குழு உறுப்பினர் ஜெ.நற்குண நாதன் ஆகியோர் வருகை தந்து சிறப்பிக்கின்றனர். எனவே மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளைச் சார்ந்த அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக உறுப்பினர்கள், பாக முகவர்கள் மற்றும் கழகத்தின் மூத்த முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்புக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு 118 வது வட்டக் கழகச் செயலாளர் கோ.யுவராஜ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் "இந்தியா" கூட்டணி கட்சி சார்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக

# திருவள்ளூர் நாடாளுமன்றத் தொகுதி செயல்வீரர்கள் - வேட்பாளர் அறிமுகக் கூட்டம்!

### மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!



2024 திருவள்ளூர் நாடாளுமன்றத் தொகுதி இந்தியா கூட்டணி கட்சியின் சார்பில் கழகத்தலைவர், முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட கழக வேட்பாளர் சசிகாந்த் செந்தில் அவர்களை ஆதரித்து சட்டமன்றத் தொகுதி வாரியாக அறிமுகப்படுத்திடும் கூட்டம் மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ தலைமையில் திருவள்ளூர் (தனி) நாடாளுமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர் இரா.கிரிராஜன் எம்.பி முன்னிலையில் கீழ்கண்ட நிகழ்ச்சி நிரலின்படி நடைபெற உள்ளது.

| நாள் | சட்டமன்ற தொகுதி | கூட்டம் நடைபெறும் நிகழ்விடம் |
|---|---|---|
| 26.03.2024 மாலை 4.00 மணி | ஆவடி | ஜெய கிரிஷ் மண்டபம், பட்டாபிராம் |
| 27.03.2024 மாலை 4.00 மணி | பூவிருந்தவல்லி | சுந்தர் மஹால், பூவிருந்தவல்லி |

எனவே அந்தந்தத் தொகுதிகளுக்கு உட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், இந்தியா கூட்டணி தோழமை கட்சிகளான காங்கிரஸ், விசிக, சிபிஐ, சிபிஎம்,மதிமுக, கொ.ம.தே.க, இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக், மக்கள் நீதி மையம், மனிதநேய மக்கள் கட்சி, மனிதநேய ஜனநாயக கட்சி, தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி, சமத்துவ மக்கள் கழகம், தமிழக வாழ்வுரிமை கட்சி, திராவிடர் கழகம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் திமுக மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள் தலைமைக் கழக சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் பிஎல்ஏ 2, பிஎல்சி பாக ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோர் மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சிநிரலின்படி நடைபெற உள்ள வேட்பாளர் அறிமுக கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

**ஆவடி சா.மு.நாசர்,**

செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.

# சென்னை கிழக்கு மாவட்டம்

## மத்திய சென்னை, வடசென்னை, திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தேர்தல்-2024

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டம், மத்திய சென்னை, வடசென்னை, திருபெரும்புதூர் நாடாளுமன்ற தொகுதிகளில் **இந்தியா கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்கள் டி.ஆர்.பாலு, தயாநிதிமாறன், டாக்டர்.கலாநிதி வீராசாமி** ஆகியோரை ஆதரித்து தேர்தல் பணிமனை திறப்பு, செயல்வீரர்கள் கூட்டம், வாக்கு சேகரிப்பு பிரச்சாரங்கள் நடைபெறும் விவரம்:

| நாள் / நேரம் | தொகுதி | பொருள் | பகுதி / வட்டங்கள் |
|---|---|---|---|
| 28.03.2024 வியாழன் காலை 8.00 மணி முதல் | துறைமுகம் | பகுதி மற்றும் மாமன்ற வார்டுகளில் தேர்தல் பணிமனை திறப்பு | துறைமுகம் மேற்கு பகுதி மற்றும் 54, 57, 59 ஆகிய வார்டுகள் |
| 28.03.2024 வியாழன் மாலை 4.00 மணி முதல் | துறைமுகம் | பகுதி மற்றும் மாமன்ற வார்டுகளில் தேர்தல் பணிமனை திறப்பு | துறைமுகம் கிழக்கு பகுதி மற்றும் 55, 56, 60 ஆகிய வார்டுகள் |
| 28.03.2024 வியாழன் மாலை 6.30 மணி முதல் | துறைமுகம் | வாக்கு சேகரிப்பு பிரச்சாரம் | துறைமுகம் மேற்கு பகுதி |
| 29.03.2024 வெள்ளி காலை 8.00 மணி | கொளத்தூர் | மாமன்ற வார்டுகளில் தேர்தல் பணிமனை திறப்பு | கொளத்தூர் கிழக்கு பகுதி மற்றும் 66,67,68,70 ஆகிய வார்டுகள் |
| 29.03.2024 வெள்ளி காலை 9.30 மணி முதல் | கொளத்தூர் | மாமன்ற வார்டுகளில் தேர்தல் பணிமனை திறப்பு | கொளத்தூர் மேற்கு பகுதி மற்றும் 64,65,69 ஆகிய வார்டுகள் |
| 29.03.2024 வெள்ளி மாலை 4.00 மணி முதல் | திரு.வி.க.நகர் | பகுதி மற்றும் மாமன்ற வார்டுகளில் தேர்தல் பணிமனை திறப்பு | திரு.வி.க.நகர் வடக்கு பகுதி மற்றும் 71, 72, 74 ஆகிய வார்டுகள் |
| 29.03.2024 வெள்ளி மாலை 5.00 மணி முதல் | திரு.வி.க.நகர் | பகுதி மற்றும் மாமன்ற வார்டுகளில் தேர்தல் பணிமனை திறப்பு | திரு.வி.க.நகர் தெற்கு பகுதி மற்றும் 73, 75, 76 ஆகிய வார்டுகள் |
| 29.03.2024 வெள்ளி மாலை 6.30 மணி முதல் | துறைமுகம் | வாக்கு சேகரிப்பு பிரச்சாரம் | எல்லீஸ்புரம் துறைமுகம் மேற்கு பகுதி |
| 30.03.2024 சனிக்கிழமை காலை 8.00 மணி முதல் | எழும்பூர் | பகுதி மற்றும் மாமன்ற வார்டுகளில் தேர்தல் பணிமனை திறப்பு | எழும்பூர் வடக்கு பகுதி மற்றும் 77, 78, 99 ஆகிய வார்டுகள் |
| 30.03.2024 சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் | எழும்பூர் | பகுதி மற்றும் மாமன்ற வார்டுகளில் தேர்தல் பணிமனை திறப்பு | எழும்பூர் தெற்கு பகுதி மற்றும் 58, 61, 108 ஆகிய வார்டுகள் |
| 30.03.2024 சனிக்கிழமை மாலை 4.30 மணி முதல் | அம்பத்தூர் | செயல் வீரர்கள் கூட்டம் | அம்பத்தூர் சட்டமன்ற தொகுதி |
| 31.03.2024 ஞாயிறு காலை 8.00 மணி முதல் | வில்லிவாக்கம் | பகுதி மற்றும் மாமன்ற வார்டுகளில் தேர்தல் பணிமனை திறப்பு | வில்லிவாக்கம் கிழக்கு பகுதி மற்றும் 96, 97, 98 ஆகிய வார்டுகள் |
| 31.03.2024 ஞாயிறு காலை 9.30 மணி முதல் | வில்லிவாக்கம் | பகுதி மற்றும் மாமன்ற வார்டுகளில் தேர்தல் பணிமனை திறப்பு | வில்லிவாக்கம் மேற்கு பகுதி மற்றும் 94, 95, 104 ஆகிய வார்டுகள் |
| 31.03.2024 ஞாயிறு மாலை 4.00 மணி முதல் | எழும்பூர் | வாக்கு சேகரிப்பு பிரச்சாரம் | எழும்பூர் வடக்கு பகுதி |

மேற்கண்ட மத்திய சென்னை, வடசென்னை, திருபெரும்புதூர் நாடாளுமன்ற தொகுதிகளில் இந்தியா கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்கள் டி.ஆர்.பாலு, தயாநிதிமாறன், டாக்டர்.கலாநிதி வீராசாமி ஆகியோரை ஆதரித்து தேர்தல் பணிமனை திறப்பு, செயல்வீரர்கள் கூட்டம், வாக்கு சேகரிப்பு பிரச்சாரங்கள் நடைபெறும் கூட்டங்களில், இந்தியா கூட்டணி கட்சிகளான திமுக, காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மதிமுக, விடுதலை சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனிதநேய மக்கள் கட்சி, மக்கள் நீதி மையம், திராவிடர் கழகம், தமிழக வாழ்வுரிமைக் கட்சி, மனிதநேய ஜனநாயக கட்சி, திராவிட இயக்க தமிழர் பேரவை, ஆம் ஆத்மி, சமத்துவ மக்கள் கழகம் ஆகிய கட்சிகளின் வட்டச் செயலாளர்கள்/தலைவர்கள், பகுதி செயலாளர்கள்/தலைவர்கள், வட்டசெயலாளர்கள்/தலைவர்கள், BLA2க்கள், BLCக்கள், செயல் வீரர்கள், முன்னணியினர் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**

செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

## தமிழச்சி தங்கபாண்டியனை ஆதரித்து

# மயிலை கிழக்குப் பகுதியில் வாக்கு சேகரிப்பு!

### மயிலை த.வேலு - எஸ்.முரளி - கழகத்தினர் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 26-

தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் "இந்தியா" கூட்டணி சார்பில் போட்டியிடும் தி.மு.க வேட்பாளர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியனை ஆதரித்து மயிலை கிழக்கு பகுதியில் இன்று (26.03.2024) காலை.7.30 மணி அளவில் பகுதி அலுவலகத்திலிருந்து பிரச்சாரம் துவங்குகின்றது.

மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி தலைமையில் தென்மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் மயிலைத.வேலு எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து பொதுமக்களிடத்தில் வாக்குகள் சேகரிக்கிறார்.

நந்தனம் மதி எம்.சி., துரை பார்த்திபன், பா. பொன்னுசாமி, கோ. கண்ணன் மா. பா. அன்பு, திருமதி கீதா முரளி எம்.சி. முன்னிலை வகிக்கின்றனர்.

தொடங்கும் வட்டங்கள்: 171 வது, 171 அ, 126வது ஆகிய வட்டங்களில் உள்ள பகுதியில் வீடு வீடாக பொதுமக்கள் இடத்தில் வாக்கு சேகரிக்கப்படுகிறது. எனவே மயிலை கிழக்குப் பகுதியில் உள்ள தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் மற்றும் மாநில மாவட்ட பகுதி நிர்வாகிகள் மூ.தம்பிதுரை,

வி.தசரதன், என்.அன்பழகன், செல்வி சௌந்தரராஜன், மந்தைவெளி அ.பாபு,

வேலு, சம்மந்தம், நந்தனம் வேதா மு.மலர், யோகேஷ், ரவி, டி.தினகரன், விஜய்வெங்கடேசன், இ.சத்தியமூர்த்தி, ஆர். பாலு, த.விக்னேஷ்வரன், தினேஷ் மாணிக்கம், எஸ். முனுசாமி, எல்.உதயகுமார், குமாரி, பி.எல்.தாஸ்,

ஜி.ஆர்.இராஜேந்திரன் ஆர்.எல்.வி.அசோக்குமார் பா.பாக்கியதாஸ் அகல்யா விஸ்வநாதன் ஜி.முருகையன், வட்டக் கழக செயலாளர்கள்: ஏ.தாஸ், அ.தவனேசன், வே.வெற்றி,

டி.ராஜவேலு சீ.கிருஷ்ணமூர்த்தி ராஜாசுரேஷ்குமார் அ.நாகராஜன் மு.இ.ஏழுமலை மூ.இராஜேந்திரன், விமலா கிருஷ்ணமூர்த்தி எம்.சி., ரேவதி எம்.சி., அமிர்தவர்ஷினி எம்.சி., மற்றும் மயிலை கிழக்கு பகுதிக்குட்பட்ட மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், வட்ட நிர்வாகிகள், மாவட்ட கழக , அனைத்து அணிகளின் நிர்வாகிகள் , பகுதி, வட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள், BLA2 (பாக முகவர்கள்) BLC (பாக உறுப்பினர்கள்), கழகத் தோழர்கள் மற்றும் இந்திய கூட்டணியின் தோழமைக் கட்சி நிர்வாகிகள் எனஅனைவரும் பெருந்திரளாகப் பங்கேற்கின்றனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.கழக மாவட்ட தகவல் தகவல் தொழில் நுட்ப அணியின் மாவட்ட அமைப்பாளர் ஜி.ரமேஷ் வரவேற்பில் மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகளின் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் மு. பகலவன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன்,எம்.எல்.ஏ., முன்னிலையில் திருவள்ளூர்(தனி) நாடாளுமன்ற தேர்தல் குறித்து நடைபெற்ற கூட்டத்தில் கும்மிடிப்பூண்டி தொகுதி பொறுப்பாளர் பி.டி.அரசகுமார், பொன்னேரி தொகுதி பொறுப்பாளர் அழகிரி சதாசிவம், சி.எச்.சேகர், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, மு.கதிரவன், எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், பா.செ.குணசேகரன், மு.மணிபாலன், ஆ.சத்தியவேல், நா. செல்வசேகரன், கா.சு.ஜெகதீசன், க.சு.தமிழ்உதயன், அணியின் துணை அமைப்பாளர் டி.ஜானகிராமன், கே.சரண்ராஜ், ஜெ.பிரதப் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## வடசென்னை நாடாளுமன்றத் தேர்தல் 2024

# சட்டமன்றத் தொகுதி வாரியாக தேர்தல் பணிக்குழு விவரம்!

### மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சென்னை வடக்கு மாவட்டத்தில் சட்டமன்ற தொகுதி வாரியாக இந்தியா கூட்டணிக் கட்சிகளின் செயல் வீரர்கள் கூட்டம் பின்வரும் தேதிகளில் நடைபெறுகிறது.

## வடசென்னை நாடாளுமன்றத் தேர்தல் - 2024 பெரம்பூர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிக்குழு விவரம்!

| வ. எண். | பொறுப்பாளர் பெயர் | பொறுப்பு | கட்சி | தொடர்பு எண். |
|---|---|---|---|---|
| 1 | ஆர்.டி.சேகர் MLA | தலைவர் | தி.மு.க. | 9444010104 |
| 2 | க.ஜெயராமன் | செயலாளர் | தி.மு.க. | 9003199567 |
| 3 | அ.முருகன் | செயலாளர் | தி.மு.க. | 9444033365 |
| 4 | இரா.கருணாநிதி | உறுப்பினர் | தி.மு.க. | 9176687861 |
| 5 | இரா.நரேந்திரன் | உறுப்பினர் | தி.மு.க. | 9840293949 |
| 6 | S.R.கமலக்கண்ணன் | உறுப்பினர் | தி.மு.க. | 9884597195 |
| 7 | V.தயாளன் | உறுப்பினர் | தி.மு.க. | 9444406759 |
| 8 | ப.மதிவாணன் | உறுப்பினர் | தி.மு.க. | 9444124232 |
| 9 | A.தமிழ்ச்செல்வன் | உறுப்பினர் | தி.மு.க. | 9840147169 |
| 10 | T.கமலக்கண்ணன் | உறுப்பினர் | தி.மு.க. | 9444543929 |
| 11 | க.அமுல் | உறுப்பினர் | தி.மு.க. | 9940325344 |
| 12 | G.ரஜினிசெல்வம் | உறுப்பினர் | காங்கிரஸ் | 6380499865 |
| 13 | T.A.பீர்முஹம்மது | உறுப்பினர் | காங்கிரஸ் | 9840416830 |
| 14 | த.கணபதி | உறுப்பினர் | காங்கிரஸ் | 9884999797 |
| 15 | ந.பாஸ்கர் | உறுப்பினர் | ம.தி.மு.க. | 9841015196 |
| 16 | M.விஜயகுமார் | உறுப்பினர் | CPM | 9043880435 |
| 17 | கோட்டிசுரேஷ் | உறுப்பினர் | CPI | 9884001213 |
| 18 | கல்தூண்ரவி | உறுப்பினர் | வி.சி.க. | 9884147687 |
| 19 | வியாசைகமருதின் | உறுப்பினர் | இ.யூ.மு.லீ | 9940336867 |
| 20 | P.பஷீர்அகம்மத் | உறுப்பினர் | ம.ம.க. | 9444335906 |
| 21 | வாசு | உறுப்பினர் | ஆம்.ஆத்மீ | 8148076087 |

## வடசென்னை நாடாளுமன்ற தேர்தல் - 2024 ஆர்.கே.நகர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிக்குழு விவரம்!

| வ. எண். | பொறுப்பாளர் பெயர் | பொறுப்பு | கட்சி | தொடர்பு எண். |
|---|---|---|---|---|
| 1 | J.J.எபினேசர் MLA | தலைவர் | தி.மு.க. | 9444658757 |
| 2 | இரா.லட்சுமணன் | செயலாளர் | தி.மு.க. | 9382824979 |
| 3 | ஜெபதாஸ்பாண்டியன் | செயலாளர் | தி.மு.க. | 9444120120 |
| 4 | இரா.வெற்றிவீரன் | உறுப்பினர் | தி.மு.க. | 9789921111 |
| 5 | S.K.வீராரெட்டி | உறுப்பினர் | காங்கிரஸ் | 9941454112 |
| 6 | வால்டாக்ஸ்ரமேஷ் | உறுப்பினர் | காங்கிரஸ் | 9841161928 |
| 7 | ஆர்.கே.நகர்சையத் | உறுப்பினர் | காங்கிரஸ் | 9841720514 |
| 8 | பாபா ஜெகன் | உறுப்பினர் | ம.தி.மு.க. | 9884978596 |
| 9 | V.ரவிக்குமார் | உறுப்பினர் | CPM | 9094927124 |
| 10 | M.ஜெய்சங்கர் | உறுப்பினர் | CPI | 9941394566 |
| 11 | யோகன் பாபு | உறுப்பினர் | வி.சி.க. | 9884801880 |
| 12 | நாகராசு | உறுப்பினர் | வி.சி.க. | 9710765337 |
| 13 | A.அல்லாபகஷ் | உறுப்பினர் | இ.யூ.மு.லீ | 9884811156 |
| 14 | J.அப்துல்காதர் | உறுப்பினர் | ம.ம.க. | 9941321252 |
| 15 | தர்மலிங்கம் | உறுப்பினர் | ஆம்.ஆத்மீ | 7305453899 |
| 16 | ராஜேஷ் | உறுப்பினர் | ச.ம.க. | 9840890316 |

## வடசென்னை நாடாளுமன்ற தேர்தல் - 2024 இராயபுரம் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிக்குழு விவரம்!

| வ. எண். | பொறுப்பாளர் பெயர் | பொறுப்பு | கட்சி | தொடர்பு எண். |
|---|---|---|---|---|
| 1 | ஐட்ரீம் R.மூர்த்தி, MLA | தலைவர் | தி.மு.க. | 9841119353 |
| 2 | வ.பெ.சுரேஷ் | செயலாளர் | தி.மு.க. | 9884076288 |
| 3 | இரா.செந்தில்குமார் | செயலாளர் | தி.மு.க. | 9840611150 |
| 4 | தா.இளையஅருணா | உறுப்பினர் | தி.மு.க. | 9444125005 |
| 5 | ந.மனோகரன் | உறுப்பினர் | தி.மு.க. | 9884290068 |
| 6 | P.T.பாண்டிச்செல்வம் | உறுப்பினர் | தி.மு.க. | 9444361136 |
| 7 | மு.கோபி | உறுப்பினர் | தி.மு.க. | 9444487884 |
| 8 | நாகம்மை | உறுப்பினர் | தி.மு.க. | 9790994670 |
| 9 | வே.சிவகுமார் | உறுப்பினர் | தி.மு.க. | 9444277232 |
| 10 | கி.ராஜேந்திரன் | உறுப்பினர் | தி.மு.க. | 9444111688 |
| 11 | ந.சண்முகம் | உறுப்பினர் | தி.மு.க. | 9840268991 |
| 12 | எம்.நஜிமா ஷெரிப் | உறுப்பினர் | காங்கிரஸ் | 8148062670 |
| 13 | சக்தி T.நாகேந்திரன் | உறுப்பினர் | காங்கிரஸ் | 8072370686 |
| 14 | A.J.காலனிசிவா | உறுப்பினர் | காங்கிரஸ் | 9790857676 |
| 15 | T.விஜயகணேசன் | உறுப்பினர் | ம.தி.மு.க. | 9841329421 |
| 16 | ஜீலானி | உறுப்பினர் | CPM | 9962370456 |
| 17 | S.பவானி | உறுப்பினர் | CPI | 807273258 |
| 18 | கோமகன் | உறுப்பினர் | வி.சி.க. | 9176356253 |
| 19 | தமீம் அன்சாரி | உறுப்பினர் | இ.யூ.மு.லீ | 9380171553 |
| 20 | முகம்மதுரஃபி | உறுப்பினர் | ம.ம.க. | 9884454545 |
| 21 | H.தஸ்தா பாய் | உறுப்பினர் | ம.ம.க. | 8072627487 |
| 22 | செல்வம் | உறுப்பினர் | ஆம்.ஆத்மீ | 9176418131 |

**ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.**

பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.




மத்திய சென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி நாடாளுமன்ற செயல்வீரர்கள் தேர்தல் ஆலோசனை கூட்டம் ராயப்பேட்டையில் உள்ள தனியார் மண்டபத்தில் நடந்தது. இதில் மத்திய சென்னை திமுக வேட்பாளர் தயாநிதி மாறன் பேசினார். உடன் மாவட்ட செயலாளர் சிற்றரசு, காங்கிரஸ் கட்சி மத்திய சென்னை மாவட்ட தலைவர் சிவ. ராஜசேகரன், பகுதி செயலாளர் மதன் மோகன், காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் இதயத்துல்லா, ஆனந்த சீனிவாசன், லட்சுமி ராமகிருஷ்ணன் ஆகியோர் உள்ளனர்.

### வேட்பாளர் டி.ஆர்.பாலு - அமைச்சர் தா.மோ.அன்பரசன் பங்கேற்பு!

# தாம்பரம் மாநகரம் இந்தியா கூட்டணி தலைமை அலுவலகம் திறப்பு!

### மாநகரச் செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!

தாம்பரம், மார்ச் 26 -

தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

இன்று (26-3- 2024) செவ்வாய்க் கிழமை மாலை 6:00 மணியளவில் மேற்கு தாம்பரம் காமராஜர் தெருவில் அமைக்கப் பட்டுள்ள தாம்பரம் மாநகர தலைமை அலுவலகத்தை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைக்க உள்ளார்.

இந்நிகழ்ச்சியில் திருப்பெரும்புதூர் தொகுதி இந்தியா கூட்டணி கழக வேட்பாளர் டி ஆர் பாலு, மி.அ.வைத்திலிங்கம், மாவட்ட கழக துணை செயலாளர் இ.கருணாநிதி எம் எல் ஏ, ஆர் எஸ் .செந்தில் குமார், மேயர் க.வசந்தகுமாரி, எம்.யாக்கூப் எம்சி, இரா.வேல் முருகன், ஏ.ராஜ்குமார், மா.வை. மாகேந்திரன், எஸ் .ஷேக், அப்துல் காதர், பொறியாளர் ப.சாமுவேல் எபினேசர், எஸ்.கே.ஜாகிர் உசேன், ஜி.காமராஜ், இரா.நரேஷ் கண்ணா, பி.சாதாசிவம், விஜயரங்கன், டி.காமராஜ், எஸ்.இந்திரன், ஆதிமாறன், எஸ்.சேகர், வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, த.ஜெயக்குமார், ஆ.நடராஜன், இரா.சுரேஷ், ஏ.கே.கருணாகரன், ஜி.கே. ரவி,க.தேவேந்திரன், ஆர். எஸ்.சங்கர், மு.ரஞ்சன், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பா.முத்தையன், பி.முருகன், இ.இளமாறன், பம்மல் டி.கந்தசாமி, அமைப்பு ஆறுமுகம்,என். கே.அக்பர், பழனி முருகன், எம்.ஜாகிர் உசேன், இளங்கோவன் மற்றும் கழக தோழர்கள் இந்தியா கூட்டணி அனைத்து கட்சி நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மாவட்ட மாநகர பகுதி வட்ட கழக நிர்வாகிகள் இளைஞர் அணி மாணவர் அணி மகளிர் அணி மற்றும் கழக தோழர்கள் பெருமளவில் கலந்துக் கொண்டு சிறப்பித்திட மாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

### நா.ராதாகிருஷ்ணன் தலைமையில் - தமிழச்சி தங்கபாண்டியனை ஆதரித்து

# சைதை 168 வது வட்ட செயல்வீரர்கள் கூட்டம்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் - இரா.துரைராஜ் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 26 -

168 -வது வட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம் இன்று நடைபெறுகிறது. இதில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்று ஆலோசனை வழங்குகிறார். இது குறித்து வட்டச் செயலாளர் நா.ராதா கிருஷ்ணன் விடுத்தள்ள வேண்டுகோள் வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி 168 வது வட்ட திமுக சார்பில் இன்று (26-3- 24 செவ்வாய்கிழமை) மாலை 5.30 மணிக்கு செயல்வீரர்கள் கூட்டம் எண். 16 காமாட்சி தெரு ஈக்காட்டுதாங்கல் முகவரியில் வட்டச் செயலாளர்நா.ராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் ஆர். அருணகிரி, டி.வி.நரசிம்மன், ஆர்.டி. மூர்த்தி, இரா.பால்ராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்க, பி.சென்னப்பன், ஈ.தனசேகரன், எம்.ராஜு, எஸ். அறிவானந்தம், எஸ். தேவி ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சைதை கிழக்கு பகுதி செயலாளர் இரா.துரைராஜ், 168 வது வார்டு மாமன்ற உறுப்பினர் தா.மோகன்குமார் ஆகியோர் ஆலோசனை வழங்குகின்றனர்

இந்நிகழ்ச்சியில் கே.எஸ் பாபு, எஸ்.எம். மோகன்தாஸ், ஆர். செல்வம், வ. கதிர்வேல், ஜெ.வி. பிரதாப், டி. குருமூர்த்தி, மு.செந்தில்வேல், ஆர்.விமலநாதன், ப.பரத்குமார், எம்.பாபு, சபரி, ஆர். குமார், ந.சுதாகர், கு.வீராசாமி, கே.ராஜாராம், ஆர். குப்பன், கு.மோகன், ம. ராஜ்குமார், எஸ்.பிரவின் பாபு, மற்றும் 168 வது வட்டத்தை சேர்ந்த வட்டகிளைக் கழக நிர்வாகிகள், மாவட்ட, பகுதி, வட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக பொறுப்பாளர்கள், பாக ஒருக்கிணைப்பாளர்கள், பாக முகவர்கள், களப்பணியாளர்கள் கலந்து கொள்கின்றனர், கழகமுன்னோடிகள் அனைவரும் பங்கேற்கும் படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் நா. ராதாகிருஷ்ணன் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

### மு.க. தமிழரசு - எழிலன் நாகநாதன் பங்கேற்பு!

# ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி தேர்தல் பணிமனை!

### தயாநிதிமாறன் திறக்கிறார்! மா.பா.அன்புதுரை அறிவிப்பு!

சென்னை, மார்ச் 26 -

ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதியில் தேர்தல் பணிமனைகளை மத்திய சென்னை நாடாளுமன்ற கழக வேட்பாளர் தயாநிதி மாறன் திறந்து வைக்கிறார், மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, மு.க தமிழரசு, சட்டமன்ற உறுப்பினர் எழிலன் நாகநாதன் பங்கேற்கின்றனர். பகுதிக் கழகச் செயலாளர் மா.பா.அன்புதுரை அறிவித்துள்ளார்.

சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி திமுக சார்பில் தேர்தல் பணிமனைகளை மத்திய சென்னை நாடாளுமன்ற கழக வெற்றி வேட்பாளர் தயாநிதி மாறன் திறந்து வைக்கிறார். இந்நிகழ்ச்சியில்

சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, மு.க.தமிழரசு , ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன், சேப்பாக்கம் பகுதி செயலாளர் மதன்மோகன் தலைமை செயற்குழு உறுப்பினர் நுங்கை வி.எஸ்.ராஜ், ஆயிரம் விளக்கு தொகுதி பார்வையாளர் கலை கதிரவன், பங்கேற்பு

1, ஆயிரம் விளக்கு தலைமை தேர்தல் பணிமனை தலைமை :- மா.பா.அன்புதுரை செயலாளர் ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி நாள் :- 26-3-2024 செவ்வாய்கிழமை மாலை:4:30 மணிக்கு இடம்:- நெ -20/32, புதுகுள தெரு நுங்கம்பாக்கம் சென்னை -34

2, 113 வது அ வட்ட தேர்தல் பணிமனை தலைமை :- டி.தேவராஜ் வட்ட செயலாளர் நாள் :- 26-3-2024 செவ்வாய்கிழமை மாலை:5:00 மணிக்கு இடம்:- தர்மாபுரம்

3, 113 வது ஆ வட்ட தேர்தல் பணிமனை தலைமை எம்.என்.விஷ்ணு வட்ட செயலாளர் நாள் :- 26-3-2024 செவ்வாய்கிழமை மாலை:5:15 மணிக்கு இடம்:-நெ -14/ஏ, இராமகாமத்துப்புரம் தி.நகர் சென்னை -17

4, 117 வது வட்ட தேர்தல் பணிமனை தலைமை :- எஸ்.சத்தியபெருமாள் நாள் :- 26-3-2024 செவ்வாய்கிழமை மாலை:5:30 மணிக்கு இடம்:- நெ -211, தியாகராய ரோடு சென்னை- 17

5, 118 வது அ வட்ட தேர்தல் பணிமனை தலைமை:- எஸ்.என். கே.ராமன் வட்ட செயலாளர் நாள் :- 26-3-2024 செவ்வாய்கிழமை மாலை:5:45 மணிக்கு இடம்:- 7/36, போயஸ் சாலை தேனாம்பேட்டை சென்னை- 18

6, 118 வது வட்ட தேர்தல் பணிமனை தலைமை:- கோ.யுவராஜ் வட்ட செயலாளர் நாள் :- 26-3-2024 செவ்வாய்கிழமை மாலை: 6;00 மணிக்கு இடம்:-நெ-1, பி.வி கோவில் 2 வது தெரு இராயபேட்டை

7, 111 வது வட்ட தேர்தல் பணிமனை, தலைமை:- ஆர்.பாபு வட்ட செயலாளர் நாள் :- 26-3-2024 செவ்வாய்கிழமை மாலை:6:15 மணிக்கு இடம்:- நெ-1, குலாம் மொய்தீன் தெரு ஆயிரம் விளக்கு சென்னை -86

8, 111 வது அ வட்ட தேர்தல் பணிமனை தலைமை:- எப்.பீட்டர் ஜான் வட்ட செயலாளர் நாள் :- 26-3-2024 செவ்வாய்கிழமை மாலை:6:30 மணிக்கு இடம்:-32,கமலா தெரு கிரீம்ஸ் ரோடு ஆயிரம்விளக்கு சென்னை-86

மேலும் இந்நிகழ்ச்சிகளில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஜெ. நற்குணநாதன், பா.இராபர்ட், வெற்றிச்செல்வி மாணிக்கம், மாவட்ட கழக நிர்வாகிகள் து.விக்டர், வி. எஸ்.கலைச்செல்வன், சி. சங்கீதா, ஜெ.எஸ். அகஸ்டின் பாபு , பகுதி கழக நிர்வாகிகள் எம்.ஆர்.ஜம்புலிங்கம், கோ.ரவி, மு. வெங்கடேசன், டி.வைலட் மேரி, எம்.ஜெயக்குமார், வட்டக் கழகச் செயலாளர் ஆர்.பாபு, எப்.பீட்டர் ஜான், பா.மகேஷ்,டி. தேவராஜ், எம்.என். விஷ்ணு, எஸ்.சத்தியபெருமாள், தேனா எல் .தவமணி, கோ.யுவராஜ், எஸ். என்.கே. ராமன், மாவட்ட அமைப்பாளர்கள் வழக்கறிஞர் பா.பிரகாஷ், துபாய் வி.ஆர். விஜய் திருமலை பொன்னுரங்கம், எஸ். எம்.கே. அண்ணா துரை,

மாமன்ற உறுப்பினர்கள் எஸ்.நந்தினி, பிரேமா சுரேஷ், மல்லிகா யுவராஜ், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எம்.எச். இம்ரான், என்.மோகன் வேல், வழக்கறிஞர் ரவிவர்மன், இ.ஏழுமலை, மகளிர் அணி லதாபிளாரன்ஸ், சுலோச்சனா ராமு, எம். பச்சையம்மாள், லில்லி சமாதானம் சரளாகுமாரி, ரேணுகா, பி.ராஜேஸ்வரி, டேனியல் , விநாயகம், ஜானி, எஸ்.ஆனந்தி, இ.சத்தியா, மாவட்ட பிரதிநிதிகள் ஏ.கண்ணன், ஜான்டிசில்வா, எஸ்.குணசேகர், ஸ்ரீதர், பாட்ஷா பாபு, பூகா.சாமிவேல் ஜெ.வரதன், ஏ.வி.இராமநாதன், எம்.வி.வினோத், டி.வேல்முருகன், எ.சிவலிங்கம், ஐடி விங் கே.யூ. சந்தோஷ் பாக ஒருங்கிணைப்பாளர்கள் எம்.சரவணன், பி.கே.ஆசைதம்பி, வழக்கறிஞர் ரவிவர்மன், ஹாக்கி சதீஷ், வழக்கறிஞர் எம்.விந்தியா, எம். மணி, எஸ்.டி.டி. மோகன், வாசுதேவன் எஸ்.ரமேஷ், டி.ஜெயக்குமார், மூ.பாண்டியன், பா. வினோத் குமார், கே.எச்.அப்சல், மற்றும் அனைத்து அணிகளின் மாவட்ட பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொள்வார்கள்.

### கன்னிகை ஜி- ஸ்டாலின் - ஏ.எம்.வி.பிரபாகரராஜா - க.தனசேகரன் - கே.கண்ணன் பங்கேற்பு!

# கலைஞர் நகர் 137- ‘ஆ’ வட்ட கழக - பாகத் தலைவர்கள் கூட்டம்!

### வட்டச் செயலாளர் அ.கதிரேசன் தலைமையில்

சென்னை, மார்ச் 26 -

கலைஞர் நகர் தெற்கு பகுதி 137 ஆ வட்ட கழக பாகத் தலைவர்கள் கூட்டம் இன்று (26-03-2024 செவ்வாய்க்கிழமை) மாலை 7:00 மணி அளவில் கலைஞர் நகர் தெற்கு பகுதி கழக அலுவலகத்தில் அவைத் தலைவர் என்.சக்கரவர்த்தி தலைமையில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் விருகம்பாக்கம்

தொகுதி பொறுப்பாளர் கன்னிகை ஜி ஸ்டாலின், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகராஜா, சென்னை மாநகராட்சி கணக்கு மற்றும் தணிக்கை குழு தலைவர் க.தனசேகரன், பகுதி கழக செயலாளர் கே.கண்ணன், பொதுக்குழு உறுப்பினர்கள் உ.துரைராஜ், பி.எஸ்.முருகேசன், மாவட்ட துணைச் செயலாளர் வாசுகி பாண்டியன், மாவட்ட அமைப்பாளர்கள் ஆர்.சசிகுமார், கனிமொழி தனசேகரன், நிஷா சையத், பகுதி கழக நிர்வாகிகள் எஸ்.உமாபதி, அஜந்தா எஸ்.ரவி, பே.தியாகு, அ.பாபு, மாவட்ட பிரதிநிதி என்.ரவி, வட்ட கழக நிர்வாகிகள் கே.தணி காசலம், ஜி.ராஜேஸ்வரி, டைகர் பழனி, வி.தனசேகர், என்.ஜெகதீசன், கே. சதீஷ், எஸ்.புகழ், நா.பாலா மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

இக்கூட்டத்தில் வட்டத்திற்குட்பட்ட, வட்ட கழக நிர்வாகிகள் பாகத் தலைவர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு 137 ஆ வட்டச் செயலாளர் அ.கதிரேசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

# நெல்லை மாவட்டம் - நாங்குநேரியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் உரைகேட்க அலை அலையாகத் திரண்ட மக்கள் காணீர்!











கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.3.2024) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரியில் நடைபெற்ற இந்தியா கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் கன்னியாகுமரி நாடாளுமன்றத் தொகுதியின் வேட்பாளர் விஜய் வசந்த் அவர்களையும், திருநெல்வேலியில் போட்டியிடும் வழக்கறிஞர் ராபர்ட் புரூஸ் அவர்களையும், விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் தாரகை கத்பெர்ட் அவர்களையும் அறிமுகப்படுத்தி இந்தியா கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில் அமைச்சர் பெருமக்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, மனோ தங்கராஜ், தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், நாடாளுமன்ற உறுப்பினர் ஞானதிரவியம், சட்டமன்ற உறுப்பினர்கள் அப்துல் வகாப், ரூபி மனோகரன், பிரின்ஸ், ராஜேஷ் குமார், மாவட்ட கழகச் செயலாளர்கள் ஆவுடையப்பன், மைதீன்கான், மகேஷ், ஜெயபாலன் மற்றும் இந்தியா கூட்டணி நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

## திராவிட இயக்க இதழ்கள் - தென்னகத் தலைவன்!



திராவிட இயக்க எழுத்தாளர்களில் ஒருவரான தினகரன் எனும் 'கயல்' தினகரன் அவர்களால் 1962- இல் தொடங்கி நடத்தப்பட்ட இதழ், 'தென்னகத் தலைவன்'. அதற்கு அவர்தான் ஆசிரியராக இருந்தார்.

'தி.மு.கழக வார ஏடு' என்ற அறிவிப்புடன் வெளிவந்த இந்த இதழின் முதல் இதழை, பேரறிஞர் அண்ணா அவர்கள் வெளியிட்டார்.

இந்த இதழுக்குத் தனியே அட்டைப் படம் இல்லை. இதழின் முகப்பிலேயே கட்டுரைகள் பிரசுரமாகி இருக்கின்றன. இதழின் தலைப்பில் அண்ணாவின் கோட்டோவியம் அமைந்திருந்தது. மேலும், 'தம்பி! உள்ள உயிர் ஒன்றுதான். அது போகப் போவதும் ஒரு தடவைதான். அது விடுதலைப் பணிக்குப் போவதிலேதான் நான் பெருமைப்படுகிறேன்' என்ற அண்ணாவின் கூற்று இடம்பெற்றுள்ளது. திராவிட இயக்கச் சிந்தனைகளைப் பறைசாற்றும் படைப்புகள், தலையங்கம், இலக்கியக் கட்டுரைகள், வெண்பா போட்டி, கேள்வி பதில் உள்ளிட்ட பல விஷயங்களைத் தாங்கி வந்தது இந்த இதழ்.

இந்த இதழைத்தான் பின்னாளில், கே.ஏ.மதியழகன் அவர்கள் பெற்று, முதலில் வார ஏடாகவும், பிறகு நாளேடாகவும் நடத்தினார்.

## ஃப்ளாஷ்பேக்



எஸ்.ராஜேந்திரன்



### விருந்தினர் விடுதி சந்திப்பு!

1995 -ஆம் ஆண்டு கழக இளைஞர் அணிச் செயலாளராக இருந்த அண்ணன் தளபதி அவர்கள், அரியலூர் மாவட்டத்திற்கு கழக கொடியேற்றும் நிகழ்வுக்காக வருகை தந்திருந்தார். அப்போது நான் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராக இருந்தேன். அ.தி.மு.க.வின் சர்வாதிகார ஆட்சியை விமர்சித்துப் பொதுக்கூட்டத்தில் அவர் உரையாற்றினார். இந்தக் கூட்டத்துக்கு முன் விருத்தாசலத்தில் உள்ள விருந்தினர் விடுதியில் தளபதி தங்கி இருந்த போது, அவரைச் சந்தித்து எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

**-எஸ்.ராஜேந்திரன்,**
**கை.களத்தூர் கிளைச் செயலாளர்,**
**பெரம்பலூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### அணிகள் உதயம்!

1980-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 2-ஆம் தேதி திருச்சியில் கலைஞர் தலைமையில் கழகத்தின் பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில், தி.மு.க சட்டத் திட்ட விதிகள் பிரிவு -9 ஐ திருத்தம் செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி, கழகத்தின் தொண்டர் அணி, இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, தொழிலாளர் அணி, விவசாயிகள் அணி, இலக்கிய அணி ஆகியவை முறைப்படி அமைக்கப்பட்டன.

## முதன் முதலில் 4

**ந.வினோத்குமார்**

**திராவிட இயக்க அடையாளங்களை, நடைமுறைகளைப் பற்றி விளக்கும் 'திராவிட மரபு' தொடர் இது...**

# மாநாடுகளும் குடும்பங்களும்!









*'தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, கட்சி மாநாடு என்றாலே அது திராவிட முன்னேற்றக் கழகம் நடத்துகின்ற மாநாடுதான். மற்றவை எல்லாம் பஞ்சாயத்துக் கூட்டம்' என்று சொல்லும் அளவுக்குத்தான். அளவிலும் கருத்திலும் மிகப் பிரமாண்டமானவை, நம் கழகம் நடத்தும் மாநாடுகளே.*

*தி.மு.க. நடத்திய முதல் மாநாடு, திருச்சியில் நடைபெற்றது. அது மாவட்ட மாநாடு. அந்த மாநாடே மாநில மாநாட்டுக்கு இணையான பிரமாண்டத்தோடு நடைபெற்றது. அது குறித்து, பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதியிருக்கும் இந்தச் சித்திரத்தைப் பாருங்கள்...*

**"மாவட்ட மாநாட்டுக்கான கொட்டகை அமைக்கப்பட்டுவிட்டது. மறுநாள் மாநாடு. முன்னாள் மாலை சென்று பார்க்கிறேன். பசியுடன் உள்ள பெரும்புலி தன் அகன்ற வாயைத் திறந்து கொண்டிருப்பது போல, கொட்டகை காட்சி அளிக்கிறது.**

**"சாம்பு""**

**"என்னண்ணா?"**

**"பந்தல்... கொட்டகை"**

**"அவசரத்தில் போட்டது. இவ்வளவுதான் முடிந்தது"**

**"இவ்வளவுதான் முடிந்ததா? என்ன விளையாடுகிறாய்? இவ்வளவு பெரிய கொட்டகையை ஏன் போட்டாய்? யார் போட சொன்னது? இவ்வளவு பெரிய கொட்டகைக்கு ஆட்கள் எங்கிருந்து கொண்டு வந்து குவிப்பது? நாளைக்கு இதிலே கால் பகுதிக்குக் கூட தோழர்கள் வருவார்களோ இல்லையோ? இவ்வளவும் நாளைக்கு காலியாக இருக்குமே! எப்படி அந்த அவமானத்தைத் தாங்குவது! என்ன வம்பு செய்துவிட்டாய் சாம்பு?"**

*ஆனால், அண்ணா பயந்தது போல் நடக்கவில்லை. மாறாக, மாநாட்டுப் பந்தலுக்கு அடங்காமல் கூட்டம் குவிந்தது. அந்த முதல் மாவட்ட மாநாடு மட்டுமல்ல, அதற்குப் பிறகு கழகம் நடத்திய ஒவ்வொரு மாநாட்டிலும் கூட்டம் அலைகடலெனத் திரண்டு கொண்டே இருக்கிறது. அதன் சமீபத்திய அலையைத்தான் இளைஞர் அணி இரண்டாவது மாநாட்டில் நாம் பார்த்தோம்.*

*இந்த மாநாடுகள் அனைத்திலும் 'உடன்பிறப்புகள்' தங்கள் குடும்பங்களுடன் கலந்துகொண்டனர். முன்பெல்லாம், மூன்று நான்கு நாட்களுக்கு மாநாடுகள் நடக்கும். அப்போதெல்லாம், ஒரு பக்கம் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளைத் தொட்டில் கட்டி தூங்க வைக்க, இன்னொருப் பக்கம் விடிய விடிய உணவு தயாராக, வேறொரு பக்கம், மாநாட்டு உரைகள் குறித்து விவாதங்கள் களைகட்ட, அந்த மாநாடுகளில் புதிய நண்பர்கள் கிடைத்து, தங்கள் வீட்டுப் பிள்ளைகளுக்கு வரன் கிடைத்து, பிறகு உறவாகி என எத்தனையோ குடும்பங்கள் கழகக் குடும்பங்களாகி இருக்கின்றன.*

*காலமும் சூழலும் மாறி வரும் இந்த நாட்களில், மாநாடுகள் நடைபெறும் நாட்கள் குறைந்திருக்கலாமே தவிர, மாநாட்டுக்கு வரும் குடும்பங்களின் எண்ணிக்கை குறையவில்லை. ஆமாம்... தி.மு.க. என்பது குடும்பங்களின் கட்சிதான்! அரசியல் மாநாடுகள் என்றால், அதில் கட்சிக்காரத் தொண்டர்கள் மட்டும்தான் கலந்துகொள்வார்கள் என்ற நிலையை மாற்றி, அவற்றைக் குடும்ப நிகழ்வுகளாக மாற்றியது என்கிற விதத்தில், கழகத்தை வீடுகளுக்குள் எடுத்துச் சென்ற அந்த மரபைத் தொடங்கியது தி.மு.க.தான்!*

...அடையாளம் அறிவோம்.

## பாசறை படிப்பறை

**கௌதம் ராஜ் 4**


**"புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்" என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# தீட்டாயிடுத்தா?

*கர்நாடக சங்கீதம் என்றாலே, ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர்தான் நினைவுக்கு வருவார்கள். அத்தகைய கர்நாடக சங்கீதத்துக்கு மெருகூட்டும் இசைக் கருவிகள், பல்வேறு சமூகத்தினரின் பங்களிப்போடு தயாரிக்கப்படுபவை. கர்நாடக சங்கீதத்தில் வீணை, வயலின், புல்லாங்குழல், நாதஸ்வரம், கடம் என பல்வேறு வாத்தியங்கள் இருந்தாலும், மிருதங்கம் தனிச்சிறப்புடையது. காரணம், அது தோல் வாத்தியம். மாட்டுத்தோல், ஆட்டுத்தோல் என இதன் மூலப்பொருட்கள் அனைத்தும் பார்ப்பனர்களால் தீண்டப்படாத பொருட்கள்.*

*மிருதங்கம் தயாரிப்பவர்கள் பெரும்பாலும் தலித் சமூகத்தைச் சேர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள். பின்னாளில் இவர்கள் காலனிய ஆதிக்கத்தின் காரணமாகவும், சாதிய ஒடுக்குமுறையின் காரணமாகவும் கிறிஸ்துவ மதத்துக்கு மாறினார்கள். அதில் ஒருவர்தான் செபாஸ்ட்டியன். அவரது குடும்பம் தஞ்சாவூரைப் பின்புலமாகக் கொண்டது. பின்னாளில் அவரது குடும்பம், மிருதங்கத் தயாரிப்பு சாம்ராஜ்ஜியமாக உருமாறியதால், இந்நூலின் பெயரும், SEBASTIAN & SONS: A BRIEF HISTORY OF MRDANGAM MAKERS என்றே அமைந்துள்ளது.*

*மிருதங்கம் தயாரிப்பவருக்கும்-வாசிப்பவருக்கும் இடையே இருந்த சாதிய முரண்பாடுகளை, பிற்காலத்தில் நகரமயமாதலாலும், நவீன மயத்தின் காரணமாகவும் அது எவ்வாறு மாற்றம் அடைந்தது என்பதையும் செபாஸ்ட்டியன் குடும்பத்தின் கதையோடு பிணைத்துள்ளார் நூலாசிரியர் 'சங்கீத கலாநிதி' டி.எம். கிருஷ்ணா. இந்த உற்பத்தி உறவு முறையில் பெரியார் கண்ட திராவிட இயக்கத்தின் தாக்கத்தையும் அவர் ஓர் இடத்தில் பதிவுசெய்கிறார்.*





*மிருதங்கத்தின் தயாரிப்பு முறை மிகவும் கடினமானது. மனித உழைப்பை உறிஞ்சி எடுக்கக் கூடியது. அதே சமயத்தில் கலை வேலைப்பாடுகளால் ஆனது. தரமான பலா மரக் கட்டைகளைச் சேகரித்தல், மாட்டுத்தோல் மற்றும் ஆட்டுத்தோல் பதப்படுத்தல், அவற்றை தோல் கயிற்றின் மூலம் இணைத்தல், பிறகு சத்தத்துக்கு ஏற்ப முறைப்படுத்துதல் எனச் சிக்கலான தயாரிப்பு முறையை வேண்டி நிற்கும் வாத்தியம் மிருதங்கம். இதைப் பற்றி மிக விரிவாகவும், களஆய்வுகளுடனும், துறைசார் நிபுணர்களுடைய நேர்காணல் களுடனும் இந்நூலில் கிருஷ்ணா பதிவு செய்துள்ளார்.*

*இந்நூலின் மூலம் மிருதங்கம் தயாரிக்கும் குடும்பங்களின் வரலாறும், அவர்கள் இந்தத் தொழிலில் அடைந்த சரிவுகளும், அவற்றிலிருந்து கற்ற பாடங்களும் அதேநேரத்தில் கர்நாடக சங்கீதத்தில் இருந்து இவர்கள் விலக்கி வைக்கப்பட்டுள்ளதையும் அறியலாம். குறிப்பாக, மிருதங்கம் தயாரிக்கும் தலித் கிறித்து வர்களின் வாழ்க்கைத் தரம் சாதி என்ற ஒற்றைக் காரணத்தால் பெரிய அளவில் பொருளாதார ரீதியில் மேன்மை பெறவில்லை.*

*'மிருதங்க வித்வான்' என கொடுக்கப்படும் அங்கீகாரம் அதனை வடிவமைக்கும் தயாரிப்பாளனுக்குக் கொடுக்கப் படுவதில்லை என்பதை வருத்தமாகப் பதிவு செய்கிறார் நூல் ஆசிரியர் டி.எம். கிருஷ்ணா. பிறப்பால் ஒரு பிராமணரான டி.எம்.கிருஷ்ணா, சொந்த சமூகத்தை விமர்சனபூர்வமாகவும் அணுகியுள்ளார். அவர் கொண்டுள்ள இந்தப் பக்குவம்தான் சாதி-மத ஆதிக்க சக்திகளால் அவர் எதிர்க்கப்படுவதற்கும் காரணமாக இருக்கிறது. இந்த நூல் காலச்சுவடு பதிப்பகத்தால் 'செபாஸ்டியன் குடும்பக் கலை' என்ற தலைப்பில் தமிழிலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.*

**பிறப்பால் ஒரு பிராமணரான டி.எம்.கிருஷ்ணா, சொந்த சமூகத்தை விமர்சனபூர்வமாகவும் அணுகியுள்ளார்.**


*பெரியாரைப் பற்றி கிருஷ்ணா பாடியதால் 'கர்நாடக சங்கீதத்தின் புனிதம் கெட்டுவிட்டது' என்று சொல்பவர்கள், மிருகத் தோலால் செய்யப்படும் மிருதங்கத்தை வாசிப்பதால், கர்நாடக சங்கீதம் தீட்டாகிவிட்டதா என்பதையும் சொல்ல வேண்டும். சொல்வார்களா..?*

,,,வாசிப்போம்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

429

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்





-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131